
BAWASARANA

SYDNEY MARCUS DIAS

தமிழாக்கம்

திக்குவல்லை கமால்



# தொடரும் உறவுகள்

சிட்னி மர்கஸ் டயஸ்

# தொடரும் உறவுகள்

**அறுவடை**- சிங்களத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவை

- குருதட்சணை - தெனகம சிரிவர்தன (2008)
- வெற்றியின் பங்காளிகள் - விமலதாஸ முதாகே (2009)
- குறும்புக்கார குரங்குக் குட்டி- டப்ளியு.டீ. மெடில்டா அதிகாரம் (2009)

# தொடரும் உறவுகள்

(சிறுகதைகள்)

சிங்கள மூலம்:

## சிட்னி மாகஸ் டயஸ்

தமிழாக்கம்:

## திக்குவல்லை கமால்

**வெளியீடு:**

**தோதென்ன வெளியீடு**

**உஸ்வெவ வீதி**

**ஆனமடுவ.**

**தொலைபேசி: 032-2263446**

| | |
|---|---|
| தொடரும் உறவுகள் | Thodarum Uravukal |
| சிட்னி மாகஸ் டயஸ் | Sydney Marcus Dais |
| முதல் பதிப்பு - 2009 | First Print- 2009 |
| தோதென்ன வெளியீடு | Thothanna Publications |
| பக்கம்: vi+113 | Page: vi+113 |
| மொழி பெயர்ப்பு:<br>திக்குவல்லை கமால் | Translated By:<br>Dickwelle Kamal |
| கணனி எழுத்தமைப்பு:<br>சோ. சாந்தகுமாரி | Type Setting:<br>S. Santhakumari |
| அச்சுப்பதிவு<br>ஜயன் பிரின்ட் கிராஃபிக்ஸ்<br>52 A/1 கலஹிடியாவ<br>கணேமுல்ல. | Printed By:<br>Jayan Print Graphics<br>52A/1, Galahitiyawa<br>Ganemulla. |
| வெளியீடு:<br>தோதென்ன வெளியீடு<br>உஸ்வெவ வீதி<br>ஆனமடுவ<br>இலங்கை. | Published By:<br>Thothanna Publication<br>Uswewa Road,<br>Anamaduva<br>Sri Lanka. |
| தொ.பேசி - 0322263446 | T.P: 0322263446 |

ISBN: 978-955-1848-27-9

## திறவு கோல்:

மூடிக் கிடக்கும் கதவுகளைத் திறந்துவிடும் ஒரு கைங்கரிய மாகவே மொழி பெயர்ப்பு அமைகிறது.

தேசிய ரீதியாக தமிழ்- சிங்கள மொழி படைப்பிலக்கியங்களை மொழி பெயர்த்து, பரவலாகப் பயில வேண்டுமென்ற தேவை வெகு வாக உணரப்பட்டுள்ள காலம் இது.

மனித உறவுக்கும் புரிந்துணர்வுக்கும் மொழி ஒரு தடையாக அமையாத சூழலில் தான் மனித நேயம் மலர முடியும். அதுவே தேசத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழி வகுக்கும்.

இந்த உயர் நோக்கத்தோடு செயற்படும் தோதென்ன வெளியீட டகம் பல்வேறு மொழி பெயர்ப்பு நூல்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது.

அந்த வரிசையில் கவனிப்புக்குரிய எழுத்தாளனாகிய சிட்னி மாகஸ் டயஸின் 'தொடரும் உறவுகள்' சிறுகதைத் தொகுதியை மொழி பெயர்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூல் தமிழுக்கு வளம் சேர்க்குமென்பது எனது நம்பிக்கை.

சம்பந்தப்பட்ட சகலருக்கும் நன்றி

இலக்கிய தாகமே இமய தாகம்.

திக்குவல்லை கமால்
2009.08.30

104- Atulugama,
Bandaragama- 12530,
Sri Lanka.
Email: Dickwelle Kamal@gmail.com.
T.P: 0716386955, 0382292118

## கதவுகள்


| | | |
|---|---|---|
| 01. | இரண்டு அம்மாக்கள் | 01 |
| 02. | பெரிய ஸேரின் தேர்தல் | 10 |
| 03. | லீலாவதி ரீச்சர் | 27 |
| 04. | தொடரும் உறவுகள் | 43 |
| 05. | பெரிய சுவாமி அவர்கள் | 52 |
| 06. | வகுப்பறை வழக்கு | 67 |
| 07 | தேசப்பற்றாளன் | 74 |
| 08. | பூங்கா காவலனின் காதல் கனவு | 88 |
| 09. | அர்ப்பணிப்பு | 95 |
| 10. | தேவாங்குக் குட்டி | 103 |

# இரண்டு அம்மாக்கள்

பலமாகக் கத்தியபடி அவள் எனது கைகளை அங்குமிங்குமாக அசைத்த போது நான் மிகுந்த சோர்வுடன் கண்விழித்தேன். கண்களைத் திறந்து மனைவியைப் பார்த்தேன். அவள் என்னைக் கோபத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். நேரம் கடந்தும் நான் தூங்குவதையிட்டுக் குறை கூறுவதாக நினைத்துப் பழிக்குப்பழி வாங்குமாப் போல் மீண்டும் உற்றுப் பார்த்தேன்.

''ஐயோ இதென்ன தொல்லை? உங்கள் வேலையால் நாங்க வீட்டை விட்டுப் போக வேண்டியிருக்கு. விலங்குச் சரணாலயமா இது? மேலே பார்த்தால் எலிகள் ஊஞ்சல் கட்டி ஆடிக் கொண்டிருக்கு. வீடு முழுவதும் பல்லியும் தவளைகளும் நீச்சலடிக்குது. வீட்டைச் சுற்றிக் கட்டாக்காலி நாய்கள், பூனைகளெல்லாம் பழக்கப்பட்டுப் போய்..... உங்களுக்கு ஒன்றும் கணக்கில்லை தான். தலையைப் புதைத்துக் கொண்டு தூங்கிறதல்லாமல்.......''

எனது அனுமானம் பிழைத்துப் போயிருந்தது. நடந்திருப்பது வேறொன்று. மனதில் வந்த கோபத்தோடு கத்தினேன்.

''என்ன இது..... காலமே என்ன நடந்து போச்சு?''

''என்ன நடந்து போச்சா....? என்ன நடந்திருகென்னு எழுந்து பாருங்கொ. பிள்ளை காலமே முற்றத்துக்கு இறங்கியது தான் தாமதம்..... பூனை மலத்தை மிதித்து..... சொல்லி வேலையில்லை. இன்னும் அழுத படிதான்..... சவக்காரமிட்டுத் தேய்த்துத் தேய்த்துக் கழுவி விட்டன். இன்னக்கி நான் உங்களுக்கு ஒன்று சொல்றன். மற்ற நாட்களில் தானே நேரமில்லை..... இன்று விடுமுறை நாள். இன்றைக்கு எங்காவது கொண்டு போய் விட்டிட்டு வராவிட்டால் நான் போய்விடுவேன். எனக்கு இந்த மிருகங்களோட இங்க இருக்க முடியாது.''

மனைவி அவ்வாறு கூறியபடி அறையிலிருந்து வெளியே சென்றாள். அவளது காலடி வேகத்திற்குச் சீமெந்துத் தளம் அதிர்ந்தது.

நான் சோம்பல் முறித்துக் கொண்டு கட்டிலிருந்து எழுந்தேன். பூனை மலப் பிரச்சினை தொடர்பாக மனைவியிடமிருந்து எந்த விடுவிப்பும் கிடைக்காது போலிருந்தது. அவளது இந்தத் தொந்தரவு இன்று நேற்றல்ல, பூனைக்குட்டிகள் பிறந்ததிலிருந்தே இப்படித்தான்.

குட்டி போட்ட பூனை வீட்டில் வளர்த்ததொன்றல்ல. அது எங்கிருந்தோ வந்து வீட்டைப் பழக்கமாக்கிக் கொண்டது.

''வீட்டைப் பழக்கமாக்கிக் கொள்ள விடாமல் நன்றாக நோக அடித்து விரட்டச் சொல்லி நான் எவ்வளவோ சொன்னேன். அது வீட்டுக்குப் பழகிக் குட்டி போடும் வரை ஒரு பிரச்சினையுமில்லாமல் இருந்தது. ஊரிலுள்ள நாய், பூனைகள் பராமரிப்பற்றுப் போகும் போது, இது அகதி முகாமாகி விடுகிறது. அக்கம் பக்க மனிதர்கள் அவர்கள் வீட்டிலுள்ள நாய், பூனைகள் குட்டி போடத் தயாராகும் போது விரட்டி விடுகிறார்கள். அவை இங்கே வந்து விடுகின்றன. ஏன்? நம்ம வீட்டுக்காரருக்குப் பொறுப்பில்லை. அவற்றின் கழிவுகளை இழுத்திழுத்து எனது உயிர் போகிறது. பிள்ளைகளுக்கு வெளியே இறங்க முடியாது. கால் வைக்குமிடமெல்லாம் பூனை மலம்.''

மனைவி கோபத்தில் வசைமாரி பொழிந்தாள். அவளோடு பிரச்சினைக்குப் போவதில் அர்த்தமில்லை. அவளது கோபத்துக்கு நியாயமான காரணமுண்டு.

காலை வேளையில் பூனை மலத்தை மிதித்துக் கொண்ட மகள், அதன் காரணமாக அம்மாவின் குற்றச்சாட்டுக்கு ஆளான என் மீது அனுதாபம் கொண்டு மெல்ல மெல்ல நெருங்கி வந்தாள்.

''பிள்ளையின் காலுக்கு நிறைய அழுக்கு மிதிபட்டதா?''

''ஓம் அப்பா...... நாற்றமென்றால்..... ஐயோ..... க்..... அம்மா சவர்க்காரமிட்டுத் தேய்த்து மீண்டும் சவர்க்காரமிட்டு கழுவிவிட்டாங்க......''

நான் மகள் மீது அனுதாபம் காட்டினேன். தூக்கி மடிமீது வைத்துக் கொண்டேன்.

என்னைப் பேசியபடி காலைத் தேநீரைத் தயாரித்த மனைவி, என்னிடம் கொண்டு வந்தாள்.

''ஒன்றும் தெரியாத பிள்ளைக்கு இந்த அசிங்கத்தை மிதிக்க இடம் வைப்பது எவ்வளவு பாவம் பாருங்க. மகளுக்காகப் பொறுத்துக் கொண் டேன்.... ம்...... எனக்கும் குமட்டல் வரப் போகுது''

அவள் தேநீரை கையில் கொடுத்தபடி ''சொல்லிவிட்டேன்..... இன்னக்கி எங்காவது கொண்டு போய் விட்டிட்டு வாங்கோ.'' என்று எச்சரிப்பதாகவன்றி தவிர்க்க முடியாத வேண்டு கோளாக விடுத்தாள்.

நீண்ட நேரமாகக் குறை கூறியதன் பின் அவளது கோபம் சற்றே தணிந்திருந்தது. பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உடனடியாகச் செயற்பட வேண்டுமென்று நான் தீர்மானித்தேன்.

எங்கிருந்தோ வந்து குடி கொண்ட பூனையை விரட்டுமாறு பல மாதங்க ளுக்கு முன்பே மனைவி வேண்டுகோள் விடுத்த போதும், அதனை அடித்து விரட்ட முனைவது எனக்குக் கஷ்டமான காரியமாகவேயிருந்தது.

ஒருநாள் காலை அல்லது மாலையில் நான் சமையலறைக்குச் செல்லும் போது, அங்கு ஏதோ கிளறிக் கொண்டிருந்த பூனையார் என் னைக் கண்டதும் குழப்பமடைந்து, கூரை வளைக்கும் சுவருக்குமிடை யால் புகுந்து செல்லப் போராடுகையில் அதனை அடித்து விழுத்தப் போதிய அவகாசமிருந்த போதும், நடுநிலை நோக்கில் தப்பிச் செல்ல இடம் விட்டுப்

பார்த்திருந்தேன். அது ஒருபோது எச்சில் கூடையைப் புரட்டித் துண்டு துணிகளை எங்கும் சிதறிவிட்டிருந்தது.

அதற்குச் சிலநாட்டிகளின் பின்பு தான் பூனை குட்டி ஈன்றது. மனைவியிடம் எந்தப் பக்கபலமும் கிட்டாததால் வீட்டினுள்ளே புகுந்து கொள்ள முடியாத போதும், எவருக்கும் தெரியாத வகையில் மூன்று குட்டி களை ஈன்றது. அது பெண் பூனையென்று தெரிந்து கொண்ட அன்றே அவள் அது பற்றி எச்சரிக்கை விடுத்திருந்தாள்.

''யோசித்து யோசித்து இருங்கோ. பூனை குட்டி போட்ட பிறகு தீர்வே வராது. எவ்வளவு சொன்னாலும் கணக்கெடுத்தால் தானே.''

இவ்வாறு ஆவலாதி கேட்டுக் கொண்டிருந்த நான் பூனை குட்டி போட்ட நாள் முதல் குற்றவாளியானேன்.

''இனி என்னதான் செய்யலாம்? இன்னும் கொஞ்சம் வளர்ந்த பின் எங்காவது கொண்டு போய் விடுவோம்''

மனைவியின் நச்சரிப்பிலிருந்து தப்பிக் கொள்ள நான் அப்படிச் சொன்னேன். இருந்தாலும், அந்தக் காரியம் பிற்படுத்தப்பட்டே வந்தது. நிரந்தரமாகவே தாய்ப் பூனையின் முலைக் காம்புகளில் தொங்கிப் பால் குடிக்கும் குட்டிகளைக் காணும் போது, தாயிலிருந்து அவற்றைப் பிரிக்க என் மனம் இடங் கொடுக்கவில்லை. சில நாட்கள் சென்றதும் குட்டிப் பூனைகள் முற்றத்தில் பாய்ந்து விளையாடத் தொடங்கின.

பிள்ளைகள் இருவரும் பூனைக் குட்டிகளை ரசிக்க ஆரம்பித்ததால் அவை மீது மனைவிக்கிருந்த எதிர்ப்புணர்வு சற்றே நலிவடைந்தது. இருந்தாலும், அவள் ஒரு போதும் பிள்ளைகளுக்குப் பூனைக் குட்டிகளைத் தொட்டு விளையாடவோ, அன்பு பாராட்டவோ இடமளிக்கவில்லை. அதன் மூலம் தோஷங்கள் பரவக் கூடுமென அவள் பயந்தாள்.

குட்டிகள் ஓரளவு வளர்ந்த பின் பிரச்சினை மீண்டும் தலை தூக்கியது. இரசு முழுவதும் முற்றத்தில் புரளும் குட்டிகள் காலையாகும் போது முற்றத்தில் மலம் கழித்து அதை மண்ணால் மூடிவிடும். விடிந்ததும் மண்ணுடன் கலந்த மலக் குவியல்கள் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

காலையில் மனைவி முற்றம் பெருக்கும் போதுதான் அவளுக்கு விஷயம் விளங்கும். அவள் அது பற்றி எனக்குப் பலமுறை நல்ல விதத்தில் நினைவூட்டினாள்.

எனது செயற்பாடில்லாத தன்மையால் அவளது வேண்டுகோள் கடுமையான நிலைக்கு உயர்ந்தது. அவள் பிள்ளைகளை முற்றத்தில் விளையாட வேண்டாமென்று தடுத்தாள். அந்நாட்களில் நான் சுமந்திருந்த உத்தியோகபூர்வ விடயங்களால் பூனைக்குட்டிகள் தொடர்பாகப் பொருத்தமான முடிவெடுப்பது தாமதமாகியது. இது தொடர்பாக மனைவி கவலைப்படும் போது, தற்காலிகத் தீர்வாக நான் முற்றத்தில் ஆங்காங்கே குவிந்திருக்கும் பூனை மலத்ததை மண்வெட்டியால் ஒன்று சேர்த்துக் குழி தோண்டிப் புதைத்து விடுவேன்.

இன்று நான் வேலைக்குப் போகாததால் நீண்ட நேரம் தூங்க உத்தேசித்திருந்தேன். மகளுக்கும் அம்மாவின் செருப்புச் சட்டம் சற்றே மறந்து போயிருந்தது. அவள் இதற்கிடையில் பூனை மலத்தை மிதித்து விட்டாள். இதனால் தான் பிரச்சினை உச்ச கட்டத்திற்குச் சென்றது.

நான் தேநீர் குடித்ததன் பிறகு மண்வெட்டி கொண்டு பூனை மலம் சேகரித்துப் புதைத்தேன். அதன் நாற்றமும் விரும்பத்தகாத தன்மையும் மற்றைய நாட்களை விட இன்று அதிகமாகவிருந்தது. அது மகளின் காலில் அப்பிக் கொள்ள இடமளித்தமை மடத்தனமானதென என் மனம் என்னைக் குற்றம் சுமத்தியது.

அன்று பகல் நான் வீட்டுக்கு அவசியமானவற்றைக் கொண்டு வரு வதற்காக நகரத்திற்குப் போய் வந்து கேற்றினூடாக உள்ளே பிரவேசிக்கும் போது, மூத்த மகள் முற்றத்துக்குப் பாய்ந்து சத்தமிட்டபடி என்னை நோக்கி ஓடி வந்தாள்.

''அப்பா..... அப்பா..... அம்மா நல்ல வேலை செய்திட்டா..... அநுர அண்ணனைக் கூப்பிட்டு பூனைக்குட்டிகள் மூன்றையும் ஒரு சாக்கில் போட்டுக் கட்டிவிட்டா. பாவம் அப்பா அவை உள்ளே அழுகின்றன.''

''ஐயோ...... உண்மை தான் அப்பா....'' சின்னவளும் சேர்ந்து கொண்டாள்.

சாலைக் கதவினூடாக விறாந்தைக்கு வந்த மனைவி கிண்டல் சிரிப்புச் சிரித்தாள். அவளது முகத்தில் காலையில் காணப்பட்ட கோபம் இருக்க வில்லை. என்னால் கவனிக்கப்படாத அல்லது பிற்படுத்தப்பட்ட விடயத் தைச் செய்ய முடிந்த பெருமையால் அவள் மகிழ்ந்து போயிருந்தாள்.

''இனி நீங்கள் எங்காவது கொண்டு போய்ப் போட்டுவிட்டால் தொல்லை முடிந்தது. இப்போதே போய் விட்டிட்டு வாங்களன்''

நான் எதுவும் சொல்லாமல் கழுத்திலடித்துக் கொண்டேன். பூனைக் குட்டிகளைக் கொண்டு போய் எவ்வாறு கைவிடுவதென யோசித்தேன். அதை யாராவது கண்ணுற்றால் என்னைப் 'படுபாவி' என்று சொல்வார்கள். அதனால் இரவு பிறக்கும் வரை காத்திருப்பதென் முடிவு செய்தேன். இருந்தும் எனது மௌனம் மனைவிக்கு மீண்டும் கோபமூட்டியது.

''என்ன உங்களுக்குக் கொண்டு போக முடியாதா? முடியாவிட்டால் அவிழ்த்து விடச் சொல்லுங்கள். பிள்ளைகள் எந்நாளும் மலத்தை மித்தித்து மிதித்து இருக்கட்டும்.''

இன்றும் இந்த வேலை பிற்போகுமென்று கருதி, என்னை எப்படியாவது தூண்டிவிடுவதற்கு மனைவி தயாரானாள். நான் அவளது கையைப் பிடித்து நிறுத்தினேன்.

''இருட்டுப்படும் வரை கொஞ்சம் பொறுத்திருங்களன். சனங்கள் கண்டால் என்ன நினைப்பாங்கள்? கொஞ்சம் இருட்டு விழுந்ததும் நான் அவற்றை எங்காவது போட்டு விட்டு வருகிறேன். அது சாக்குள் இருந்து சாகப் போவதில்லை. சிலவேளை கொஞ்சம் சத்தம் போடும்.''

அப்போது மனைவி என் கூற்றை ஏற்றுக் கொண்டாள். இரவு எட்டு மணிக்குப் போல், பூனைக்குட்டிகளை இட்ட சாக்கின் வாயைத் திறந்தபடி மோட்டார் பைக்கில் பயணித்துக் கொண்டே பண்சாலை அருகில் விட்டு விட்டு வந்து விட்டேன். வீட்டுக்குள் புகும்போது மனைவியின் முகம் சாந்த மாகவிருந்தது.

''பாவம் எனக்கும் கவலைதான். அதுக்காக என்ன செய்வது? அவை

இருப்பதால் இந்தப் பிள்ளைகளுக்கு ஏதாவது தொல்லைகள் வந்துவிடு மென்று எனக்குப் பயம்.'' அவள் சொன்னாள்.

''அப்பா..... பூனைக் குட்டிகள் அம்மா இல்லாமல் அழுமோ தெரியாது. இனி அவை எப்படிப் பால் குடிக்கும்?'' சின்னமகள் கேட்டாள்.

''தங்கச்சி..... விலங்குகள் தனித்துப் போவதால் சாவதில்லை''

மூத்தமகள் தங்கைக்கு அறிவுரை சொன்னாள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மனைவிக்குப் பிள்ளைகளின் தொடர்பாடலையிட்டு மகிழ்ச்சி மேலிட்டது. கூடவே பூனைக்குட்டிகளை வெளியேற்றுவதில் முனைப்பாகச் செயற்பட்டமை தொடர்பாகப் பச்சாதாபமும் கவலையும் அவளுக்குள் மறைந்து தெரிந்தது.

நான் இரவுச் சாப்பாட்டின் பின்பு ரூபவாஹினியில் இடம் பெற்ற அரசியல் உரையாடலைப் பார்க்க முற்பட்டேன். மனைவியும் பிள்ளைகள் இருவரும் நித்திரைக்குப் போய் விட்டார்கள். ரூபவாஹினியின் வாத விவாதத்தை நசுக்கிக் கொண்டு நள்ளிரவில் எழுந்த ஓலம் எனது மனதை நாராக்கியது. அது குட்டிகளை இழந்த பூனையின் பிரலாபம். இது பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சத்தமிட்டபடி வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தது. ரூபவாஹினியின் விவாதம் அதற்கு மேல் என் தலைக்கு ஏறவில்லை. நான் ரீவியை மூடிவிட்டுக் கட்டிலுக்குச் சென்றேன். மனைவியும் பிள்ளைகளும் நல்ல நித்திரை. பூனையின் ஓலத்தால் அதிர்வுற்ற நான் கட்டிலில் ஒரு பக்கமாகச் சாய்ந்து மேலே பார்த்தபடியிருந்தேன்.

ரூபவாஹினியை நிறுத்திய பின் பூனையின் கூக்குரல் எல்லாவற்றுக்கும் மேலாக ஒலித்தது. பூனை எங்களது படுக்கையறை ஜன்னலருகே அங்குமிங்கும் ஓடி எழுப்பிய சத்தம் முழுச் சுற்றாடலிலும் எதிரொலித்தது. அந்தச் சத்தத்திற்கு விழித்துக் கொண்ட மனைவியின் அமைதியற்ற தன்மை எனக்கு விளங்கியது. நான் நித்திரையாகி விட்ட பாங்கில் அவளை மதிப்பீடு செய்தேன். பூனை எங்கள் படுக்கையறை அருகிலேயே நின்று தனது கவலையைச் சொல்லிப் புலம்புவது போலிருந்தது. தனது வழக்கை முறையிடுவது போலிருந்தது.

விழித்துக் கொண்ட மனைவி சிறிது நேரம் பூனையின் ஓலத்துக்குக்

காது கொடுத்துவிட்டுப் பெருமூச்சு விடுவது கேட்டது. தொடர்ந்தும் ஒரே இருப்பில் இருக்க முடியாத அவள் கட்டில் நடுவில் அமர்ந்து கொண்டாள். சுருண்டு போய் படுத்திருக்கும் பிள்ளைகளையும் என்னையும் பார்த்தபடி பெரும் அதிர்ச்சிக்கும் தனிமைக்கும் உள்ளாகியிருப்பதை அசைவற்று அவதானித்துக் கொண்டிருந்தேன்.

அவள் என்னைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ''இங்க'' என்று மெல்ல அழைத்தாள். நான் மௌனமாகவிருந்தேன். நான் கடும் நித்திரையில் ஆழ்ந்து போயிருப்பதாக அவள் எண்ணியிருக்கக் கூடும். தன்னைப் பாதிக்கும் உணர்வை இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ள முடியாத துன்பத்தில் அவள் துவண்டாள். பெட்டைப் பூனையின் குரலை இனியும் கேட்டிருக்க இயலாத நிலையில் ''ஸ்....... ஸ்.....'' என்று சத்தமிட்டாள். அவ்வாறு செய்வதால் அதன் கூக்குரல் தணிந்து விடுமென்று நினைத்திருப்பாள். அதற்கு மேலும் அமைதியாயிருப்பது எனது மனதுக்கு நன்றாகப் படவில்லை.

''என்ன இது எழுந்திருந்து கொண்டு செய்றீங்க?'' நானும் கட்டிலில் அமர்ந்து கொண்டேன்.

''நான் பெரும் பாவ காரியத்தைச் செய்து கொண்டேன். பூனைக்குக் கவலை பொறுக்க முடியாமல் ஓலமிடுகிறது. அதன் சத்தத்துக்கு நெஞ்சு வெந்து போகிறது. நீங்கள் பூனைக் குட்டிகளை எங்கே கொண்டு போய்ப் போட்டீங்க? ஐயோ நாங்கள் போய் அவற்றைக் கொண்டு வருவோமா?''

''பைத்தியமா.....? இந்த நடு இரவில்.....'' எல்லாவற்றுக்கும் தானே குற்றவாளியென்ற கழிவிரக்கம் காரணமாக அதற்கு மேல் அவள் என்னை ஒன்றும் கெஞ்சவில்லை.

''எங்கட பிள்ளை கொஞ்ச நேரத்துக்கு அங்க இங்க போனால் எங்களுக்கு உயிர் போனது போலாகிவிடும். மிருகமாக இருந்தாலும், அதுவும் ஒரு அம்மா தானே? ஸ்...... நான் செய்து கொண்ட பாவ காரியம்...... எனக்கென்றால் தூங்கவும் முடியாது போலிருக்கு.''

பூனை தொடர்ந்தும் அழுது வடிந்தபடி வீட்டைச் சுற்றி நடமாடுவது கேட்டது. அதன் பிரலாபத்தால் அதிர்ச்சியடைந்த நான் நீண்ட நேரம்

சிந்தித்துக் கொண்டிருந்துவிட்டே நித்திரையில் விழுந்தேன். சற்று நேரத்துக்கு முன்பு ஒளிபரப்பான ரூபவாஹினி உரையாடலின் போது, இளம் அரசியல்வாதி ஒருவர், எண்பத்தொன்பது குழப்பத்தின் போது கடத்திச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தொடர்பான விடயங்களை முன் வைத்து வாதித்த விதம் ஞாபகம் வந்தது. கூடவே அவர்களின் தாய்மாரும் நினைவுக்கு வந்தனர்.

காலை எழுந்தவுடன் அந்தப் பூனை தன் குட்டிகளோடு முன்பு தங்கி யிருந்த விறகுக் கொட்டிலுக்குச் சென்றேன். நடந்திருந்த விடயத்தைக் கண்ணுற்று நான் புதுமைக்கு ஆளானேன். பூனை தன் மூன்று குட்டிகளையும் அணைத்தபடி நின்றது. அவை தாயின் முலைக் காம்பில் தொங்கி பால் பருகிக் கொண்டிருந்தன.

இரவு முழுவதும் குட்டிகளின்றி சோகத்தில் கத்திக் கொண்டிருந்த பூனை எவ்வாறோ அவற்றைத் தேடிக் கொண்டு வந்திருந்தது. நான் காலடிச் சத்தம் கேட்காதவாறு அவ்விடத்திலிருந்து சமையலறைக்குச் சென்று, மனைவியை அழைத்து வந்து நடந்துள்ள விடயத்தை அவளுக்குக் காட்டினேன். அவளது குரலை இனம் கண்ட பூனை பயந்த பாங்கில் ஏதோ கோரிக்கை விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தது.

''அம்மா...... இது பெரிய விஷயம். நான் நேற்று இரவு முழுவதும் தூக்கமின்றி அழுது கொண்டிருந்தன். தூங்கிய கொஞ்ச நேரத்திலும் கெட்ட கனவுகள் தெரியத் தொடங்கின''- மூத்தவள் சொன்னாள்.

''இனி என்ன செய்வோம்?'' நான் கேட்டேன்.

''அவை அப்படியே இருக்கட்டும்.'' மனைவி சொன்னாள்.

''அப்படியென்றால் இன்றிலிருந்து யார் பூனை மலம் அள்ளுவது?'' நான் கிண்டலாகக் கேட்டேன்.

''அதையும் நானே செய்றேன். அது மிருகமாகவிருந்தாலும் ஓர் அம்மா தானே! பிள்ளைப் பாசம் அதற்கும் எனக்கும் விளங்குகிற அளவுக்கு, வேறு யாருக்கு விளங்குது!'' அவள் அவ்வாறு கூறியபடி, பிள்ளைகளை எழுப்பிப் பாடசாலைக்கு அனுப்ப வீட்டினுள்ளே சென்றாள்.

# பெரிய வேரின் தேர்தல்

புண்ணிய வர்தன அவர்கள் ஒரு வாரமாக வீட்டிலிருந்து வெளியிறங்க வில்லை. மக்களுக்கு முகம் கொடுக்க முடியாத பெரும் மனக்கிலேசம் அவரை ஆக்கிரமித்திருந்தது. இடையில் சந்திக்கும் மனிதர்களை எப்படி எதிர்கொள்வதென்று அவரால் எண்ணிப் பார்க்க இயலவில்லை. அவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று தெளிவுபடுத்திக் கொள்வதே அவருக்குப் பெரும் பிரச்சினையாகவிருந்தது.

ஒரு வாரம் கழிந்த பின் தனது வேனைச் செலுத்திக் கொண்டு பாதை யில் மெல்ல மெல்ல முன்னோக்கியபோது, மக்களுக்கு முகம் கொடுக்க முடியாத அநியாயமொன்றைச் செய்துவிட்டு அதே சமூகத்தை எதிர்க் கொள்ளும் மனோ நிலையில் சங்கடப்பட்டார்.

பாதை நெடுகிலும் கண்ட மனிதர்களில் சிலர் அவரோடு சிரிப்பதற்கு முயற்சித்தனர். சிலர் முன்பு போலல்லாது தொலைவுக்குப் போகும் வரையில் மிக அவதானமாக அவரைப் பார்த்தபடியிருந்தனர். எதிர்கட்சி சார்ந்த அயலவர்கள் அவரது கண்களில் விழாமல் மறைய முயற்சித்தனர்.

முன்புபோல் சனங்கள் ஆங்காங்கே குழுமி நிற்கவில்லை. யுத்தத்தின்

பின் பாழடைந்த பகுதி போல் முழுமையாகவே சனங்கள் எவருமற்ற ஒரு கிராமமாகக் காணப்பட்டது.

இரண்டு மூன்று கிலோ மீற்றர் முன்னோக்கிச் சென்ற புண்ணியவர்தன அவர்களுக்கு அதற்கு மேல் செல்லும் ஆசையோ தேவையோ இருக்கவில்லை. அவர் வேனைத் திருப்பிக் கொண்டு மீண்டும் வந்தார்.

தனது வீட்டுக்கு முன்னாலுள்ள நாற் சந்தியில் பொருத்தப்பட்டிருந்த தனதுருவம் தாங்கிய கட்அவுட் எவ்வித பாதிப்புமின்றி அப்படியே கிடந்தது. புண்ணிவர்தன அவர்கள் வாகனத்தின் வேகத்தைக் குறைத்து அதனைச் சிறிது நேரம் பார்த்தபடியிருந்தார்.

தான் முப்பத்திரண்டு பற்களையும் வெளிக்காட்டி, இரு கைகளையும் சேர்த்து வணக்கம் தெரிவித்தபடி பார்த்திருக்கும் அந்தப் படம் புண்ணிய வர்தனவுக்குப் பெரும் வெட்கத்தை ஏற்படுத்தியது. கண்களை மறுபக்கம் திருப்பிய போது சந்தியில் நின்றபடி தன்னைப் பார்த்திருக்கும் பலரையும் கண்ட அவரது வெட்கம் மேலும் இரண்டு மூன்று மடங்காகியது. தான் தனது தேர்தல் கட்அவுட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்று அவர்கள் தன்மீது அனுதாபம் கொள்கிறார்களோவென்று புண்ணிய வர்தன அவர்கள் நினைத்தார். சிலவேளை அவர்கள் அடி மனதால் சிரிக் கிறார்களோ தெரியவில்லை. அவர் வாகனத்தின் வேகத்தை அதிகரித்து அங்கிருந்து தப்பிவிட முயன்றார்.

பிரதேச சபைத் தேர்தல் முடிந்ததைத் தொடர்ந்து, வீட்டுக்கு வெளியே சென்று சனங்களுக்கு முகம் காட்டுவதிலுள்ள சங்கடம் காரணமாக வீட்டுக்கு வெளியே செல்வதில்லையென்று புண்ணியவர்தன தீர்மானித்தி ருந்தார். இருந்தும் அந்த வாரத்துக்குள் வீட்டுக்கு வந்து போனவர்களுக்கு முகம் கொடுத்தும் அவர்களது கதைகளில் கலந்து கொண்டு வீட்டுக் குள்ளேயே அவர் களைத்துப் போயிருந்தார்.

கடந்த வாரத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் அவரது வீட்டுக்கு வந்து போனார்கள். அவர்களெல்லோரும் தனக்கு வாக்களித்ததாக வேறு சொன் னார்கள். அவர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் கணக்குப் போட்டுப் பார்த்தபோது, அவர்கள் சொல்வது உண்மையெனில் தான்

வெற்றி பெற்றிருக்க வேண்டுமென்று புண்ணியவர்தன அவர்களுக்குத் தெரிந்தது. இருந்தும் அதை விட மிகவும் குறைந்தளவு விருப்பு வாக்குகளே அவருக்குக் கிடைத்திருந்தன.

''நாங்களென்றா மூன்று விருப்பு வாக்குகளையும் ஸேருக்குத் தான் கொடுத்தோம். நான் மட்டுமல்ல, எங்கட தலைக் குடும்பம் முதல் எல்லா வோட்டுக்களையும் ஸேருக்குத்தான் திருப்பினோம். மடயர்கள் தெரிவாகி என்ன பிரயோசனம் ஸேர்? நாலும் தெரிந்த படித்த மனிதன் முன்னுக்கு வந்தால் எவ்வளவு நல்லது? இருந்தும் இங்கிருக்கிறவங்களுக்கு இதெல்லாம் விளங்கிறதில்லயே?''

புண்ணியவர்தன அவர்களைச் சந்திக்க வந்திருந்த பியதிஸ்ஸ மேற் கண்டவாறு சொன்னான். இருந்தும் அவன் இன்னொரு அபேட்சகருக்காக கென்வஸிங் சென்ற விஷயம் தேர்தலுக்கு முன்பே அவருக்குத் தெரிந்தி ருந்தது. பியதிஸ்ஸவின் மாயக் கதையின் முன் புண்ணியவர்தன மௌனித்து நின்றார்.

''ஸேர் அரசியல் செய்வதை நான் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப் போறதில்ல. ஸேர் பிரதேச சபைக்குப் போய் என்னத்த செய்து கிழிக்கப் போறீங்கள்? ஆசிரியர் என்ற வகையில் அதிபரென்ற முறையில் அதற்கும் அப்பால் எவ்வளவு வேலை செய்த மனிதன் நீங்கள்! ஸேர் நீங்களொரு பின்னடைவான பயணம் தான் போகப் பார்த்தியள். இந்தப் பொய் அரசிய லோடு இணைந்து போக முடியாதென்று ஸேருக்குத் தெரியுந்தானே? குடிகாரனும் பொய்காரனும் ஊதாரிகளும் யாவாரிகளுமல்லாமல் இந்தக் காலத்தில தேர்தலில ஜெயிக்க முடியுமா? இல்ல கேக்கிறன். ஸேர் தோல்வியடைந்ததுக்காக உண்மையில் நான் சந்தோஷப்படுறன்''

தனது மாணவரான ஜெயதேவ சொன்னதற்கு மாற்றுக் கருத்துச் சொல்ல புண்ணியவர்தன அவர்களால் முடியவில்லை. அவர் எப்பொழு துமே தன்மீது அன்பு வைத்துள்ள மாணவர் ஒருவன். அவனது கதையின் மூலம் தான் விழிப்புற்று உணர்வு பெற்றதாக புண்ணியவர்தன அவர்கள் நினைத்தார். தான் பொருத்தமற்ற நடவடிக்கையொன்றில் சிக்கியிருப்ப தாகத் திருவாளர் புண்ணியவர்தன இடைக்கிடை நினைக்காமலில்லை.

இருந்தும் அதை விட தான் ஏமாற்றப்பட்டிருந்தமை சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

தேர்தல் வேலையில் ஈடுபட்டிருந்த சிறிது காலத்திலும், ஏனைய அபேட்சகர்களைப் போல் புண்ணியவர்தன அவர்களைச் சுற்றி ஆதர வாளர்கள் சூழ்ந்திருக்கவில்லை.

தனக்கு மிகவும் நெருக்கமானவர்களான சில ஆசிரியர்களும் குடும்ப உறவினர்கள் சிலரையும் தவிர்த்தால் வேறு எவரும் தன்னைச் சுற்றி யிருக்கவில்லையென்பது புண்ணியவர்தன அவர்களுக்கு நல்ல ஞாபகம்.

தனது பட்டியலிலேயே வெவ்வேறு அபேட்சகர்களாகப் போட்டியிட்ட குடி காரப் பிரமேயும் பலங்க கடத்தும் யசரத்னவும் தனித்தனி வாகன வரிசை மூலம் வீடு வீடாக மூலை முடுக்கெல்லாம் புகுந்து திரிந்தார்கள். அவர்க ளது வீடுகளுக்கருகே அமைக்கப்பட்டிருந்த காரியாலயங்களில் எப்பொழு துமே பத்துப் பன்னிரண்டு பேர் காலம் கடத்தினர். அவர்களது வாகனங்க ளில் சனம் நிரம்பி வழிந்தனர். அந்த அபேட்சகர்கள் தங்களோடு வருவோ ருக்கு உணவு பானம், கசிப்பு, சிகரட்டோடு பணமும் செலவிட்டனர்.

மற்றைய நாட்களில் பீடி அல்லது சுருட்டோடு சமாளித்துக் கொண்டவர் கள் இந்தச் சில நாட்களாக சிகரட் புகைத்தனர். முன்பு கசிப்பு குடித்தவர் கள் இந்நாட்களில் உயர்தர சரக்கால் உபசரிக்கப்பட்டனர்.

தேர்தலன்று குடிப்பிரேமையின் கட்சிக் காரியாலயத்தில் கேன் கணக் கில் கசிப்பு வைக்கப்பட்டிருந்தது. வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத் திற்குப் போகு முன் அவர்களுக்கு சாராயக் கிளாஸும் இரண்டு மூன்று சிகரட்டும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக திருவாளர் புண்ணியவர்தன ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தார்.

புண்ணியவர்தன அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்று மூன்று வருடமாகிறது. அவரது பிள்ளைகள் திருமணம் செய்து தனிக் குடித்தனம் நடாத்துகின்றனர். அவரோடு அவரது மனைவியும் வீட்டு வேலைகளுக்கு உதவும் கிரிமெனிகேயுமே வாழ்ந்து வருகின்றனர். சென்ற ஆண்டு ஓய்வு

பெற்ற அவரது மனைவி பருத்த உடல்வாகு காரணமாக நெடுகவும் முழங்கால் வருத்தத்தால் அவதிப்பட்டார். வீட்டு உதவிப் பெண் கிரிமெனி கேயும் வயதுக்கேற்ப வாத ரோகத்தால் கஷ்டப்படுவாள். இதனால் வீட்டுக்கு வருவோருக்கு தேநீர்க் கோப்பையொன்று கொடுப்பது கூட அவருக்குப் பிரச்சினைதான்.

ஆசிரிய தம்பதியாக வாழ்வைக் கடத்திய இருவரதும் வீட்டு வாழ்க்கை ஒருவகையில் தனிமை நிரம்பியது தான். மதியம் வரை பாழடைந்த வீட்டுக்குள் மனித வாசனை மாலையில் தான் தெரியும். திருவாளர் புண்ணியவர்தன நாளாந்தம் நன்றாக மாலையான பின்பே வீட்டுக்கு வரு வார். அதனால் அவர்களது வீடு சனங்களுக்கு பழக்கப்பட்டதோர் இட மல்ல. புண்ணியவர்தனவின் வாழ்க்கைக் கோலம் அடுத்தவர்கள் வந்து போய்ப் பழகும் வகையில் அமைந்திருக்கவில்லை. பிரதேச சபைத் தேர்த லில் போட்டியிட்ட அவருக்கு உதவி உபகாரம் செய்யப் பெருந் தொகை யானவர்கள் ஒன்று கூடாமைக்கு இந்தப் பின்னணி நிறையவே தாக்கம் செலுத்தியிருந்தது.

தேர்தல் தினத்தன்று அதையொட்டிய தினங்களிலும் நடைபெற்ற நிகழ்வுகளை நினைக்கும் போது புண்ணியவர்தன அவர்களுக்குத் தேர்தல் தொடர்பாக மாத்திரமன்றி, தன்னை பற்றியும் கூட பெரும் வெறுப் பேற்பட்டது. தான் நிதமும் சந்திக்கின்ற தன்மீது மிகுந்த கௌரவத்துடன் நடந்து கொள்கின்ற... இருந்தும் தமது தேர்தல் கொள்கைக்கு இணங் காதவர்களை தம்முடைய பாராளுமன்ற அங்கத்தவர் மூலம் இழிவு படுத்தி யதை, புண்ணியவர்தன அவர்கள் மிகுந்த வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மந்திரி அவர்களின் செயற்பாடுகளை நன்கு அறிந்து வைத்திருந்த புண்ணியவர்தன அவர்கள் வாக்களிப்பு நிலைய மேற்பார்வைக்குச் செல்கையில் முடிந்தவரை அவரைத் தவிர்க்கவே முயற்சித்தார். இருந்தும் எதிர்பாராத விதமாகப் பல வாக்களிப்பு நிலையங்களில் மந்திரியின் பிரசன் னம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

தனக்கு ஆதரவு கிடைப்பது எப்படிப் போனாலும், கட்சியை வெல்ல

வைத்து மேலிடத்து ஆதரவைப் பெற்று அரசியலில் படி உயர்வதே அவரது தேவையாகவிருந்தது.

வாகன வரிசையோடு வந்து வாக்களிப்பு நிலையத்தை ஆக்கிரமித்த மந்திரியவர்கள் எதிர்க்கட்சியினரைப் பார்த்த பார்வைக்கே, அவர்களது வாக்களிப்பு நிலையப் பிரதிநிதிகள் ஒதுங்கிச் சென்றனர். சிலபேர் மந்திரி வருவதைக் கண்ணுற்று நின்ற இடம் தெரியாமல் ஓடத் தொடங்கினர்.

சில இடங்களில் வாக்களிக்க வரிசையில் நின்ற எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் அருகே சென்ற மந்திரியார் கடும் தூசண வார்த்தைகளால் அவர்களைத் திட்டித் தீர்த்தார். அதனால் பயந்து போன சிலபேர் வாக்களிக்காமலேயே வீடு திரும்பினர். அவர்களில் பலர் வீதியில் புண்ணியவர்தன அவர்களைக் கண்டால், ''எங்கட பெரிய ஸேர்'' என்று மரியாதை செய்பவர்களாவர். அவர்கள் தங்களைப் பற்றி இதுகால வரையில் கட்டியெழுப்பியிருந்த மதிப்புருவத்தை அந்த வாக்களிப்பு பூமியிலேயே போட்டுக் காலால் மிதித்து விட்டே சென்றிருக்க வேண்டும்.

எச்சரிக்கை விடுப்பதை நிறுத்தாத மந்திரியார், தேர்தல் அதிகாரிகளின் கையிலிருந்த வாக்களிக்கும் அட்டைகளைப் பறித்து யசரத்னவின் கையில் கொடுத்தார். அவரது கையாட்கள் அதில் புள்ளடியிட்டு வாக்குப் பெட்டியில் போட்டனர்.

''அதிகாரிமார் கோபப்பட வேணாம். இது எங்கட அரசாங்கம். எங்கட அரசாங்கத்தை பாதுகாப்பது எங்கட கடமை''

இப்படிச் சொல்லிவிட்டு மந்திரி போகும் போது அதிகாரிகள் மௌனமாகப் பார்த்திருந்தனர். எல்லாவற்றுக்கும் மத்தியில் புண்ணியவர்தன அவர்கள் அப்பாவியாக நின்றார்.

மந்திரியவர்கள் எதிர்பார்க்கும் விதமாகத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தன்னால் இயலாதென்பதை புண்ணியவர்தன அவர்கள் மட்டுமல்ல மந்திரியவர்களும் நன்றாக விளங்கியிருந்தார்.

''ஐயோ பெரிய ஸேர் வாக்களிப்பு நிலையத்திற்கு வந்து பண்புள்ள மனிதராக நின்று ஒன்றும் ஆகப் போவதில்லை. சனங்கள் எங்களுக்கு

வாக்களிக்கும் வரை பார்த்திருந்து பயனில்லை. எங்களுக்குத் தேவையான வாக்குகளை நாங்களே போட்டுக் கொள்ள வேண்டும். இந்த விதமாகத் தேர்தல் செய்து கோயில் பரிபாலன சபைக்குக் கூடத் தெரிவாக முடியுமா? நான் உங்களுக்கும் கூடக் கொஞ்சம் வாக்குகள் போட வைத்தன்''

இப்படிக் குறை கூறிய மந்திரியார் தனது பரிவாரங்களோடு அவசர அவசரமாக அடுத்த வாக்களிப்பு நிலையத்திற்குப் பறந்தார்.

திருவாளர் புண்ணியவர்தன சிலையாகிப் போய்ப் பார்த்தபடியே இருந்தார். மந்திரியவர்கள் தனக்காகவும் கொஞ்ச வாக்குகள் போட்டதாகச் சொன்னாரே, அது எவ்வளவு பெரிய பொய்? அவர் எல்லா வாக்களிப்பு அட்டைகளையும் பறித்து யசரத்னவிடமே கொடுத்தார். அதை அவர் தனக்குச் சாதகமாகப் பயனப்படுத்தியிருப்பார். அவர் எனக்காகவும் அப்படிச் செய்திருந்தால், அது எனக்கு இழிவையல்லவா ஏற்படுத்தும்? எனக்கு மதிப்பளிக்கும் இந்தச் சமுதாயம் அப்படியொன்று நடந்திருந்தால் என்னை மன்னிக்குமா?

மந்திரி உள்ளிட்ட கட்சியின் செயற்பாட்டாளர்கள் பிரதேச சபைத் தேர்தலில் நிற்க வேண்டிப் பெயர்ப் பட்டியலில் தனது பெயரைச் சேர்க்க அனுமதி கோரித் தொல்லைப்படுத்தியதும், கௌரவமான தேர்தலில் ஈடுபடப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்களித்ததும் அந்த வாக்குறுதியை அடுத்த கணமே மறந்து போய்விட்டதையும் எண்ணிப் பார்த்துப் புண்ணியவர்தன அவர்கள் வியந்து போனார்.

அதன் பின்னர் இன்னொரு வாக்களிப்பு நிலையத்தில் சோகம் மிகுந்த அனுபவத்திற்கு புண்ணியவர்தன அவர்கள் ஆளானார்.

தேர்தல் தினத்திலிருந்து இன்று இக்கணம் வரை திருவாளர் புண்ணியவர்தனவின் மனதை வதைத்துச் சிதைத்துக் கொண்டிருப்பது அந்தச் சம்பவம் தான்.

புண்ணியவர்தன அவர்கள் ஒரு வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்கையில், மந்திரி தனது கையாட்களுடன் சேர்ந்து ஒருவருக்கு அடித்துக் கொண்டிருந்தார். இதைக் கண்டு இடையில் பாய்ந்து மந்திரி மற்றும்

அவரது கையாட்களிடமும் உதை வாங்கிக் கொண்டிருந்தவரை மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் விடுவித்தார். அவர்களது கை, கால் உதைகள் அவர் மீதும் விழாமலில்லை.

''இதுக்குப் பிறகு பூத் பக்கம் வந்தியென்றா உன்ன முள்ளு முள்ளாக உடைப்பம். போடா நாயே''

இப்படிச் சொன்னபடி அவன் மீது மந்திரி தன் இறுதிக் காலுதையைக் கொடுத்தார். கூடவே கையாட்களும் தாறுமாறாக அடி கொடுத்தனர்.

அங்கு புண்ணியவர்தன அவர்கள் சம்பந்தப்பட்டவுடன், தனது பரிவாரங்களுடன் வாகனப் பேரணியில் பறந்து சென்றார் மந்திரி.

அடி வேண்டிய மனிதரை அறிமுகம் பிடித்ததும் திருவாளர் புண்ணிய வர்தன விறைத்துப் போனார். அவன் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு தனது பாடசாலையில் படித்த அபேரத்ன ஆவான். மாணவர் தலைவராகச் செயற்பட்டுப் பாடசாலை நிர்வாகத்திற்குப் பெரிதும் உதவியவன். அடி வேண்டிய அபேரத்னவின் முகம் இரண்டொரு நிமிடங்களில் வீங்கிவிட்டது. எழும்பக் கூட முடியாதளவு நொந்து போயிருந்த அவனைப் புண்ணிய வர்தன அவர்கள் கைகொடுத்து எழுப்பினார்.

''ஏன் ஸேர் எங்களுக்கு இப்படிச் செய்றாங்கள்? எங்கட ஆக்களிடம் தப்ப முடியாமல் தான் நான் போலின் பூத்துக்கு வந்தேன். இருந்தும் நான் ஸேருக்குத்தான் வோட்டுப் போட்டன். இது சத்தியம் ஸேர்.''

''எனக்கு ரொம்பக் கவலை தம்பி. இப்பிடி நடக்கிற விஷயங்கள் தெரிந்து தெரிந்தும், நாற்றமடிக்கிற அரசியலுக்குள் நான் வந்திட்டன. ஆனால், இந்தளவு மோசமென்று தெரிந்திருந்தால், ஆயிரம் தந்திருந் தாலும் இந்த அரசியலுக்கு நான் வந்திருக்க மாட்டன். இவங்கள் மிருகங் கள். மக்களுக்கு சேவை செய்யாமல் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, அநியாயம் செய்து வாழ்ந்து விட்டு, தேர்தல் வந்தபின் தான் இவங்கட கண் திறபடும். அந்நேரத்தில் சண்டித்தனம் தான் அவங்களுக் கிருக்கிற ஒரே வழி. எனக்கு மந்திரிப் பதவி கிடைத்தாலும் இனி வேணாம். அந்தளவுக்கு நான் விரக்தியடைந்திட்டன்''

அப்படிச் சொன்ன புண்ணியவர்தன அவர்கள் அபேரத்னவை ஏற்றிக் கொண்டு டிஸ்பென்ஸரிக்குச் சென்று மருந்து போட்டுக் கொண்டு வீட்டுக்குக் கூட்டிச் சென்றார்.

தேர்தல் சம்பந்தமாக வைத்திருந்த சகல எதிர்பார்ப்புக்களையும் ஆசை களையும் கைவிட்டு விட்டு மதியத்திற்கு முன்பே திருவாளர் புண்ணிய வர்தன வீட்டுக்கு வந்துவிட்டார். தன்னோடு வருகை தந்த ஆதரவாளர்க ளையும் வீடுகளுக்கனுப்பிவிட்டு தனது படுக்கை அறையுள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார் புண்ணியவர்தன அவர்கள்.

தனது வாழ் நாள் பூராகவும் கீர்த்தி, தர்மம், அர்ப்பணிப்பு, பணிவு முத லானவற்றினூடாகக் கட்டியெழுப்பிய கௌரவ உருவம் கரைந்தோடு வதாகக் கண்ணுற்ற புண்ணியவர்தன அவர்கள் பெரும் அதிர்வுக்குள் ளானார். 'அது படிப்படியாக பெரும் அழுகையாக பரிணமித்ததை அவர் அறியவில்லை.

அறையிலிருந்து எழுகின்ற அழு குரலைக் கேட்டு திருமதி புண்ணிய வர்தன தனது கணவனின் படுக்கையறைக் கதவை இடையீடின்றித் தட்டினாள்.

தனது கணவன் ஏதோ மனத் தாக்கத்திற்குள்ளாகி கதவைப் பூட்டிக் கொண்டு அழுவதைக் கேட்டு அவரது மனைவி பயந்து போனாள். தானா கவே தனது வாழ்வை விபத்துக்குள்ளாக்கப் போகிறாரோவென்று அவள் மேலும் பயந்தாள்.

தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே புண்ணியவர்தன அவர்க ளுக்குள் அமைதியற்ற தன்மையும் பயந்த சுபாவமும் காணப்படுவதை யிட்டு அவர் மனைவி அவதானிப்போடிருந்தாள்.

தனது மனைவி எழுப்பும இடைவிடாத கோரிக்கையைத் தவிர்க்க முடியாமல் புண்ணியவர்தன அவர்கள் கதவைத் திறந்து விட்டு மீண்டும் போய்க் கட்டிலில் அமர்ந்தார். அவரது முகம் கண்ணீரால் தோய்ந்து வீங்கியிருந்தது.

"நான் பெரிய அநியாயம் செய்து கொண்டன். இந்த விபத்திலிருந்து என்னைக் காப்பாற்ற ஏன் உங்களால் முடியவில்லை?"

புண்ணியவர்தன அவர்கள் தனது மனைவிக்கு குறை கூற ஆரம்பித்தார்.

வாழ்க்கையில் ஒரு நாளும் பொறுப்புணர்ச்சியற்ற விதமாக முடிவெடுக் காத புண்ணியவர்தன அவர்கள் தேர்தலுக்கு இறங்கும் தீர்மானத்தையும் பொறுப்புணர்ச்சியுடனேயே எடுத்திருப்பார் என்ற அடிப்படையிலேயே அவரது மனைவியும் அதற்காதரவளித்தாள். தேர்தல் தொடர்பாகத் தனக்குள் நிலவிய அதிருப்தியை, தனது கணவனின் எதிர்பார்ப்புடன் கூடிய தீர்வுக்கு முன்னால் அதனை அடக்கிக் கொண்டாள்.

தனது கட்சியின் பிரதேச சார்பு நிலையைப் பேணுவதற்கு திருவாளர் புண்ணியவர்தன போன்ற கௌரமிக்கவர்களைப் பயன்படுத்திக் கொள்ள மந்திரியார் நினைத்திருந்தார். அப்பிரதேச கட்சிச் செயற்பாட்டாளர்கள் மூலமாக புண்ணியவர்தன அவர்களை அரசியலுக்குள் இழுக்க யோசித்த மந்திரியவர்கள் தானே போய் அவரைத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்.

மந்திரியவர்களதும் பிரதேச செயற்பாட்டாளர்களதும் நம்பிக்கையூட்டல் காரணமாக, புண்ணியவர்தன அவர்கள் பிரதேச சபைத் தேர்தலில் போட்டி யிடத் தீர்மானித்தார். இந்த அரசியலுக் கூடாக சில வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது பற்றி அடுத்து அவர் சிந்தித்தார்.

"இந்தப் பகுதியில பெரிய ஸேருக்கிருக்கிற செல்வாக்கு வேற யாருக்கி ருக்கு? சுருக்கமாகச் சொன்னால் எனக்கே இல்லை. உங்கள் சேவையால் நன்மையடைந்த மாணவர்களதும் அவங்க குடும்பத்தவர்களதும் வாக்குகள் கிடைத்தால் நிச்சயமாகத் தலைவராகலாம்."

மந்திரி அவ்வாறு நம்பிக்கையூட்டினார். தொடர்ந்து பேசித் தொல்லை கொடுத்து தனது விருப்பத்தைப் பெற்றுக் கொண்ட மந்திரியார், கடந்த காலத்தில் பிரதேச சபைத் தலைவராக வேறொருவரைக் கொண்டுவரவே முயற்சித்தார். ஆம்..... யசரத்னவைத்தான்.

மந்திரியார் இதுவரை செய்து கொண்டு வந்த பல்வேறு கள்ள வியாபாரங்களுக்கு ஒத்தாசையாகவிருந்த அவன், மந்திரியார் பதவிக்கு வந்த உடனேயே அவரது அனுசரணையுடன் பலகை வியாபாரத்தில் இறங்கினான். கடந்த காலப் பகுதியில் மந்திரியின் அறிவுறுத்தலோடு 'சைனீஸ் ரெஸ்டூரன்ட்' என்ற பெயரில் நடாத்திச் சென்ற கசிப்பு பாரும் விபச்சார விடுதியும் பலரதும் பேச்சுக்கு உள்ளான போதும், எவரும் வெளிப்படையாகக் கதைக்கவில்லை. மந்திரி தனது முழு சக்தியையும் பிரயோகித்து விருப்பத் தேர்வுப் பட்டியலில் அவனை முன்னணிக்குக் கொண்டு வர முயற்சித்தார்.

வாக்களிப்பு நிலையங்களுக்குப் பாய்ந்து கள்ள வாக்குப் போடுவதில் மந்திரியுடன் முன்னிலை வகித்து யசரத்ன செயற்பட்டான். அவர் வாக்களிப்பு நிலையத்திலிருந்து திரும்பிச் செல்கையில் புண்ணியவர்தன அவர்களைப் பார்த்த பார்வை அனுதாபப் பார்வையா? அவமதித்த பார்வையா? என்பதை அவரால் இன்னும் தெளிவு காண முடியவில்லை. என்னதானிருந்தாலும் பிரதேச சபைத் தேர்தலில் யசரத்ன தான் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தான். புண்ணியவர்தன அவர்கள் கடைசியிலிருந்து மூன்றாவது இடத்தில் நின்றார்.

தேர்தல் தினத்திற்கு அடுத்த நாளிரவு புண்ணியவர்தன அவர்களுக்குக் கிடைத்த தொலைபேசிச் செய்தி அவரை மேலும் அதிரச் செய்தது. முதன் முதலில் கதைத்தவர் அவரது ஆசிரியர் குழுவில் செயலாற்றிய இந்திரரத்னவின் மனைவி. அவர் அன்று முதல் வேறொரு கட்சிக்கு ஆதவராகச் செயற்பட்டவர். புண்ணியவர்தன அவர்கள் செயற்பாடற்றவராக ரிஸீவருக்குக் காது கொடுத்துக் கொண்டிருந்தார்.

"பெரிய ஸேர்...... நான் இந்திரரத்னவின் மனைவி கதைக்கிறன் ஸேர். உங்க கட்சியாக்கள் வீட்டு முன்னே இருந்து கொண்டு இந்திரரத்னவுக்குப் பேசிறாங்க...... சண்டைக்கு கூப்பிடுறாங்க...... அவர் கச்சேரியிலிருந்து வீட்டுக்கு வரமுடியாமலிருக்கார். நானும் பிள்ளைகளும் மாத்திரந்தான் வீட்டில்! இதைச் சொல்றதுக்கு எங்களுக்கு ஒருத்தருமில்லை. கேட்பதற

கும் ஆளில்லை. தனிப்பட்ட பழக்கத்தில் தான் ஸேருடன் சொல்றன். ஐயோ மந்திரியுடனாவது சொல்லிப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கோ''

ரிஸீவருக்குக் காது கொடுத்தபடி புண்ணியவர்தன அவர்கள் கல்லாய்ச் சமைந்து நின்றார். அவளுக்கு என்ன சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. எதுவுமே அவரது வாயிலிருந்து வெளிப்படவில்லை. அவரது மௌனத்திலிருந்து அவரும் அங்கீகரிப்பதாக எடுத்துக் கொண்ட இந்திரரத்னவின் மனைவி குறை கூறத் தொடங்கினாள். விம்மி விம்மி அழுதபடிதான் கதைத்தாள்.

''இப்படி மோசமான வேலைகளைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருப்பீங்களென்று நாங்கள் நினைக்கவில்லை ஸேர். நீங்கள் தேர்தலில் ஈடுபடுவதால் கணவர் கென்வஸிங் கூடப் போகவில்லை ஸேர். தப்ப முடியாத நிலையில் தான் கச்சேரிக்குப் போனார். ஏன் ஸேர் எங்களுக்கு அடிக்க இடம் கொடுத்து இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறீங்கள்''- என்று சொன்னபடி ரிஸீவரை வைத்தாள்.

புண்ணியவர்தன அவர்கள் அலட்சிய உணர்வோடு ரிஸீவரை வைத்துவிட்டு வந்து சாய் கதிரையில் கைகால்களை நீட்டினார்.

பின்னர் வந்த தொலைபேசி அழைப்புக்களெல்லாம் புண்ணியவர்தன அவர்களின் தோல்வியையிட்டு அனுதாபமும் வியப்பும் தெரிவிப்பனவாகவே இருந்தன. இருந்தும் அவர்களில் எவருமே தனக்கு வாக்களித்தவர்கள் என்று அவர் நம்பவில்லை. கடைசியாகக் கதைத்த பியஸேன தனது கட்சிக்காக கென்வஸிங் சென்ற அதே நேரத்தில் அவரது மனைவி அடுத்த கட்சிக்காக கென்வஸிங் சென்றாள். தங்களது பெறுமதியைப் பாதுகாத்துக் கொண்டு இந்த சமூக அமைப்பில் என்றும் வெற்றியாளர்களாக இருப்பதற்கே அவர்கள் இப்படி கள்ளத்தனமாக நடந்து கொண்டார்களென்பதைத் திருவாளர் புண்ணியவர்தன யோசித்துப் பார்த்தார்.

தேர்தல் சூடு குறைந்து பல நாட்களாகி விட்ட போதும், வீட்டுக்கு வெளியே செல்ல அவரது மனம் இடம் கொடுக்கவில்லை. பாதையில் பார்க்குமிடமெல்லாம் தனது ஏனைய அபேட்சகர்களதும் முகம் தாங்கிய போஸ்டர்களைக் கண்டபோது புண்ணியவர்தன அவர்களுக்கு மகா

வெட்கமாகவிருந்தது. அந்த முகங்ளெல்லாம் ஏமாற்றுக்கார முகங்க ளென்பது அவருக்கு இப்போதுதான் விளங்கியது.

இதற்கு முன் என்றுமே எடுக்காத விதமான புகைப்படமொன்றை தேர்தல் போஸ்டருக்காக அவர் எடுத்துக் கொண்டார்.

கட்சியின் நிறத்தில் அடையாளமிட்டுத் தைத்த பாதிக் கை சேர்ட் அணிந்து, முகம் நிறையப் புன்னகை பூத்தபடி இரு கைகளையும் முன் னெடுத்து வணங்கும் புகைப்படத்திற் கூடாக வித்தியாசமான தோற்ற மொன்று வெளிப்பட்டது.

ஆசிரிய வாழ்வில் ஆசிரியர் குழுக்களோடும் மாணவர் தலைவர்களு டனும் பாடசாலை விளையாட்டுக் கோஷ்டிகளுடனும் எண்ணற்ற புகைப்படங்களெடுத்திருக்கிறார். அந்த எல்லாப் படங்களிலுமே பொறுப்பு ணர்ச்சி மிக்க கௌரவமான தோற்றமே வெளிப்பட்டது. இந்த சில நாட் களில் தனது முகத்தில் எத்தகைய வித்தியாசமான தோற்றம் ஏற்பட்டு விட்டது?

ஓரிடத்தில் காணப்பட்ட திருவாளர் புண்ணியவர்தனவின் போஸ்டர்க ளில் முகம் மறையும் அளவுக்குச் சாணம் அடிக்கப்பட்டிருந்து. இன்னு மோரிடத்தில் கறுப்புச் சாயம் பூசப்பட்டிருந்தது. மற்றுமோரிடத்தில் போஸ்ட ரொன்று விகாரப்படுத்தப்பட்டிருந்தது. தேர்தலொன்று நடைபெறும் போது இவையெல்லாம் சர்வ சாதாரண விடயங்களென்று மற்றவர்கள் அலட் சியம் செய்த போதும், புண்ணியவர்தன அவர்கள் அவற்றைக் கண்ணுற்று அதிர்வுக்குள்ளானார். அவர் இரண்டு மூன்று நாட்கள் பிரசார நடவடிக் கைகளையே இடைநிறுத்தினார்.

''ஒவ்வொருத்தன் சேறடிக்கவும் சாணம் அடிக்கவும் எதற்கு ஒவ்வோரி டத்திலும் எனது முகத்தை ஒட்ட வேணும்?'' அவர் தர்கித்தார். இருந்தும், அடுத்தவர்களின் எண்ணப்படி எஞ்சிய போஸ்டர்களையும் ஒட்ட அனுமதித்துவிட்டு அவர் மனதைச் சமாளித்துக் கொண்டார்.

தனது வீட்டருகுச் சந்தியில் பொருத்தபட்டிருந்த மூன்றுக்கு ஐந்து

அளவிலான கட் அவுட் புண்ணியவர்தன அவர்களுக்குப் பெரும் வெறு ப்பை ஏற்படுத்தியது.

போஸ்டரிலிருக்கும் தான் பெரும் ஏமாற்றும் வஞ்சகமுமிக்க சிரிப்புடன் சனங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் நினைத்தார். அந்தப் பக்கமாக போய் வரும்போதெல்லாம் கள்ளமாகப் பார்த்துத் தனக்குள் ளேயே வெட்கப்பட்டு மறுபக்கம் பார்த்துக் கொள்வார்.

புண்ணியவர்தன அவர்கள் தேர்தல் முடிவுற்று சில நாட்களின் பின் வீட்டில் எஞ்சியிருந்த போஸ்டர், துண்டுப் பிரசுரங்கள் எல்லாவற்றையும் கொழுத்திவிட்டார். பிரதேச சபைத் தேர்தலுக்கு நின்று காலப் பகுதியைத் தனது வாழ்க்கை வரலாற்றிலிருந்து அழித்து விடக்கூடிய வழியெதுவும் இருக்குமாவென்று அவர் அடிக்கடி யோசித்தார். இருந்தும் மனிதர்களின் நினைவேட்டிலிருந்து அதனை அகற்றுவது எவ்வளவு சிரமமான காரியம்? மரங்களில் தூண்களில் மதில்களில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்கள் அழிந்து போக இன்னும் ஒரு காலமெடுக்கும்.

இவ்வளவு காலமாக ஒவ்வோர் அடியாக முன் வைத்துத் தடைகளைத் தகர்த்துக் கொண்டு வெற்றிப் பாதையில் முன்னேறிய புண்ணியவர்தனவிற்கு இந்தத் தோல்வியை சாதாரண விடயமாக்கிப் பொறுத்துக் கொள்வது இலேசான காரியமாக இருக்கவில்லை. கடந்த சில நாட்களாக வீட்டுக்கு வந்து போன சகலருக்குமே அவர் பொதுவான பதிலையே முன்வைத்தார்.

''என்னைப் பற்றி நிறைய யோசித்துத்தான் சனங்கள் எனக்கு வாக்க ளிக்கவில்லை போலும். அரசியலுக்குச் சென்றால் எனக்கேற்படக் கூடிய நஷ் டங்களை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்''- புண்ணியவர்தன அவர்கள் இவ்வாறு சொல்லி மனிதர்களிடமிருந்து தப்பிச் சென்று விடுவார்.

தேர்தலின் பின் நான்காவது தடவையாக வீட்டிலிருந்து வெளியேறி, ஓய்வூதியம் பெறுவதற்காக அவர் வங்கிக்குச் சென்றார்.

வங்கியில் நின்ற சிறிது நேரத்திற்குள்ளும் அவரோடு கதைத்த சமகால அரச ஊழியர்களும், கொடுக்கல் வாங்கலுக்காக வங்கிக்கு வந்தவர்களும் அவரை என்றுமில்லாபடி விசேடமாகவே பார்த்தனர்.

'தேர்தலில் நின்ற மனிதன்' என்ற தோரணையிலேயே சிலபேர் பார்த்த னர். அதனால் ஏனைய நாட்களை விட வித்தியாசமான கவனிப்பே அவ ருக்குக் கிட்டியது. தான் எதிர்காலத்தில் மந்திரியாக வரக்கூடுமென்ற எண் ணத்தோடு காணப்பட்ட சிலர் அவருடன் முகஸ்துதியோடு கட்சி ஆதர வாளர் போலும் செயற்பட்டனர்.

புண்ணியவர்தன அவர்களின் தோல்வியையிட்டு கவலைப்படுவோரும் அதே வேளையில் மகிழ்ச்சியடைவோரும் அவர்களுக்குள் காணப்பட்ட னர். அவர்கள் அத்தனை பேருக்கும் அவர் இறுதி நாட்களில் கொடுத்த பொதுவான பதிலையே கொடுத்தார்.

இருந்தும் வீதிக்கிறங்கிப் போகுமிடமெல்லாம் இன்னும் தனது போஸ்டர்கள் காணப்படுவதை அவரால் பொறுத்துப் போக முடியவில்லை. அவற்றை ஒரேயடியாக நேர்நோக்க முடியாத சிக்கலில் அவர் தவித்தார். அந்த போஸ்டர்களின் மேலும் கீழும் எவ்வளவு எதிர்பார்ப்புடன் கூடிய வசனங்கள் எழுதப்பட்டுள்ளன?

''பணிவான தலைமைத்துவத்திற்குப் பெரிய ஸேரை தெரிவு செய்வோம்''

''வன்னிக்கு இதயமுள்ள மனிதர்''

''அதிக விருப்பத் தெரிவால் வெற்றி பெறச் செய்வோம்''

நகர நாற்சந்தியில் பொருத்தப்பட்டிருந்த கட்அவுட் இப்போதைக்கே காணமால் போயிருந்தது. அவ்வாறு நடந்துள்ளதையிட்டு புண்ணியவர்தன மிகவும் சந்தோஷப்பட்டார். இருந்தும் தனது வீட்டுக்குச் சற்றே முன்னா லுள்ள சந்தியில் தூக்கப்பட்டிருந்த கட்அவுட்டில் தான் தோன்றுகின்ற பாங்கைக் காண்கையில் அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. தனதுருவம் இந்தச் சிலநாட்களுக்குள் விகாரமடைந்து போயிருக்குமென்று எண்ணினார்.

இரவிருள் கவிவதற்கிடையில் கட்டிலில் சாய்ந்து கற்பனையிலாழ்ந்த திருவாளர் புண்ணியவர்தனவின் மனம் தோல்வியுணர்வால் துவண்டு போயிருந்தது. இப்பொழுதெல்லாம் தேர்தலில் தோல்வியடைந்ததை தான்

பெற்ற தோல்வியாக அவர் கொள்வதில்லை. என்றாலும் தேர்தலில் நிற்பதாக எடுத்த முடிவில் உள்ளடக்கிய தோல்வியிலிருந்து எப்படித்தான் விடுதலை பெறுவது?

மூன்று தசாப்தங்களாக தன்னால் கட்டியெழுப்பப்பட்ட புகழ்ப் பதாகை, சூர்ய வெப்பத்தால் வெம்பி நிறம் மாறிப் போன போஸ்டருக்குச் சமனாகி விட்டது. அந்த எண்ணங்கள் மனதிலிருந்து வெளிப்படும் போது, நிம்மதி யென்பது என்னவென்று அவருக்குத் தெரியாமல் போய்விடுகிறது.

அன்று இரவு எட்டரை மணியளவில் அறிமுகமற்ற இருவர் புண்ணிய வர்தன அவர்களின் வீட்டை நோக்கி ஓடி வந்தனர்.

"வீட்டுக்காரம்மா வீட்டுக்காரம்மா"

புதியவர்களின் குரல் கேட்ட திருமதி புண்ணியவர்தன அவர்கள் வெளி மின்குமிழேற்றி ஜன்னலுக் கூடாக எட்டிப் பார்த்தார். முன்முற்றத்திர் இருவர் நிற்பது தெரிந்தது. தனது கணவன் வீட்டிலிருக்கையில் இவர்கள் வந்து எனக்குக் கூக்குரலிடுவது ஏன்?

''கதவைத் திறங்களம்மா..... எங்கள் பெரிய ஸேருக்கு சிறிய பிரச்சினையொன்று.....''

"அதெப்படி? எங்கட ஐயா வீட்டில் தானே இருக்கார்''- அப்படிச் சொன்ன படி திருமதி புண்ணியவர்தன ஓடிப் போய் தனது கணவரின் படுக்கை யறையை எட்டிப் பார்த்தாள். ஆனால், அவரை அங்கு காணவில்லை. அவள் உடனடியாக முன் பக்கக் கதவடிக்குச் சென்றாள். கதவு திறந்து சாத்தப்பட்டிருந்தது.

''என்ன..... என்ன..... நடந்திருக்கு..... எங்கே எங்கட ஸேர்?''

"ஐயா அம்மா..... நடந்த விஷயத்திற்கு மன்னிக்க வேணும். சற்றுக்கு முன்பு நாங்கள் சந்திக்கு வந்த போது, யாரோ பெரிய ஸேரின் கட்அவுட் டைக் கழற்றிக் கொண்டிருந்தாங்கள். யாரோ எங்கட எதிரிகளென்று நினைத்தோம். நாங்கள் யாரென்று கேட்ட போது எந்த மறுமொழியும் சொல்லவில்லை. அப்போது நாங்கள் கையிலிருந்த பொல்லால் அடித்தோம். ஐயோ மெடம் அருகே போய்ப் பார்த்தால் எங்கட பெரிய ஸேர்''

திடுக்கிட்டு அவர்களின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த திருமதி புண்ணியவர்தன வீதிக்கிறங்கி சந்திப் பக்கமாக ஓடத் தொடங்கினார். அவரது இருகால்களில் காணப்பட்ட வாத நோயைக் கூட அந்நேரத்தில் அவர் மறந்து போய்விட்டார்.

திருமதி புண்ணியவர்தன சந்தியை நெருங்கும் போது, அக்கம் பக்கத்தவர் சிலரும் அங்கே வந்து கொண்டிருந்தார்கள். ஒருவரின் உதவியுடன் கீழே அமர்ந்து கொண்டிருந்த புண்ணியவர்தன அவர்களின் தலையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

ஒருவரின் கையிலிருந்த அரிக்கன் லாம்பின் வெளிச்சத்திற்கு, கீழே அமர்ந்திருந்த தனது கணவனைக் கண்ட திருமதி புண்ணியவர்தன அவரைக் கட்டியணைத்துக் கொண்டு ஓலமிடத் தொடங்கினாள். புண்ணியவர்தன அவர்களால் கழற்றப்பட்ட அவரது கட்அவுட் அவருக்கு சற்றே தூரத்தில் நிலத்தில் விழுந்து கிடந்தது.

# லீலாவதி ரீச்சர்

கீழ் வகுப்பு மாணவர்களை வீட்டுக்கனுப்பியதோடு லீலாவதி ரீச்சரின் அன்றைய வேலை பூர்த்தியாகியது. பதினொன்றரை மணி வரையில் இரண்டாம் வகுப்பு மாணவர்களோடு லீலாவதி ரீச்சர் பெரும் யுத்தமே நடாத்துகிறார். போதாக்குறைக்கு அந்த வகுப்பிலுள்ள அறுபத்தைந்து பிள்ளைகளதும் வழக்கு விசாரித்து, சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் போது, அவரது உயிரே போய்விடும். அவர்களைக் கண்காணிப் பதைத் தவிர, கற்பிப்பதற்கு ரீச்சருக்கு எங்கே நேரம் கிடைக்கிறது?

ஏதாவதொரு பாடத்தைக் கற்பித்து பயிற்சி கொடுத்துவிட்டு வந்து கதி ரையில் அமர்ந்து கொள்ள முன், கிடைத்த கொப்பியொன்றில் எதை யாவது கிறுக்கிக் கொண்டு ஓடோடி வந்து மேசையைச் சுற்றி முண்டிய டிப்பார்கள். லீலாவதி ரீச்சரின் தலையில் வேதனை வந்து முட்டுவது அந்த நேரத்தில் தான்.

பழக்கமற்ற கோணத்தில் நிலத்தில் அமர்ந்தபடி அதிகமான பிள்ளைகள் எழுதும் எழுத்துக்கள் உறுப்பமைவதில்லை. இது தொடர்பாக லீலாவதி ரீச்சர் எவ்வளவு முயற்சித்தும் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை. பெரேரா ஸேரும் பிள்ளைகளின் கையெழுத்தைத் திருத்து வதற்காகத் தான் அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பார்.

“இவங்கள் என்றைக்கென்றாலும் பஸ் கொன்தஸ்தர் வேலைக்குத் தான் லாயக்கு”- இது பெரேரா ஸேர் எப்பொழுதும் சொல்லும் கதைதான். புதுப்பந்தி நிலத்திலமர்ந்து புத்தத்தைக் கால் மீது வைத்துக் கொண்டு எழுதுவதால் தான் அவர் அவ்வாறு சொல்வார். இவ்வாறான பிழைகளுக் காகத் தண்டிப்பதால் பயனில்லையென்பதை லீலாவதி ரீச்சரைப் போலவே பெரேரா ஸேரும் அறிந்திருந்த போதிலும், கற்பிப்பதற்காக அவர்கள் செய்யும் யுத்தத்தினால் அது ஞாபகம் வருவதில்லை.

சின்ன வகுப்புப் பிள்ளைகளின் கூத்தும் ‘ஆஹோ’வென்று சத்தமிடுவதும் லீலாவதி ரீச்சரைப் பாதிப்பதில்லை. இருந்தும் சிலபோது அவளுக்கு அவர்கள் மீது அனுதாபமே ஏற்படும். அவர்களைத் தண்டிக்கும் எண்ணம் அவருக்கு வருவதேயில்லை.

வகுப்பிலிருக்கும் அறுபத்தைந்து மாணவர்களில் முப்பத்தைந்து பேருக்கு மட்டுமே வாங்கு கதிரைகள் உண்டு. காலுடைந்த வாங்கு கதிரைகளை ஒன்று சேர்த்து எந்த நேரம் உடைந்து விழுமோவென்ற நிலையில் இன்னும் பல மாணவர்கள் அமர்ந்திருந்தனர். கழுவேறியிருந்தாலும் குழப்படியை விட முடியாத சிறுவர்கள் சிலவேளை அவற்றோடு சரிந்து விழுவார்கள். அப்போது ஓரிருவர் பயங்கரமாக அழுவார்கள். சிலருக்கு அது வீரச் செயற்பாடாக இருக்கும். விழுந்தவர்கள் நொந்த இடத்தைத் தடவியபடி சிரிப்பார்கள்.

அதிகமான பிள்ளைகள் தரையிலேயே அமர்ந்து கொள்வார்கள். சிலர் மெழுகுக் கடதாசி அல்லது பிஸ்கட் உறைகளை விரித்து அதிலமர்ந்து எழுதுவார்கள். சிலர் நிலத்தில் குப்புறப்படுத்தபடியும் இன்னும் சிலர் படுத்தபடியும் எழுதுவர். மற்றும் சிலர் ஒரு காலை மடித்தும் மறுகாலை நீட்டியும் அமர்ந்து கொண்டெழுதுவார்கள். சிலர் பயிற்சியை எழுதி முடித்த பின் அப்படியே நிலத்தில் நித்திரையாகி விடுவர்.

தமது எல்லைக்குள் இன்னொருவர் பக்கமிருந்து மண்துகள் வீசுப் பட்டாலும் அவர்கள் சண்டை பிடிப்பார்கள். அங்கு சின்ன எல்லைப் பிரச்சினையொன்று ஆரம்பித்து விடும். தற்செயலாக ஒருவனின் பென்ஸில் நுனி இன்னொருவனின் உடலில் பட்டால் பெரும் சத்தமிட்டுக்

கொண்டுவந்து லீலாவதி ரீச்சரிடம் முறைப்பாடு தெரிவிப்பர். பாடசாலை தொடங்கியதிலிருந்து பதினொன்றரை வரையில் லீலாவதி ரீச்சர் இந்த யுத்தத்திற்கு முகம் கொடுப்பாள். அவர்களோடு தொண்டையில் நீர் வற்றும் வரையில் சத்தமிட்டு பதினொன்றரையாகும் போது அவரது வாய், தொண்டை, நெஞ்செல்லாம் வலியெடுக்க ஆரம்பித்துவிடும்.

கீழ்ப் பிரிவு மாணவர்களை விடுவதற்காக பதினொன்றரை மணிக்கு மணியொலித்ததும் பழக்கத்தின் படி, வெளியேறுவதற்கான மணியடிக்கும் வரை பிள்ளைகள் வரிசையாக நிற்பர். இதற்கிடையில் ஒருவன் இன்னொருவனுக்கு பென்சிலால் அல்லது பேனையால் குத்திவிடுவான். செய்யக் கூடாததையெல்லாம் செய்வார்கள். தனக்கு முன்னாலிருப்ப வனைத் தள்ளிவிடுவார்கள். அப்பொழுது வீடு போய்ச் சேரும் வரை தடவித் தடவிச் செல்ல லீலாவதி ரீச்சர் குட்டிவிடுவார். அதன் பின்னர் அவர் அவ்வாறு நோவித்ததற்காகக் கழிவிரக்கப்படுவார். மணியடித்ததும் பிள்ளைகள் உடைத்துத் தகர்த்துக் கொண்டு ஓடுவார்கள். அப்போது தான் ரீச்சருக்கு சொர்க்கம் தெரிவது போலிருக்கும்.

இன்றைய வேலைகள் முடிவுற்று பிள்ளைகள் சற்று நேரத்திற்கு முன்பு தான் வெளியேறிச் சென்றார்கள். அதன் பின்னர் அமர்ந்து கொண்ட லீலா வதி ரீச்சரின் மேசைக்கருகே நன்ஸி ரீச்சர் வந்தார். அவளது கையில் பெயர்ப் பட்டியல் போன்றதொரு ஒற்றையிலிருந்தது. 'இன்னொரு சிக்கல் தான்' அதைக் கண்டபோதே ரீச்சர் நினைத்தார்.

''ரீச்சர் மிஸிஸ் சூரியப் பெருமவின் மகளின் கல்யாணத்துக்கு உங்களையும் இன்வைற் பண்ணியிருக்காங்கதானே''

''எனக்கும் கார்டொன்று தந்திருக்காங்கதான்''

''அதுதான் நாங்கள் பிரைமறி ஸெக்ஷனால பிரஸன்ட் ஒன்டு கொண்டு போக முடிவு செய்திருக்கிறம்''

லீலாவதி ரீச்சரின் தலை விறைத்துக் கொண்டு வருவது போல் தெரிந்தது.

''வெடிங் இன்டகொன்டினட்டிலதான் இருக்கு. இனி பிரஸன்டும் இடத்துக்கேற்றபடி இருக்கணுமே''

லீலாவதி ரீச்சரின் இதயத்துக்குள் இன்னொரு இடி விழுந்தது.

''அதனால் ஒரு ரீச்சரிடம் செவன்டி பைவ் ருபீஸ் எடுக்க முடிவு செய்து கொண்டோம்''

''செவன்டி பைவ் ருபீஸ்'' தனது வசனங்களில் எவ்வளவென்றறிய அவருக்கு ஐந்து நிமிடங்கள் அளவில் எடுத்தது. மனதால் சொன்னாள்.

''வன், ரூ, த்ரீ, ஃபோ, ஃபைவ், ஸெவன், செவன்டி ஃபைவ். எழுபத் தைந்து''- தனது மூளையில் விறைப்புக் கோடுகள் படர்வது லீலாவதி ரீச்சருக்கு விளங்கியது.

''எழுபத்தைந்து ரூபா'' லீலாவதி ரீச்சர் தன்னையறியாமலேயே சொல்லிவிட்டார்.

''ஆ..... பிரனாந்து ரீச்சரின் மகனின் கல்யாணத்துக்கு சேர்த்தது இருபத்தைந்து ரூபா தானே?''

''அது இனி ஊரில் செய்த கல்யாணம். இது இன்டகொன்டினன்டில் செய்றது! நாங்கள் அவமானப்படக் கூடாதல்லவா?''

''இருந்தாலும் எல்லோரையும் ஒன்று போல் மதிப்பதுதானே நல்லது? பிரனாந்து ரீச்சரின் மகனின் கல்யாணத்திற்கும் இருபத்தைந்து ரூபா வீதம் சேர்த்துத்தானே பரிசு வாங்கினோம்''

எழுபத்தைந்து ரூபா கொடுப்பதிலுள்ள கஷ்டத்தைச் சொல்லாமல் லீலாவதி ரீச்சர் இவ்வாறு சொன்னார்.

''எனக்குத் தெரியாது. இது அடுத்தவர்களோடும் கதைத்து டிசைட் பண்ணின விடயம்''

நன்ஸி ரீச்சர் போய்விட்டார். 'அதைத் தீர்மானிக்கும் போது ஏன் எங்களிடமும் கேட்கவில்லை!' என்று கேள்வி எழுப்புவதற்கு வார்த்தைகள்

ஒன்று சேர்ந்த போதும் அதை வெளிப்படுத்துவதற்கு லீலாவதி ரீச்சருக்கு சத்தியிரருக்கவில்லை.

நன்ஸி ரீச்சர் போவதை கோபமும் வெறுப்பும் அப்பாவித்தனமும் ஒன்று கலந்த நிலையில் லீலாவதி ரீச்சர் பார்த்தபடியிருந்தார்.

'அவங்க பெரிதனம் காட்ட நாங்க தண்டம் கொடுக்க வேண்டும்....ம்'

லீலாவதி ரீச்சர் தனக்கே சொல்லிக் கொண்டார். இப்படியான விடயங்களை வெளியே பேசுமளவுக்கு அவரிடம் தைரியமிருக்கவில்லை.

இந்தப் பள்ளிக்கூடத்தில் சுமார் முப்பது ஆசிரியர்கள் இருந்த போதிலும், எவருடனும் அளவுக்கதிகம் லீலாவதி ரீச்சர் கதைப்பதில்லை. கீழ் வகுப்பு ஆசிரியர்களைத் தவிர்த்தால், ஏனையவர்களோடு ஓரிரு வார்த்தைகள் கதைக்கக் கிடைப்பது அபூர்வம் தான். கீழ்ப் பிரிவு வகுப்புகளில் கற்பிப்ப வர்களோடும் பெரிதாக பஜனை செய்வதில்லை. அவர்கள் மத்தியில் கஷ்ட நஷ்டங்களோடிருப்பவள் லீலாவதி ரீச்சர் தான்.

நன்ஸி ரீச்சரின் கணவன் வங்கி முகாமையாளர். சூரியப்பெரும ரீச்சரின் கணவன் கொந்தராத்துக்காரர். பிரனாந்து ரீச்சரின் கணவன் எழுதுவினை ஞர். லீலாவதி ரீச்சரின் கணவன் ஒரு பஸ் நடத்துனர்.

மற்ற ரீச்சர்மார் ஒன்று கலக்கும் போது தமது கணவன்மார் பற்றியும், சாரி, பிடவை, சட்டை மோஸ்தர்கள் பற்றியும், பிள்ளைகளின் கெட்டித் தனங்கள் தொடர்பாகவும் வீட்டில் செய்யும் தின்பண்டங்களின் சுவை, குணம் பற்றியும், வீட்டில் காணப்படும் சாமான் சட்டிகளையிட்டும் எல்லை யில்லாமல் கதைப்பார்கள். இவர்களின் இப்படியான கதைகள் லீலாவதி ரீச்சருக்குப் பிடிப்பதில்லை. ''எங்க ஹஸ்பன்ட்'' அல்லது ''எங்கட அவர்'' என்பதை மிகுந்த பெருமையுடன் உச்சரிப்பார்கள். ஆனால் லீலாவதி ரீச்சர் ஒருநாளும் தனது கணவனை 'எங்கட ஹஸ்பன்ட்' அல்லது 'எங்கட அவர்' என்று அறிமுகம் செய்ய நினைப்பதேயில்லை.

லீலாவதி ரீச்சர் ஏனைய ஆசிரியைகளோடு ஒன்று சேர விரும்பாமைக்கு அவர்கள் கதைக்க எடுத்துக் கொள்ளும் விடயங்கள் காரணமாக அமையவில்லை. அவர்கள் ஒவ்வொரு நாளும் தேநீர் இடைவேளையின்

போது சாப்பிடுவதற்காக பாண், நூடில்ஸ், கட்லட், பெற்றிஸ் இப்படிப் பலவிதமான உணவுகளை கொண்டு வருவர். அவர்களோடு கூட்டுச் சேர்வ தாயின் தானும் அந்த மட்டத்தில் ஏதோ கொண்டு வந்தாக வேண்டும்.

காலையில் பணிஸொன்று சாப்பிட்டு உள்ளங்கைச் சீனியுடன் கொஞ்சம் தேநீர் பருகிவிட்டு வீட்டிலிருந்து புறப்படும் லீலாவதி ரீச்சர் ஓய்வு நேரத்திற்கும் தேநீர் மாத்திரமே எடுத்துச் செல்வார். தேநீர் வேளைக்கு இன்னும் ஏதாவது கொண்டு போவதாயின் அதற்கு மேலதிகமான செல வேற்படும். அதையெல்லாம் அவள் தனது பிள்ளைகளுக்காகவே அர்ப்ப ணிப்பாள். எவ்வாறாயினும் லீலாவதி ரீச்சர் குருவிகள் போல் நினைத்த நினைத்த நேரமெல்லாம் சாப்பிடப் பழகிய பெண்ணல்ல.

இப்படியான எந்தக் காரணத்தோடும் ஏனைய ரீச்சர்மார்களுடன் இணைந்து போக லீலாவதி ரீச்சர் விரும்பவில்லை. அவர்கள் மத்தியில் அவள் எவருமற்ற அப்பாவியாகவே காணப்படுவாள். அதனால் பதினொன் றரைக்குப் பிள்ளைகள் வெளியேறிய பின் தனது கதிரையில் அமர்ந்தது தனது மனதில் கொதிக்கும் ஆயிரமாயிரம் பிரச்சினைகளோடு ஒரு மணி வரை தனிமையாக நேரத்தைக் கடத்துவாள்.

வீட்டார் கொண்டு வந்து ஏற்பாட்டுக்கமைவாகவே தனது கணவரை அவள் விவாகம் செய்தாள். மாணவ ஆசிரியர் பதவி மூலம் ஆசிரியையான லீலாவதி ரீச்சர், பலதும் பத்துமுள்ள குடும்பமொன்றிலிருந்து ஆசிரிய சேவைக்கு வந்தவளல்ல. நல்லதொரு தொழிலைச் செய்வதற்கான தகுதி யும் அவளிடம் இருக்கவில்லை. குறைந்த பட்சம் உருவத் தோற்றத் திலாவது அடுத்தவர் மனதில் இடம் பிடிக்கும் வல்லமையும் அவளுக்கிருக் கவில்லை. உயர்ந்த இடங்களைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்ற தேவையும் அவளுக்கிருக்கவில்லை. தனது கணவனைத் திருமணம் செய்ததிலிருந்து அவரிடம் வாங்கிய அடியுதைகளைக் கணக்கிடவே இயலாது. சாப்பாடு சிறிது தாமதித்தால் அடி. சுடச்சுடக் கொடுத்தாலும் அடி. ஆறிய பின்பு கொடுத்தால் உதை. மற்றவை எப்படிப் போனாலும் அவருக்கு தடிமல், காய்ச்சல் பிடித்தால் அதற்கும் அவளே குற்றவாளி. தன்னைவிட கணவனிடம் அடிவேண்டிய பெண் வேறெவரும் இருக்க

முடியாதென்ற நிலை. பிள்ளைகள் வளர்ந்து உயர்ந்த பின் அவரது சண்டித்தனம் சற்றே குறைந்துள்ளது.

இப்பொழுது லீலாவதி ரீச்சருக்கு ஐம்பத்தி நான்கு வயது. இவ்வளவு காலமும் கணவனின் கண்டிப்புக்களைப் பொறுத்துக் கொண்டு வாழ்ந்ததைத் தவிர, அதற்கு மாற்றாக அவள் எதுவும் சிந்தித்தது கூட இல்லை. பிள்ளைகளது சகல கருமங்களும் அவளது சம்பளத்தைக் கொண்டே நடைபெற்று வந்துள்ளது. அவர் சம்பாதித்த ஒவ்வொரு சதத்தை யும் குடிப்பதற்கும் ரேஸ் போடுவ்தற்குமே செலவிட்டார். பண மோசடியொன் றில் சம்பந்தப்பட்டு குற்றவாளியாக வேலை இழந்து நின்ற பல சந்தர்ப்பங்க ளில் அவருக்குக் குடிப்பதற்குக் கூட லீலாவதி ரீச்சர் தான் காசு கொடுத் தார். கொடுக்காவிட்டால் அடி. கொடுத்தால் குடித்துவிட்டு வந்து அடி.

இவை அனைத்திற்கும் மத்தியில் தனது நான்கு பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க லீலாவதி ரீச்சர் பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. மூத்தவள் சுமனலதா, இரண்டாவது ஜயஸேன, மூன்றாவது பியஸீலி, கடைக்குட்டி குஸுமலதா.

தனது பிள்ளைகளை சிரமத்தோடு வளர்த்தெடுத்த போதும், ஒருவர் கூட சரியான முறையில் படித்துக் கொள்ளாததையிட்டு, லீலாவதி ரீச்சர் நீண்ட நாட்களாகவே பச்சாதாபப்பட்டாள். குடும்பத்தில் ஒரே ஆண்பிள்ளையான ஜயஸேன சாதாரண தரம் கூட சித்தியடையவில்லை. மூன்று நான்கு வருடங்கள் நாதியற்று அலைந்துவிட்டு இப்பொழுது கூட்டுறவுக் கடையொன்றில் பில் எழுதுகிறான்.

மூத்தவள் சுமனலதாவைப் பற்றி நினைக்கும் போது லீலாவதி ரீச்சரின் மனம் எரியத் தொடங்கும். அவளது காலப் பலன் பற்றி எப்படி நினைப்பது? சீதனம் கொடுப்பதற்கென்று எதுவுமே இல்லை. பாண் வெதுப்பகம் போன்ற இருண்டு போன பழைய கால வீடும், கால் ஏக்கர் காணித்துண்டும் ஜயஸேனவுக்கு எஞ்சாவிட்டால் அவனுக்குக் கிட்டுவது நடுவீதிதான். குறைந்த பட்சம் மனதை வெல்லக் கூடிய தோற்றமாவது சுமனலதாவுக் கில்லை. தன்னைப் போன்றதொரு முகம் தான் அவளுக்கும் வாய்த்துள்ளது.

சுமனலதாவைவிட்டால் இன்னும் இருவர் வரிசையிலிருக்கின்றனர். ஒன்றரையாகும் போதும் இதைப் பற்றி நினைத்து நினைத்தே லீலாவதி ரீச்சரின் தலைவலி அதிகமாகும்.

நன்ஸி ரீச்சர் வந்து போனதிலிருந்து லீலாவதி ரீச்சரின் தலையிலே நெருப்புக் கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் தங்களது இயலுமைகளுக்கேற்பவே இப்படியான சந்தர்ப்பங்களில் முடிவெடுப்பார் கள். அந்த அமைப்புகளில் தன்னைச் சேர்த்துக் கொள்ளாதது ஏனென்று லீலாவதி ரீச்சருக்குத் தெரியும்.

கொந்தராத்துக்காரர்களின் வங்கி அதிகாரிகளின் மனைவிமாருக்குப் பணத்தின் அருமை தெரிவதில்லை. எழுபத்தைந்து ரூபாவின் பெறுமதி லீலாவதி ரீச்சர் போன்றவர்களுக்கே விளங்கும். இங்கு சொல்கின்ற கல்யாணம் லீலாவதி ரீச்சரின் தராதரத்திற்கு எப்படியும் ஒத்துவரு வதில்லை. பரிசுக்கு எழுபத்தைந்து ரூபா ஒதுக்கினாலும், பிரச்சினை அத்தோடு முடிவதில்லை. அன்றைய தினம் கொழும்பு போய் வருவதற்கு இன்னும் ஐம்பது ரூபாவென்றாலும் தேவை. தான் நாளாந்தம் அணியும் நான்கு சாரிகளுக்கு மேலதிகமாக பாதுகாத்துவரும் சாரி கூட இந்தப் பயணத்திற்குப் பொருத்தமானதல்ல. தான் பாவிக்கும் செருப்புக் கூட்டம் இன்டகொன்றினல் ஹோட்டல் பளபளக்கும் தளத்திற்கு ஏற்றதுமல்ல. அதை அணிந்து கொண்டு நடக்கும் போது எழுகின்ற 'சடஸ் படஸ்' சத்தத்தை நிறுத்த ரீச்சரால் எப்படியுமே இயலாது.

தினசரிப் பத்திரிகையை இதுவரை வாசித்துக் கொண்டிருந்த பெரேரா ஸேர், லீலாவதி ரீச்சர் நின்ற பக்கமாக வந்த பழக்க தோஷத்தினால் அல்ல. அவருக்கு இன்று ரீச்சருடன் கதைக்கக் கூடிய ஒரு பிரச்சினையி ருந்தது. எழுபத்தைந்து ரூபாப் பிரச்சினை பெரேரா ஸேருக்கும் சிக்கலான பிரச்சினைதான். ஆரம்பப் பிரிவில் கடமையாற்றும் மூத்த ஆசிரியர் அவர். அவரும் லீலாவதி ரீச்சரைப் போன்று பிரச்சினைகளால் நசுங்குண்டு வாழ்பவர் தான்.

''என்ன ரீச்சர்? எழுபத்தைந்து ரூபா தயாரா? அவங்களுக்குப் பூசிக்க?''

''அவங்க எங்களை பிடித்து விழுங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறாங்கள்''

''இல்லாதவங்கட கஷ்டத்த விளங்கிக் கொள்ளாத கூட்டம்''

பெரேரா ஸேரின் கதையால் லீலாவதி ரீச்சரின் பக்கம் இன்னொரு வாக்கு விழுந்தது.

''அவங்களுக்கு பிரசன்ட் வாங்க காசு கொடுத்து எனக்கு என்ற பிள்ளைகளைப் பட்டினி போட முடியாது''

''ஆசிரியர்கள் என்ற வகையில் இன்னும் இரண்டொரு வருடம் இங்க இருக்க வேண்டியிருப்பதால், சாதாரணமானதொரு தொகையென்றால் கொடுக்கலாம். அப்படியில்லாம எழுபத்தைந்து கணக்கில் கொடுக்க யாரிடமிருக்கு?''

பெரேரா ஸேர் ஐந்து பிள்ளைகளின் தந்தை. எல்லாப் பிள்ளைகளுமே பள்ளிக்கூடம் போகிறார்கள். அவரது சம்பளம் தான் ஒரேயொரு குடும்ப வருமானம். அந்த வகையில் குடும்பச் சுமையை இழுப்பதென்பது பெரும் போராட்டம் தான்.

ஒட்டுப் போட்ட மஞ்சள் பரவிய தேசிய உடையும், துண்டுதிரும் கபிலம் படிந்த சைக்கிளும் பெரேரா ஸேரின் பொருளாதாரச் சிக்கலை அடையாளப்படுத்தின.

லீலாவதி ரீச்சரும் பெரேரா ஸேரும் ஒரே விதமான பிரச்சினைகளால் அல்லற்படுவதால், அநேகமாகத் தமது பிரச்சினைகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வர்.

பெரேரா ஸேரும் குறித்த கல்யாணத்திற்குப் போகாதிருக்கவே தீர்மானித்திருந்தார். இந்த முடிவுக்கு லீலாவதி ரீச்சரைப் பாதித்த விடயங்களே காரணமாயின.

பெரேரா ஸேர் நாற்பது வயது தாண்டித் தான் திருமணம் செய்தார். இதனால் அவரது பிள்ளைகள் இன்னும் சின்னவர்கள் தான். மூத்தவனுக்குப் பதினாறு வயதாகிறது. ஓய்வு பெற நெருங்கியுள்ள போதிலும், தனது பிள்ளைகளின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியாதிருப்பதையிட்டு அவ்வப்போது லீலாவதி ரீச்சருடன் கலந்துரையாடும்

பெரேரா ஸேர், தான் வயது போய் திருமணம் செய்து கொண்டதையிட்டுத் தன்னையே நொந்து கொண்டு, பச்சாதாபப்படுவார். பிள்ளைகளின் கல்வித் தேவைக்கான செலவு அதிகரித்துள்ளமைதான், அவரது இல்லாமையை இந்தளவுக்கு மேற்கிளம்பச் செய்துள்ளது. மேலதிக செலவுகளையெல்லாம் தவிர்த்துவிட்டு மிகவும் சிக்கனமாக வாழ்க்கையை கொண்டு நடத்த பெரேரா ஸேர் பழகியிருப்பது இதனால்தான்.

தோற்றப்பாட்டில் மாறுபட்ட போதும் பெரேரா ஸேருக்கும் லீலாவதி ரீச்சருக்கும் ஒரேவிதமான பிரச்சினைகளே இருக்கின்றன. நீண்ட காலமாகவே இருவரிடமும் காணப்படும் இயலாமையையும் இல்லாமை யையும் பரஸ்பரம் புரிந்து வைத்திருந்ததால் ஒருவரோடொருவர் ஆதரவும் அனுதாபமும் கொண்டிருந்தனர்.

பெரேரா ஸேர் லீலாவதி ரீச்சரின் மேசையருகே வருவது தனக்கேற்பட்ட கவலையை அவருடன் கதைத்து மனதை லேசாக்கிக் கொள்வதற்காகத் தான். அல்லது லீலாவதி ரீச்சரின் பிரச்சினை பற்றிக் கதைப்பதற்கே! இருவரும் ஒன்று சேர்ந்து தத்தமது மனதிலே வலியெழுப்பும் காயங்களைத் தடவி சுகம் அனுபவிப்பர்.

இந்தப் பிரச்சினை காரணமாக பெரேரா ஸேரும் லீலாவதி ரீச்சரும் இழுத்தடித்துக் கொண்டிருக்கும் சூரியப் பெரும ரீச்சரின் மகளின் திருமணத்திற்கு எழுபத்தைந்து ரூபா கொடுக்கும் விடயம், அவிழ்க்காம லிருக்கக் கூடிய முடிச்சொன்றல்ல.

''பாருங்க...... இவங்க அடுத்தவங்களைப் பற்றிக் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கிறாங்களில்லயே''

பெரேரா ஸேர் மீண்டும் எழுபத்தைந்து ரூபா அன்பளிப்பு கொடுக்க இயலாதென்ற எதிர்ப்பைக் கிளறினார். ஆனாலும் அவரது குரல் ஆதரவற்ற ஒன்றுதான்.

இதற்கிடையில் லீலாவதி ரீச்சரின் மேசையருகே பத்திரிகையைக் கக்கத்திலடித்தபடி சோமரத்ன வந்தார். அவர் ஆசிரிய தொழிற் சங்கவாதி. அவர் பொருளாதார சிறப்புப் பட்டதாரி. இருந்தும் அவர் ஆறாம் வகுப்புக்குப்

பொறுப்பாசிரியராகவிருந்தார். திருமணமாகாத அந்த இளைஞர் நல்ல மனதுடையவரென லீலாவதி ரீச்சர் கருதினார். சோமரத்னவுடனும் பெரேரா ஸேருடனும் கதைப்பதற்கு லீலாவதி ரீச்சருக்கு விருப்பம். அவர்கள் அடுத்தவர்களின் துயரம் அறிந்தவர்களென்று அவளுக்குத் தெரிந்திருந்தது.

''லீலாவதி மிஸ்..... நன்ஸி நோனா குண்டொன்று போட்டா என்ன?''

சோமரத்ன கதைப்பதற்கு ஒரு நுனியைப் பிடித்தார்.

''அதைத்தான் நாங்களும் கதைத்துக் கொண்டிருக்கிறம்''? பெரேரா ஸேர் சொன்னார்.

''நானென்றால் இருபத்தைந்து ரூபா தான் கொடுப்பன். ஒருவருக்கொரு மாதிரி. இன்னொருவருக்கு இன்னொரு மாதிரி. அப்படிச் செய்ய முடியாது. நானென்றால் இருந்தாலும் கொடுக்கமாட்டன்''

''அதத்தான் நாங்களும் யோசித்தோம்''

தன் பக்கத்திற்கு இன்னொரு வாக்குக் கிடைத்த மகிழ்ச்சியில் லீலாவதி ரீச்சர் சொன்னார்.

''நானும் அதைத்தான் சொல்றன்''

சோமரத்னவின் முடிவால் தைரியமடைந்த பெரேரா ஸேர், அவரது முடிவுக்கு நீரும் பசளையுமிட்டார்.

''ஒவ்வொருத்தரும் தங்கட பெருமைய நிலை நாட்ட ஆட்டம் போடுறாங்க..... ம்..... நாங்க...... நாங்க படையல் வைக்கணும்''

தனது எதிர்ப்பைத் தெரிவிக்க இது நல்ல வாய்ப்பென்று கருதிய பெரேரா ஸேர் கடுமையாகப் பேசினார்.

''எனக்கென்றால் இந்தக் கிளிக்கைப் பிடிப்பதேயில்லை. ஒவ்வொரு விதமாக அழகாக உடுத்திக் கொண்டு வந்த போதும் தெரிந்ததொன்றுமில்லை. வட்டி அம்மாக்கள் எவ்வளவோ மேல். தொழில் மகத்துவமென்பது கொஞ்சம் கூட இல்லை''

சோமரத்ன கதையை எங்கிருந்து ஆரம்பித்தாலும் கொண்டு வந்து தொழிற் சங்கத்திலேயே முடிப்பார்.

அப்பொழுது பிரனாந்து ரீச்சர் திடீரென்று வந்தார். அந்தளவு பிழையான பெண்ணில்லாத போதும், தன்னைப் பெரிதாகக் காட்டிக் கொள்ள கடும் முயற்சியெடுப்பவர். வசதி வாய்ப்புக்களில் அவ்வளவு சாதகமான நிலை காணப்படாத போதும் நன்ஸி ரீச்சரின் முகாமில் இணைந்து கொள்ள பெரிதும் பிரயத்தனப்பட்டார். நன்ஸி ரீச்சரின் குழுவைச் சேர்ந்த ஏனைய ரீச்சர்களிடம் இருக்குமளவு சாரி சட்டைகள் இல்லாத போதும் அவரது நூல் இழுபட்ட நிறம் மங்கிய சாரிகளை நன்ஸி கோஷ்டியினரின் பாணியிலேயே அணிந்து கொள்வார். அவள் மிகவும் சிரமப்பட்டு ஆங்கிலச் சொற்கள் சிலதைக் கலந்தே கதைப்பார்.

பிரனாந்து ரீச்சரின் இந்த மனப் பிரமைமிக்க செயல் சிலபோது சோமரத்ன, லீலாவதி ரீச்சரின் முன்னிலையில் நிந்தனைக்கு ஆளாவதுமுண்டு.

பிரனாந்து ரீச்சரும் தனது கணவனை, 'எனது ஹஸ்பன்' என்ற பதப் பிரயோகத்துடன் அறிமுகப்படுத்திக் கொள்ள மிகவும் ஆசைப்படுபவர். இருந்தும் அவளது கணவனான சில்வாவின் அப்பாவித் தனமான மெலிந்த தோற்றம் ஞாபகம் வரும் போது லீலாவதி ரீச்சருக்குக் கவலையேற்படும். கூடவே 'ஹஸ்பன்ட்' என்று சொல்ல பொருத்தமற்றவராகவே காணப் பட்டார்.

''இது..... அந்தப் பிரசன்டுக்கு நீங்களெல்லாம் காசு கொடுக்கிறீங்களா?''

''நான் கொடுப்பது இருபத்தைந்து ரூபா தான்''

பெரேரா ஆசிரியரும் லீலாவதி ரீச்சரும் ஒன்றும் கதைக்கவில்லை.

''கணக்கென்றால் பாரம் தான். போகிற போக்கைப் பார்த்தால் கொடுக்காமலும் இருக்க முடியாது''

''பிரனாந்து ரீச்சர் நீங்க எழுபத்தைந்து ரூபா கொடுங்க. முடியாட்டா நூற்றி எழுபத்தைந்தென்றாலும் கொடுங்க.... நீங்களெல்லாம் யாரிடம்

கேட்டு அப்படி முடிவு செய்தீங்கள்? ஒருவர் இருவரால் அப்படிக் கொடுக்க முடிந்ததற்கு, எல்லோராலும் அப்படிக் கொடுக்க முடியாது''

''இது நான் செய்ததொரு வேலயல்ல மிஸ்டர் சோமரத்ன. மிஸிஸ் நான்ஸி தான். எழுபத்தைந்து கணக்கில் சேர்ப்போமென்று சொன்னா. மற்றப்படி இருபத்தைந்து ரூபா சேர்த்து என்னதான் செய்ய முடியும்? அது மிகவும் ஹய்கிளாஸ் வெடிங்கொன்று. ஹோட்டல் பீஸ் மாத்திரம் ஐம்பதினாயிரமாம்''

பிரனாந்து ரீச்சரின் இந்தக் கதைகளை பெரேரா ஸேரும் லீலாவதி ரீச்சரும் கேட்டுக் கொண்டிருந்த போதும் அது அவர்களுக்கு கோபத்தை யன்றி மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை. ஊதாசீனத்துடன் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தனர். வாயைப் பொத்திக் கொண்டு சோமரத்ன கதைக்குக் காது கொடுத்தார்.

''சூரியப் பெரும ரீச்சரின் மகளுக்கு ஐந்து லட்சம் சீதனம் கொடுக்கி றாங்களாம். இருக்கிற வீடும் மகளுக்காம்''

லீலாவதி ரீச்சரின் இதயத்திற்கு குண்டூசியால் குத்துவது போன்ற வேதனை.

''அவங்களுக்கு கொடுக்க முடியாமலென்ன? அவங்கட கணவன் கொந்தராத்துக்காரனல்லவா? அடித்துச் சம்பாதித்த காசு இருக்கும். அப்படியே கொண்டு வந்து கொடுப்பதுதானே''

சோமரத்னவால் வாயை மூடிக் கொண்டிருக்க முடியவில்லை.

''மகளைக் கட்டப் போவது கஸ்டம்ஸ் ஒஃபிஸர் ஒருவராம். கொழும்பில் லட்சக்கணக்கு பெறுமதியான வீடொன்று கட்டியுள்ளாராம். நேற்றோ முந்தநாளோ கொரோனயோ கொரல்லவோ ஒன்றும் எடுத்தாராம்''

''ஆ..... அப்படியென்றால் சரி. கஸ்டம்ஸ் ஒஃபிஸர் ஒருவரென்றால், இலட்சக் கணக்கிற்கு வீடு கட்டியுள்ளாரென்றால், காரொன்றும் வாங்கியிருக்கிறாரென்றால் ஆள் முதலாம் நம்பர் பயங்கரக் கள்ளனாக இருக்க வேண்டும். சூரியப் பெரும பரம்பரைக்குப் பொருத்தமானவர்தான்.

தீர்வை வரி மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய ஆதாயத்தை அவர்கள் பலி கொடுக்கிறார்கள். அவர்கள் இன்பம் அனுபவிக்கும் பணம் இந்நாட்டி எல்லோருக்கும் சொந்தமான பணம்''

''அது எப்படி அவ்வாறாக முடியும்?''

''ஐயோ..... எனக்கென்றால் சோமரத்ன சொல்வதொன்றும் விளங்குவதில்லை''

''அதுதான் மிஸ்..... இன்று எங்கட நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரும் துக்ககரமான விஷயம்''

பிரனாந்து ரீச்சருக்கு சோமரத்னவின் கதை எதுவும் ஏறவில்லை. சோமரத்ன சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக வேகமாகக் கருத்துத் தெரிவிப்பவர். அவை அவளைப் பாதித்திருக்குமென்று லீலாவதி ரீச்சர் நினைத்தார்.

எந்த விஷயத்தையும் விளங்கிக் கொள்ள வேண்டுமென்ற தேவை பிரனாந்து ரீச்சருக்கில்லை. அவளுக்கும் எழுபத்தைந்து ரூபா பெரிய காசாக இருந்த போதும் தனது குழுவுக்குள் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்வது அவசியமென்பதால் அவள் நூறு ரூபாவென்றாலும் கொடுக்கத் தயாராக இருந்தாள். பிரனாந்து ரீச்சர் போக வெளிக்கிட்டார்.

''மிஸ் இந்த மோசமான வேலைகளுக்கு நான் எதிர்ப்புத் தெரிவிப்பது உங்களெல்லோருக்குமாகத்தான். கஷ்டமானவர்களும் இருப்பதால் அந்தப் பக்கமாகவும் கொஞ்சம் யோசித்திருக்கலாம் தானே? நான் எதிர்ப்புக் காட்டுவது உங்கள் எல்லோருக்குமாகத்தான்''

''இருந்தாலும் இந்தப் பெண் போய்ச் சொல்லிக் கொடுப்பாவோ தெரியல்ல சோமரத்ன''

''போய்ச் சொல்லி இந்தப் பெரிய மனிசிகள் என்னை என்ன செய்யப் போறாங்க? ஒருவேளை கதைக்காமலிருக்கக் கூடும். அதனால் எனக் கென்ன நட்டம்? அப்படிப்பட்ட மனிதர்களோடு பழகுவதே பாவமில்லையா? எப்படியென்றாலும் பரவாயில்ல. நீங்கள் இருவரும் இருபத்தைந்துக்கு

மேல் கொடுக்க வேண்டாம். நானும் கொடுக்கமாட்டேன். நான் இப்பொழுது சோட் லீவு போட்டு விட்டு வீட்டுக்குப் போறன். இந்தப் பத்திரிகையை வாசித்து எனக்கு நாளைக்குத் தாருங்கள்''

சோமரத்ன அங்கிருந்து சென்றார். மேசை மீது அவர் வைத்துச் சென்றது ஆசிரியர் சங்கத்தின் உத்தியோகபூர்வப் பத்திரிகை. அவர் ஒருநாளும் பெரேரா ஸேருக்கோ லீலாவதி ரீச்சருக்கோ பத்திரிகை வாங்கச் சொல்வ தில்லை. இருந்தாலும், ஒவ்வொரு இதழையும் தவறாமல் படிக்கக் கொடுப்பார்.

லீலாவதி ரீச்சருக்கு வாசிப்பதற்கு விருப்பமில்லை. இளமைக் காலத் தில் ரீச்சர் ஆசிரியர் சங்கத்தில் சேர்ந்திருந்தார். தற்பொழுது அப்படி யொன்று இருப்பது கூட அவருக்கு தெரியாது. அவருக்கு அதுபற்றி யோசிப் பது பயனுள்ளதாகத் தெரியவில்லை. இப்படியானதொரு கணவனால் வாழ் நாளெல்லாம் உதை வாங்கிக் கொண்டு, பிள்ளைகளுக்காகச் சொல் லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் லீலாவதி ரீச்சரால் ஆசிரியர் சங்கச் செயற்பாடு பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்?

தவிரவும், தனது தொழில் தொடர்பாகப் புதிதாக சிந்திக்கத் தொடங்கு மளவுக்கு லீலாவதி ரீச்சருக்கு காலம் இருக்கவில்லை. தேவையும் கூட இல்லை. அடுத்த வருடம் அவர் ஓய்வு பெற வேண்டிய நிலையிலுள்ளார். சேவையை நீடித்துக் கொள்ள வேண்டிய நாட்டமுமில்லை. ஆசிரியை என்ற வகையில் மட்டுமன்றி பெண்ணென்ற முறையிலும் அவள் மிகவும் களைப்புற்ற வாழ்வையே கடத்துகிறார்.

எழுபத்தைந்து ரூபா சேர்ப்பது தொடர்பான பிரச்சினை ஏனைய ஆசிரியைகளுக்குச் சிக்கலில்லாதிருக்கும் போது, தனக்கு மாத்திரம் அது தாங்க இயலாத சுமையாகிப் போனமை லீலாவதி ரீச்சருக்குள் ஒரு வகையில் இயலாமையையே வெளிப்படுத்தியது.

பெரேரா ஸேரும் சோமரத்னவும் தன்பக்கமிருப்பதையிட்டு லீலாவதி ரீச்சருக்கு சிறிது நிம்மதி.

வகுப்பறை பாழடைந்திருந்தது. பேயோடிய அம்பலம் போல்

அலங்கோலமாகக் காணப்பட்டது. இலைகள், கடதாசி, நிலக் கடலைத் தோல் என்று எங்கும் பரவியிருந்தது. நன்ஸி ரீச்சர் கடைசி வகுப்பறையில் ஆங்கிலம் கற்பித்தார். பெரேரா ஸேர் கையில் தடியோடு பிள்ளைகளின் குழப்படியைக் கட்டுப்படுத்த சுற்றிச் சுழன்று கொண்டிருந்தார்.

நன்ஸி ரீச்சர் சத்தம் லீலாவதி ரீச்சரின் வகுப்புக்குக் கேட்டது. அவருக்கு நன்ஸி ரீச்சரின் கற்பித்தல் முறையோ அவரின் குரலோ விருப்பமானதல்ல. பிள்ளைகளும் விரும்புவதும் கிடையாது.

லீலாவதி ரீச்சர் மேசையில் தலை சாய்த்துக் கண்களை இறுக்கி மூடிக் கொண்டார்.

பாடசாலை விடுவதற்கு மணியடித்துச் சிறிது நேரத்தில், நாலாம் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் வாங்கு கதிரைகளைப் புரட்டிக் கொண்டு ஓடும் சத்தத்தைக் கேட்டு லீலாவதி ரீச்சர் திடுக்கிட்டுக் கண் திறந்தார். உடனே கைக்குட்டையால் வாயையும் முகத்தையும் துடைத்துக் கொண்டார். மண்டபத்தின் தொங்கலால் நன்ஸி ரீச்சரும் பிரனாந்து ரீச்சரும் வருவதைக் கண்டு உடனடியாகத் தனது வெளிறிய கறுப்புக் குடையையும் பேகையும் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு முகம் கொடுக்காமல் போக வெளியேறினார். வேகமாக நடந்த ரீச்சரின் செருப்பு ‘சடஸ் படஸ்’ சென்ற சத்தத்தை இடைவிடாது எழுப்பியது. அதைப் பற்றி லீலாவதி ரீச்சர் எந்தக் கவனமும் கொள்ளவில்லை.

# தொடரும் உறவுகள்

வியர்வையால் தோய்ந்த பிந்துவா, அழுக்குப் படிந்து நிறம் மாறிய தந்திப் பத்திரத்தை, மிகுந்த சிரமத்துடன் எழுத்துக் கூட்டி வாசித்துக் கொண்டிருந்தான்.

பிந்துவா என்பது அவனது பட்டப் பெயர். அவனது உண்மையான பெயர் குணசேன. மேற் சொன்ன பட்டப் பெயர் அவனது தாயினாலேயே வைக்கப்பட்டது. காலம் சென்ற அவளது உடலம் மண்ணோடு மண்ணாகி நீண்டகாலம். அது இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த விஷயம். அப்போது பிந்துவாவிற்கு ஐந்தே வயது. தனது தாய் நெருப்புக் காய்ச்சல் பிடித்து செத்துப் போனதாக அவன் கேள்விப்பட்டுள் ளான். அழுக்கில் புரண்டபடி தன்பாட்டில் வாழந்த நினைவுகளோ உணர்வுகளோ அவனது மனதிலே எஞ்சியிருக்கவில்லை.

''என்ற தங்கம் சுமனா! நீ இல்லாமல் நானெப்படி வாழ்வேன்''

அப்பாவின் சாராய வாடை பிந்துவாவுக்கு நல்ல ஞாபகம். எப்பொழுதுமே பாழடைந்து போன...... விருப்பத் தோற்றமற்ற அந்த வீட்டிலே அன்று ஊர்ச் சனமெல்லாம் ஒன்று கூடியிருந்தனர். நடைபெற்றுள்ள நிகழ்வை அவன் வாய் ; றந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது தாய் மிகவும் அமைதியாக இரு கைகளையும் கட்டியபடி சவப் பெட்டிக்குள் தூங்கிக் கொண்டிருந்தாள். நாளாந்தம் பழக்கப்பட்டது போல் அடி பட்டுக் கொண்டு..... பேச்சுக் கேட்டுக் கொண்டு..... நிந்தனைக்கு ஆளாகிக் கொண்டு....... மரணத்துள் வாழ்ந்து கொண்டிருந்த தனது தாயின் முகத்திலே நிம்மதியான தோற்றம் படர்ந்திருந்தது இன்றும் அவனுக்கு ஞாபகம்.

வருகை தந்திருந்த எல்லோருமே மிகவும் அதிர்ச்சியுற்றவர்களாக தனது தாயைப் பார்த்துக் கொண்டிருந்ததையும் பிந்துவா மறக்கவில்லை. அந்த ஒவ்வொரு முகங்களிலும் காணப்படும் ஆழ்ந்த சோகத்தை விளங்கிக் கொள்ள அவன் முயற்சியெடுத்தான்.

குடும்பத்தோடு மிகவும் நெருங்கிய சிலர் தனது அம்மாவின் சடலத்தை அணைத்துக் கொண்டு ஓலமிட்டனர். தானும் அழ வேண்டுமா? என்பது பற்றி தீர்மானித்துக் கொள்ள முடியாமல் பிந்துவா அப்பாவியாகி நின்றான். அதன் பின்னர் சிலர் ஒன்றிணைந்து பெட்டியின் பலகைத் தட்டுக்களை மூடி வெளியே கொண்டு சென்றனர். பிந்துவாவின் அப்பா அழுதபடி பின்னால் நடந்து சென்றான்.

''டேவிட் அழுவது கவலையிலல்ல, வெறியில்.....'' ஒருவன் இன்னொரு வனின் காதுக்குள் சொன்னான். இருவருமே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் 'பகஸ்'ஸென்று சிரித்துவிட்டார்கள்.

பிந்துவாவுக்குத் தாயின் பால் மணம் போலவே தந்தையின் சாராய நெடியும், தாயிடம் பால் குடிக்கும் காலத்திலிருந்தே பழக்கப்பட்டு விட்டது.

''ஐயோ பாவம்! பால் குடிப்பிள்ளை இதன் பிறகு தாயில்லாமல் யார் தான் பார்ப்பார்களோ'' வயதான தாய்மார் இருவர் தன்னைப் பார்த்து இவ்வாறு சொல்லிப் பெருமூச்சு விட்டது பிந்துவாவுக்கு இன்னும் ஞாபகம்.

அவர்கள் இருவரும் மிகுந்த அனுதாபத்தோடு தலையைத் தடவிய போது, அதன் முன்பு என்றுமே அறிந்திராத இயலாமை பிந்துவாவுக்குத் தெரிய ஆரம்பித்தது. தனது வாழ்க்கைக்குப் பெரியதொரு குறைபாடு ஏற்பட்டுள்ள யதார்த்த நிலை அப்போது தான் அவனுக்குத் தெரிந்தது.

தனது தாய் இப்போது செல்வது மீண்டும் திரும்பி வராத பயணமென்பதும் அவனது சிந்தனையில் பட்டது.

அந்த வேளையில் சத்தமிட்டு அழவேண்டும் போல் அவன் நினைத்தான். இருந்தும் மரண ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த வர்கள் தமக்கிடையே பலதும் பத்தும் கதைத்தபடி சென்றதால், அது அழுவதற்குப் பொருத்தமான நேரமாகப் பிந்துவாவுக்குப் பட.வில்லை.

சனங்கள் ஒன்று சேர்ந்து தனது தாயை வைத்து மூடிய பெட்டியை, ஆழமாகத் தோண்டிய குழியினுள்ளே இறக்கி, கைளால் மண்ணள்ளி 'தொக் தொக்' என்ற சத்தத்துடன் பெட்டியின் மேல் போட்டார்கள். மனதி லெழுந்த கவலையை அடக்கிக் கொண்டு பிந்துவா அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சவப் பெட்டிக்கு மேலாக மண்ணிறைத்து மூடியவர்கள், மண்ணைக் குவித்து கடதாசிப் பூவடமொன்றையும் வைத்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

தனது கையிலிருந்த தந்திப் பத்திரத்தை சுருட்டி வெளியே வீசிவிட்டு கடவையைத் தாண்டினான் பிந்துவா.

பிரேமாவதி வீட்டுத் தோட்ட எல்லையில் நிலம் கொத்திக் கொண்டிருந் தாள். அவள் பிந்துவாவின் சிறிய தாய். அதாவது தனது அப்பாவின் இரண்டாவது மனைவி. நெருப்புக் காய்ச்சல் பிடித்துத் தனது தாய் கால மான பின், பல வருடங்களாக எட்டாம் தூண் அருகில் தேநீர் கடையில் வாழ்ந்த விதவையான குணவதியுடன் நட்புக் கொண்ட டேவிட், பின்நாளில் அவளது மகளான பிரேமவதியைக் கடத்திக் கொண்டு போய்விட்டான்.

பிந்துவாவின் அப்பா முன்னர் கராஜ் பாஸாக தொழில் செய்தவன். பிரமேவதியுடன் தலைமறைவான பின் அவன், திவுல்லாவையில் கை விடப்பட்ட சேனையொன்றில் குடியேறினான். அதன் பின்ன அங்கு சைக்கிள் திருத்தும் வேலையை ஆரம்பித்தான். விங்கள் வேலை செய்வ தோடு சேனையில் பயறு, கௌபி, மரவள்ளி போன்றவற்றைப் பயிரிட்டான். விங்கள் வேலையால் சம்பாதித்த பணத்தின் பெரும் பகுதியைக் குடிப்ப தற்கே செலவிட்டான் டேவிட்.

பிந்துவா கடவையால் பாய்ந்து, தொண்டையைச் செருமிய போது, செய்த வேலையை வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்த பிரேமாவதி, மண் வெட்டியை அந்த இடத்திலேயே போட்டுவிட்டு அவன் முன்னே வந்தாள்.

பிரேமாவதி தன்னைக் கண்டதும் கவலையால் அழுது புலம்புவா ளென்றே பிந்துவா நினைத்தான். ஆனால் பிரேமாவின் கண்ணில் ஒரு துளிக் கண்ணீர் கூட எஞ்சியிருக்கவில்லை. முகம் சோர்ந்து போயி ருந்தது.

''இன்று காலமே தான் தந்தி கிடைத்தது''

பிரேமாவதி இருண்ட முகத்தில் சிரிப்பை வெளிப்படுத்தாமல் குடிசையின் பின் கதவைத் தூக்கி ஒரு பக்கமாக வைத்தாள். பிந்துவா உள்ளே நுழைந்து அங்கிருந்த மருதங்குற்றியின் மேல் அமர்ந்து கொண்டான்.

பிந்துவா கழுத்தைச் சுழற்றிப் பல முறை குடிசையினுள்ளே கண் ணோட்டம் செலுத்திய போது மடிப்புக் கட்டில், பீங்கான் கோப்பை, சட்டி முட்டி, பழைய பாய், ஹாட்போட் பெட்டி, தொங்கிக் கொண்டிருந்த பழைய உடுப்புக்கள், மூலையில் சாத்தப்பட்டுள்ள விளக்குமாறு, அதனருகே சணல் விரிப்பில் குவிக்கப்பட்டிருந்த விங்கள் ஆயுதங்கள் முதலியனவே பார்வைக்கு எட்டின. முன்பக்க ஓரமாக மஜங் பூசப்பட்ட சைக்கிள் செய்ன், ரிம், ஃபெடல் என்பன தொங்கிக் கொண்டிருந்தன.

பிடவை சட்டகத்தில் தனது அப்பாவின் இரண்டு சாரங்கள், சேட், பனியன் போன்றவை இன்னும் சுருண்டபடி கிடந்தன.

டேவிட் இறந்து இரண்டு வாரங்களாகி விட்டன. குடித்துவிட்டு எருமைபோல் சந்தியிலிருந்து வீட்டுக்கு வருகையில், ஆலமரப் புற்றுப் பாம்பை மிதித்துவிட்டான். அதன் பின்னர் இரண்டே நாட்கள் தான் உயிர் வாழ்ந்தான். பாம்பு தீண்டிய நேரம் பொல்லாததாம்.

பின் கதவண்டை சாய்ந்து நின்று ஆழமாக மூச்சு விட்ட பிரேமா அடுத்த மூச்சுக் காற்றை உள்ளிழுத்துக் கொண்டாள். அவளது மனதிலே

தேங்கியிருப்பது கவலையா? நிம்மதியா? என்பதையிட்டு பிந்துவா யோசிக்க முனையவில்லை.

''எனக்கு இன்னக்கித்தான் டெலிகிராம் கிடைத்தது. எங்கட பக்கம் டெலிகிராம் வாரதில்ல. இங்கிருந்து டெலிகிராம் அடித்தால் நடந்து போவது போல்தான். அக்கம் பக்கத்திலுள்ள யாரும் தபால் கந்தோர் பக்கம் போனால் தான் கிடைக்கும்''

வண்ணாத்தி வில்லுக்கப்பால் மொரபதாவையில் தான் பிந்துவா வாழ்ந்து வருகிறான். அவன் ஒரு முதலாளியுடன் சேர்ந்து கள்ளமாக மரம் அனுப்புவதில் ஈடுபட்டு வருகிறான். தனது தந்தை பிரேமாவதியுடன் ஓடி விட்ட பின் அவன் பாட்டியுடன் தனித்துப் போனான். அவ்வப்போது போய்க் கொண்டிருந்த அவனது பாடசாலை வாழ்க்கை ஐந்தாம் வகுப்புடன் முற்றுப் பெற்றது. தோள் உயர்வதற்கு முன்பே இடம்மாறி இடம்மாறி வாழ வழி தேடித் திரிந்த பிந்துவாவின் இறுதிப் பெறுபேறாகக் கள்ளப் பலகை கிழிப்பதில் சம்பந்தப்பட்டான்.

மருதங்குற்றியில் அமர்ந்தபடி பிந்துவா பிரேமாவதியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளது சிவந்த தோலைத் தள்ளிக் கொண்டு எலும்புக் கூடு வெளிப்பட்டு நின்றது. அவள் இவ்வளவு காலமும் இந்தக் குடிசையில் தன்னந்தனியாக எப்படி வாழ்ந்தாள்? ஒவ்வொரு இடமாகப் பிடுங்கிப் போட்டிருந்த மரவள்ளித் தண்டுகள் காணப்பட்டன. அளவாகத் தட்டிய கௌபிக் கதிர்கள் கோணிச் சாக்கில் காயப் போடப்பட்டிருந்தன. பிரேமா வயிற்றுப் பசியை இவற்றால் தான் தீர்த்துக் கொள்கிறாளா? இதன் பிறகு யார் அவளுக்கு ஒத்தாசை?

தோட்டத்தில் இன்னும் இரண்டொரு மரவள்ளிச் செடிக்கும் மேல் நிற்கவில்லை. இரண்டாம் முறையும் அகற்றிய பின் கௌபிச் செடிகளின் இடையிடையே இரண்டொரு கதிர்களைக் காணமுடிந்தது. பிரேமாவதி தனது தகப்பனோடு நடாத்திய குடும்ப வாழ்வைப் பற்றி எண்ணிப் பார்ப்பது கஷ்டமானதல்ல.

தனது அம்மா வாழ்ந்த காலத்தில் அப்பா கொடுத்த அடி உதைகளைக் கண்ட பிந்துவாவுக்கு உமிழ் நீரைக் கூட விழுங்க முடியவில்லை.

பிரேமாவதிக்கு இதைவிட வித்தியாசமான அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பு இருந்ததா?

"நீ இன்றைக்குப் போகமாட்டாய் அல்லவா?" தேநீர்க் கோப்பையையும் சீனிக் கறண்டியையும் நீட்டியபடி பிரேமாவதி கேட்டாள்.

"இனிப் போக நேரமில்லை. நாளை காலமே போறன்" பலகை யன்னலுக்கூடாக வெளியே பார்த்தபடி சொன்னான். சூரிய ஒளி மெல்ல மறைந்து போய் உலகம் இருளில் அமிழ்ந்து கொண்டிருந்தது.

தோட்டத்தில் நின்ற சில மரவள்ளிச் செடிகளில் ஒன்றைப் பிடுங்கி, அதன் தோலகற்றி அடுப்பில் வைத்தாள். பின்னர் குப்பி விளக்கொன்றைப் பற்ற வைத்து வீட்டினுள் வைத்தாள். அப்போது வெளிச்சம் முற்றாகவே அகன்று இருள் கவிந்து கிடந்தது. குப்பி விளக்கிலிருந்து பரவிய வெளிச்சம் கபில நிறக் கிடுகின் மீது விழுந்து பொன்னிற ஒளியாய் அறையெங்கும் பரவியது.

முடித்திருந்த சாக்குக் கட்டிலை விரித்து அதில் சாய்ந்து கொண்ட பிந்துவா விளக்கின் சுடரைப் பார்த்தபடி யோசிக்கலானான். மரவள்ளிக் கிழங்கை அடுப்பில் வைத்த பிரேமாவதி குடிசைக்குள் வந்து ஓலைச் சுவரில் சேர்ந்தவளாக பிந்துவாவைப் பார்த்தாள். லாம்புக் குப்பியின் மெல்லிய ஒளி பிரேமாவின் உடல் மீது விழுந்து, அவளது முகம், வாய், கை, கால்களில் இளம் பொன்வண்ணத்தைத் தடவியிருந்தது. பகல் வேளையில் அவளது முகம் மற்றும் அங்கங்களில் காணப்பட்ட முதிர்ந்த மெலிந்த தன்மை, குப்பி லாம்பின் இருளால் மூடிமறைக்கப்பட்டுள்ளது போலிருந்தது. சற்று நேரம் பிரேமாவையே பார்த்துக் கொண்டிருந்த பிந்துவாவுக்கு என்றுமில்லாததொரு தனிமை தெரிந்தது.

"இப்பொழுது நீ என்ன செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறாய்?"

"எனக்குத் தெரியாது பிந்துவா. திரும்ப ஊருக்குப் போகவும் முடியாது. ஊரில் என்னைக் கொல்லப் பார்த்துக் கொண்டிருக்கிறாங்கள். அம்மாவின் முகத்தைப் பார்க்கவும் முடியாது"

பிந்துவா பிரேமாவதியை ஒருவித மன அதிர்வோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''மற்ற நாட்களில் அடுத்த சேனை உக்குமெனிகா மாமியைக் கூட்டிக் கொண்டுதான் படுக்கிறன். இந்த முறை சேனையைக் கொத்தி ஏதாவது பயிர் செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறன். நான் இப்போ இந்த உலகத்தில் யாரும் எவருமில்லாத கட்டாந்தரையாகிவிட்ட பெண்''

பிரேமாவதியின் கண்ணீர் நிரம்பிய கண்கள் அரை இருளில் பளபளக்க ஆரம்பித்தது. அவளது விம்மல் அழுகையாகப் பரிணமித்தது.

''உன்ர அப்பா இருந்த போதும் எனக்குப் புதிதாக எந்தச் சந்தோஷமும் இருக்கவில்லை. இரவு முழுவதும் ஒவ்வோரிடமாக அலைந்து திரிந்து கசிப்புக் குடித்து, சூதாடி விட்டு நடு இரவுக்குப் பின்பு தான் வந்து சேர்வார். அதுவரையில் நான் தன்னந்தனியாக இருந்தன். உன்ற அப்பாவுக்கு என்ற உடம்பு மட்டுந்தான் தேவையாகவிருந்தது''

குப்பி விளக்கின் சுவாலை விட்டு விட்டு ஒளிர்ந்தது. கடைசி எண்ணெய்த் துளிகளாக இருக்க வேண்டும். எனது தகப்பனோடு நடாத்திய வாழ்க்கை மிகவும் அதிருப்தியானதென பிரேமாவதி எனக்குச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். இறக்கும் போது அப்பா ஐம்பது வயதைத் தாண்டியிருந்தார். பிரேமாவதிக்கு முப்பதுக்கு மேல் போகாது. பிரேமாவதி யின் உடலிலிருந்து இன்னும் இளமையின் எழில் ஜாலங்கள் அகன்று விடவில்லை. இது தனது சிற்றன்னையாகவிருந்த போதிலும், இவள் போன்றதொரு இளம் பெண்ணுடன் இந்த வீட்டில் இரவைக் கழிப்பது பொருத்தமானதல்லவென பிந்துவா நினைத்தான். ஆனாலும், தன்னைப் போன்றே பிரேமாவதியும் யாரெவருமில்லாமல் இந்த உலகின் கண் அப்பாவியாக நிற்கும் போது, இப்படியான எண்ணங்களால் என்னதான் பிரயோசனம்?

பிரேமாவதி மீண்டும் குடிசையிலிருந்து வெளியே சென்றது மரவள்ளி அடுப்பின் நெருப்பைப் பரீட்சிக்கத்தான் போலும்! செறிந்திருந்த இருளுக்குள் பிந்துவா தன்னையறியாமலே தூங்கிப் போய்விட்டான்.

''பிந்துவா'' என்று பிரேமா முணுமுணுத்த போது அவன் விழித்துக் கொண்டான். பிந்துவா கண்களைத் திறக்கவில்லை. பிரேமா சாக்குக் கட்டிலுக்குப் பாரமாகி மெல்ல மெல்ல பிந்துவாவின் மார்பைத் தடவினாள்.

அவனுக்குக் கூச்சத்துடன் ஒருவித திகைப்பும் ஏற்பட்டது. அவன் மெல்ல மெல்ல கண்களைத் திறந்து பிரேமாவைப் பார்த்தான்.

''நான் உனக்குச் சாப்பிட மரவள்ளி அவித்துள்ளேன். உனக்குச் சமைத்துத் தர வீட்டில் வேறெதுவுமில்லை''

பிந்துவாவின் மனதில் எழுந்த பயத்தைப் பணிய வைத்துக் கொண்டு பிரேமா மீதான அனுதாபம் தலை தூக்கியது. பிந்துவா அவளது கையைப் பிடித்துக் கொண்டான். அதனால் உற்சாகமடைந்த பிரேமாவதி பிந்துவாவின் மார்பின் மீது முகம் புதைத்துக் கொண்டாள்.

விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கு இறுதி எண்ணெய்த் துளியையும் தானம் செய்துவிட்டு அணைந்தது. அறை முழுவதும் பரவியிருந்த பேரிருளைத் துளைத்துக் கொண்டு, வான உச்சியில் பிரகாசித்த நிலவொளிக் கதிர்கள் ஓலைக் கூரையின் ஈர்க்குகளுக்கூடாக அறையினுள் நுழையத் தொடங்கின.

பிந்துவானின் அணைப்பில் பிரேமாவதி சுருண்டு கிடந்தாள். அவளது ஸ்பரிசத்தால் அவனது மனம் மாத்திரமல்ல, உடலும் விழித்திருந்தது.

''இந்த வீட்டில் உனக்குத் தனிமையாக இருக்க முடியுமா?''

''தனியே என்று என்னதான் செய்ய?''

முகில் கூட்டம் மறைந்ததோ என்னவோ தென்னோலைக் கூடாகப் புகுந்த நிலவொளி மறைந்து போய் அந்தக் குடிசை கடும் அந்தகாரத்துள் ஆழ்ந்து போனது. இரவு வேளையில் திறந்தவெளியில் நடமாடும் உயிரிகள் எழுப்பும் ஒலியும் நாய்களின் ஊளையிடலும் கடந்த பல நாட்களாக பிரேமாவதிக்கு ஏற்படுத்திய பயம் இன்று இருக்கவில்லை. அந்த மூதேவிச் சத்தங்களுக்குப் பதிலாக, பிந்துவா மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும் ஒலியே இனிய ராகமாய் அவளுக்குக் கேட்டது.

''பிந்துவா..... இனிமேல் எனக்கு நீயில்லாமல் இருக்க முடியாது. டேவிட்டுடன் நான் இவ்வளவு காலமும் வெறுப்போடுதானிருந்தன்''

''நீ எனது அப்பாவின் மனைவி''

''அந்த மனிதன் இப்போ இல்லை. அந்தக் கிழவனோடிருந்து எனக்கு எல்லாம் கசந்துவிட்டது. நான் உனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டன். நீயும் வேறு ஆதரவில்லாத ஒருவன். என்னைப் பார்ப்பதற்கு உன்னை விட்டால் வேற யார் இருக்காங்க?''

பிரேமாவின் திறந்த உடலின் அணைப்பில் மயங்கி அனுபவித்த திருப்தியின் முன்னால் பிந்துவா பதிலின்றிக் கிடந்தான். அவள் விழுந்துள்ள ஆதரவற்ற நிலையைக் கவனத்தில் கொள்ளாமல் மறுபக்கம் பார்த்துக் கொள்வது முறையானது தானா?

மீண்டும் ஒரு நிலாக்கீற்று தென்னோலைக் கிடையால் புகுந்து வந்தது. பிந்துவா நெடுங்காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்ததும், அதிருப்திக் குள்ளான பிரேமா நீண்ட நாட்களாகத் தேடி நின்றதும், ஒன்று கலந்து ஒருவருக்கொருவர் சந்துஷ்டி பெற்ற மயக்கத்தில் இருவருமே நித்திரை யில் ஆழ்ந்தனர்.

மறுநாள் விடிந்து சிறுபொழுதில் அடுத்த சேனை உக்குமெனிகா, பிரேமாவதியின் அடுப்பிலிருந்து நெருப்புக் கொள்ளியொன்று கொண்டு போவதற்காக வந்தாள்.

''பிரேமா..... நீ இன்னும் அடுப்பு வைக்கவில்லையா?''

பிரேமாவதியின் வீட்டிலிருந்து எந்தப் பதிலுமில்லை. பின் கதவு கூடத் திறந்தபடிதான் கிடந்தது. உக்குமெனிகா கழுத்தை நீட்டி உள்நிலை மையை பரிசீலித்துப் பார்த்தாள்.

வீட்டினுள்ளே மனித வாடையே இல்லை. அது மாத்திரமன்றி உள்ளே யிருந்த பிடவை சட்டைகள், திணிசுப் பெட்டி, பீங்கான் கோப்பைகள் எதுவும் காணக் கிடைக்கவில்லை. வீட்டு மூலையில் சாக்குப் படங்கில் விங்கள் ஆயுதங்கள் சிலவும், தூக்கி வைக்கப்பட்டிருந்த மஜங் பூசப்பட்ட சைக்கிள் துண்டு துணிகளும், மூலையில் காணப்பட்ட கூட்டுமாறையும் தவிர, வேறெதுவுமே வீட்டில் எஞ்சியிருக்கவில்லை. பிரேமாவதியும் இல்லை. அவள் தலைமறைவாகிப் போயிருந்தாள்.

# பெரிய தவசி அவர்கள்

பன்சாலை விடுதியின் பின்பக்கமாகவுள்ள தானசாலைப் பக்கமிருந்து வெளிப்பட்ட கிரியா, பிரம்புக் கட்டிலில் சாய்வாக அமர்ந்து கொண்டிருந்த பெரிய பிக்கு அவர்களின் காதளவுக்குத் தலையைத் தாழ்த்தினான்.

''எங்கள் பிக்கு அவர்களே! நான் போய் வாரன். இன்று நன்றாக இரவாகிவிட்டது. மனைவியும் சின்னவளும் மாத்திரம் தான் வீட்டில்''

பெரிய பிக்குவின் இரு காதுகளுக்குமிடையே ஏதோ கரகரப்பாகக் கேட்டது. சிலந்தி வலை கட்டியது போல் தெளிவற்று, அமிழ்ந்து போன கண்களின் விழித்திரை எதிரே ஏதோ அசைவது போன்ற நிழல் தெரிந்தது. அது கிரியாதான் என்பதைப் பெரிய பிக்கு உறுதிப்படுத்திக் கொண்டார்.

''என்ன சொன்ன நீ''- அவர் கேட்டார்.

கிரியா பெரிய பிக்குவின் காதுக்கு மிக நெருங்கி உயர்தொனியில் கதைத்தான்.

''பெரிய பிக்குவே நான் போறன்''

''நீ போகப் போறியா?.....ம்..... ஆ..... சரி போ. இப்போ நன்றாக இருட்டியிருக்கும்''

கிரியா தோளிலிருந்த துவாயை நிலத்தில் விரித்துப் பெரிய பிக்குவை விழுந்து வணங்கினான்.

''நலம் பெறுக''

மீண்டும் எழுந்து துவாயை தோளில் போட்டுக் கொண்ட கிரியா, ஹேரத்ஹாமி பக்கம் திரும்பி......

''ஹேர மாமா நான் போறன். அந்தக் கசாயத்தைப் பெரிய பிக்குவிற்கு வடித்துக் கொடு. அது வற்ற இன்னும் நேரமெடுக்கும்''

''நீ போ நானதை வடித்துக் கொடுக்கிறன்'' பாக்குவெட்டியை விரித்து அதில் பாக்கை வைத்து தோலகற்றியபடி ஹேரத்ஹாமி சொன்னான்.

கிரியா மீண்டுமொருமுறை பெரிய பிக்குவைப் பார்த்து சங்கையுடன் கண்களால் வணங்கி விட்டுக் கற்படிகளால் கீழே இறங்கிச் சென்று மறைந்தான். பெரிய பிக்குவின் மனதில் தனிமை பெரும் அந்தகாரம் போல் வியாபித்திருந்தது.

''கிரியா நல்லவர்''- அவன் தனக்குள் சொன்னார்.

நாளாந்த சேனை வேலைகள் முடிந்த பின் பன்சாலைக்கருகிலுள்ள குளத்தில் குளித்துக் கொள்ளும் கிரியா, தவறாமல் மாலை வேளையில் பன்சாலைக்கு வந்துவிடுவான். பெரிய பிக்குவின் எடுபிடி வேலைகளைத் தேடிப் பார்த்துச் செய்து கொடுத்தபடி, வெற்றிலை சப்பிக் கொண்டு, இரவாகும் வரை பிக்குவின் தனிமையைப் போக்கிக் கொண்டிருந்துவிட்டே வீடு செல்வான்.

சின்னஞ் சிறுவனாக இருக்கும் பொழுதே பன்சாலையுடன் தொடர்பு வைத்துக் கொண்ட கிரியா, இளைஞரான பின் ஊரில் ஒரு யுவதியைக் காதல் செய்து பன்சாலைக்கருகாமையில் சேனையொன்றில் குடிசை கட்டிக் கொண்டான். தனது வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு பெரிய பிக்குவிடமிருந்து கிடைத்த அறிவுரைகள், உதவி ஒத்தாசைகளுக்கு, செய் நன்றி மறவாமையென்ற அடிப்படையில் ஒவ்வொரு நாளும் மாலையில் பன்சாலைக்கு வருகை தந்து இரவுவரை அங்கே கழிப்பான். பெரிய பிக்கு

நோய்வாய்ப்படும் போதெல்லாம் மருந்து மாயம் தேடவும், அவற்றை அரிந்து இடித்துக் கசாயம் வைக்கவும் கிரியா காலத்தைச் செலவிடத் தவறவில்லை. இந்தக் காரணங்களால், ஒரு பிள்ளையின் மீது வைக்கும் அன்புக்குச் சமமானதொரு பற்றுதலையே கிரியா மீது பெரிய பிக்கு கொண்டிருந்தார்.

கிரியா ஒவ்வொரு நாளும் பன்சாலைக்குச் சென்றேறியதும் பெரிய பிக்கு ஊர்ப் புதினங்களைக் கேட்கத் தொடங்குவார். அதே போன்று தனது வாழ் நாள் முழுவதும் முகம் கொடுத்த அனுபவங்களை மீட்டி கிரியாவுக்கு எடுத்துச் சொல்வார்.

கிரியா பெரிய பிக்குவின் அனுபவ மீட்டல்களை மிகுந்த பக்தியுடன் கேட்டுக் கொண்டிருப்பான். அவற்றுள் சில அவன் பன்சாலையிலிருக்கும் போது சொன்ன, செய்த விடயங்கள் தான். சிலபோது அவன் குறை நிரப்பி சம்பந்தப்படுவான். கிரியா பன்சாலையிலிருந்து சென்ற பின் மீண்டும் பெரிய பிக்கு எல்லையற்ற தனிமையில் ஆழ்ந்து போனார்.

பன்சாலை விடுதியும் இருளில் மூழ்கிப் போயிருந்தது. அந்த இருளைப் போராடி அகற்ற முயன்று களைத்துப் போன தூசு படிந்த பழைய சிமிழ் விளக்கு, விடுதியின் உக்கிய பலகையொன்றுக்கு முட்டுக் கொடுத்திருந்த தூணில் தொங்கிக் கொண்டிருந்தது.

தன்னைச் சுற்றியிருப்பவற்றை அறிந்து கொள்வதற்காகப் பெரிய பிக்கு மிகவும் பிரயத்தனப்பட்டார். ஆனால் புள்ளியாய்த் தெரியும் விளக்கு வெளிச்சத்தைத் தவிர, வேறெதுவும் அவர் கண்களில் பதியவில்லை.

அவருடைய சிந்தனைகளை பயங்கரத் தனிமை விழுங்கத் தொடங்கி யது. மனதுக்குள் அரசோச்சும் தனிமையை வெளியேற்றுமாப் போல் பெருமூச்சு விட்டார்.

''ஹம்...... ஹேரத்ஹாமி..... ம்..... ஹேரத்ஹாமி''

பெரிய பிக்குவைப் போன்று ஹேரத்ஹாமிக்குக் காது கேட்பது மிகவும் மந்தம். பிக்குவின் முணுமுணுப்பு அவனுக்குக் கேட்கவேயில்லை.

''ஹேரத்ஹாமி......ம்..... ம்.....ஹேரத்ஹாமி''

பெரிய பிக்கு சத்தமிட்டு அழைத்தார். அப்படிச் சத்தமிட்டுப் பேசியபோது அவரது நெஞ்சில் களைப்புத் தெரிந்தது. அவரது இரண்டவது அழைப்பு ஹேரத்ஹாமியின் செவிப்பறையில் மெல்ல மோதியது. ஹேரத்ஹாமி தனது வெள்ளையடித்து வரும் வலுக் குறைந்த கண்களால் பெரிய பிக்குவைப் பார்த்தான். அவர் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை ஹேரத்ஹாமி ஓரளவு கண்டான். மிகவும் சிரமப்பட்டுத் தூணைப் பிடித்து அவன் எழுந்து நின்றான்.

''ஹேரத்ஹாமி எனக்கு வெற்றிலை வாய் இடியன்''

சற்று நேரம் ஹேரத்ஹாமியை எதிர்பார்த்திருந்த பெரிய பிக்கு, வெற்றிலை வாய் ஆசையைக் கைவிட்டுவிட்டார். தான் சொன்னது அவனுக்குக் கேட்கவில்லையென்று அவர் எண்ணினார். அவருக்குப் பெரும் இயலாமை தெரிந்தது.

''எங்கள் பிக்கு அவர்களே! என்ன சொன்னீங்கள்?'' ஹேரத்ஹாமி பெரிய பிக்குவின் காதுக்குள் கீழ்க் குரலில் கேட்டான்.

''ஆ.... நீ இருக்கிறாயா? உனக்குத் தூக்கம் போயிருக்குமென்று நினைத்தன். எனக்கு வெற்றிலை இடித்துக் கொள்ள கூப்பிட்டன்'' பெரிய பிக்கு அவ்வாறு சொல்லி இரண்டு மூன்று முறை மூச்சு விட்டார்.

''எங்கள் பிக்குவே! நான் வெற்றிலை இடித்து வைத்துள்ளேன்''

அது பெரிய பிக்குவிற்குக் கேட்கவில்லை. ஹேரத்ஹாமி மீண்டும் முட்டுக்காலில் குனிந்து வெற்றிலை உரலையும் பாக்குவெட்டியையும் எடுத்தான். பாக்குவெட்டியின் தலைப் பகுதியால் உரலில் உட்பகுதியை வழித்து ஒட்டியிருந்த இடித்த வெற்றிலையைக் கையில் சேர்த்துப் பெரிய பிக்குவிடம் கொடுத்தான்.

''ஆ நீ வெற்றிலை இடித்தா வைத்திருந்தாய்? என்ற மருந்து வற்றியிருக்குமோ தெரியாது''

தனது தேவையை முன்கூட்டியே உணர்ந்து வெற்றிலை வாய் இடித்து

வைத்திருந்ததையிட்டு பெரிய பிக்குவிற்கு ஹேரத்ஹாமி மீது அனுதாபம் பிறந்தது.

''ஐயோ பெரிய பிக்கு அவர்களே! கசாயம் வற்ற இன்னும் நேரமிருக்கு. அதுவரையில் வெற்றிலையைச் சாப்பிடுங்க''

''ஆ.......''- பெரிய பிக்குவின் முகத்தில் பிரகாசமானதொரு உணர்வு பிறந்திருந்தது. ஹேரத்ஹாமி இருட்டுக்குள்ளால் சமையலறைக்குச் சென்று அடுப்புக்கு நெருப்புச் சேர்த்து சூரிட்டுப் பார்த்துவிட்டு, மீண்டும் வந்து, பெரிய பிக்கு அமர்ந்திருந்த பிரம்புக் கட்டிலருகே பாய்த்துண்டொன்றை விரித்து அமர்ந்து கொண்டான். தன்னால் முடியாவிட்டாலும் கூட பெரிய பிக்குவின் எடுபிடி வேலைகளை ஹேரத்ஹாமி மிகுந்த பக்தியோடு தோள் கொடுத்துச் செய்தான்.

எழுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஹேரத்ஹாமி பன்சாலையிலேயே காலத்தைக் கடத்துபவர். ஒரே மகளை வெளியூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளான். அவனுக்கு ஐம்பது பூர்த்தியாகு முன்பே மனைவி காலமாகிவிட்டாள். அன்று முதல் எவருமற்ற அனாதையாகிப் போன ஹேரத்ஹாமி பெரிய பிக்குவின் எடுபிடி வேலைகளைச் செய்து கொண்டு பன்சாலையிலேயே நின்றுவிட்டான். நிரந்தரமாகவே வாத நோயினால் துன்புறும் ஹேரத்ஹாமி, தனது எந்த அசௌகரியம் காரணமாகவும் பெரிய பிக்குவின் வேலைகளைப் பிற்போட்டது கிடையாது.

முனகியடியே தான் ஹேரத்ஹாமி பாய்த்துண்டில் அமர்ந்தான். முதுகை வளைக்கும் போதும் நிமிர்த்தும் போதும் இடுப்போரமாக வலியெடுக்கும். அவன் முனகியது அதனால் தான். தொண்ணூற்றேழு வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் பெரிய பிக்கு சில வருடங்களுக்கு முன்புதான் நோய் வாய்ப்பட்டார். மெலிந்த தோற்றமுடைய பெரிய பிக்கு நிரந்தரமாகவே சீலம் மிகுந்த வாழ்வு நடாத்தியவர். அவர் நீண்டகாலமாக ஆரோக்கிய வாழ்வை அனுபவித்தமைக்கு, அவரது சீலமிகு தன்மையே செல்வாக்குச் செலுத்தியதாக ஆதரவாளர்கள் நம்பினர்.

காலத்தால் மனித குணமற்றவனாகக் காட்டப்பட்டு, சுற்றியுள்ள சமூகத்தால் தான் மூலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகப் பெரிய பிக்கு

பெரும்பாலும் நினைப்பார். புகழ் நாமத்தோடு செயற்பாடு மிக்க பிக்குவாகக் கடத்திய காலம் ஞாபகம் வரும்போது அவருக்குள் சோகம் தலை காட்டுகிறது. தனது முழு வாழ்க்கையிலும் உதவியற்ற நிலையால் ஏற்பட்டுள்ள தனிமையோடு நிரந்தரமாகவே அவர் சண்டை போட நேர்ந்துள்ளது.

எவ்வளவு தான் துடைத்த போதிலும் பனிபடிந்த மலர் போல் அன்னாரின் நெற்றியிலே பிரகாசமான ஒளி மாத்திரமே நிலைத்திருக்கும். எவ்வளவு தான் அவரது அருகால் சென்றாலும் கூடச் சலனிக்கும் நிழலே அவரது பார்வையிலே விழும். இந்த விகாரங்களால் செயற்பட முடியாத நிலைக்குப் பெரிய பிக்கு தள்ளப்பட்டிருந்தார். கடந்தகால விவகாரங்கள் மனதிலே நிரம்பிப் புரளும் போது பெரிய பிக்கு அசௌகரியத்திற்குள் ஆழ்ந்து போவார்.

தான் சொன்ன, செய்த விடயங்களைப் பொறுமையோடு இப்பொழுது தான் இரைமீட்ட முடிகிறது. அதனூடாக இதற்கு முன்பு கிடைக்காத புது மகிழ்ச்சியைப் போன்றே மிகுந்த துயரமும் கூட அன்னாருக்கு ஏற்படும்.

சிலவேளை கடந்த காலத்தில் தான் செய்த கெட்டித்தனமொன்று ஞாபகம் வந்து மகிழ்ச்சியேற்படும். அப்பொழுது அவருக்கு நிரந்தரமாகவே கஷ்டம் கொடுக்கும் நெஞ்சுவலி மறந்து போய்விடும். சிலபோது வாழ்நாள் பூராகவும் அனுபவித்த வேதனைகள் ஒன்று கலந்து காட்டுத் தீபோல் மூண்டெரிந்து சித்தம் கலங்கச் செய்துவிடும்.

இந்த எல்லா விடயங்களையும் எவரிடமாவது சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அந்த நினைவுகள் மனதினுள் உருண்டு புரண்டு வலி கொடுக்கும்.

''விமலானந்த பொம்பிள எடுத்திருக்கிறதா களுஹாமி சொன்னா. அவன் இப்போ பெரிய குளத்தில் மீனும் பிடிக்கிறானாம்''

விமலானந்த முன்பு பெரிய பிக்குவின் சிஷ்யன். ஒரு வருடத்திற்கு முன்பு அவன் காவியுடையைக் கலைந்து விட்டு, காணாமல் போனான். விமலானந்தாவை ஞாபகம் வந்தபோது பெரிய பிக்குவின் மனதில் வரிசைப்பட்ட உணர்வுகளை சொல்ல வெளிக்கிடவில்லை.

இருந்தும் தனது கடைசி சிஷ்யனைப் பற்றிப் பெரிய பிக்கு வைத்திருந்த எதிர்பார்ப்புக்கள் உடைந்து போனமை அன்னாருக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியது.

''அவன் காவியுடையோடு இருந்த காலத்திலும் அவளோடு நையாண்டி செய்து கொண்டுதானிருந்தான். நம்பிக்கை சபையினர் மோப்பம் பிடிக்கத் தொடங்கிய பின்னர் காவியுடையைக் கழற்றினான்''- ஹேரத்ஹாமி சொன்னது பெரிய பிக்குவிற்குத் தெளிவாகக் கேட்கவில்லை.

''இன்னொருவனுக்கு உயிர் போகும் வரை படிப்பித்தார். அவன் பட்டம் பெற்றுக் கொண்டு பன்சாலைப் பக்கமே பார்க்காமல் எங்கோ மறைந்து விட்டான்''

பெரிய பிக்கு சோகத்திலாழ்ந்தார்..... சோர்ந்து போனார்..... பெருமூச்சு விட்டார். தானே நெறிப்படுத்திப் பிக்குவாக்கிய சிஷ்யர்கள் தொடர்பாக ஞாபகம் எழுகையில் அன்னாருக்குள் எழும் உணர்வுகள், பெருந் துயரங்களோடு பிள்ளை வளர்த்து இறுதியில் அவர்கள் ஒருவரால் கூட உதவி வழங்கப்படாது கைவிடப்பட்ட தகப்பனின் மனதிலுள்ள வெறுமைக்கு ஒப்பானது.

தனது சிஷ்யகோடிகளை பிக்குகளாக்கி, சமயநெறிகளைச் சொல்லிக் கொடுத்து, கண்டிக்கு அழைத்துச் சென்று உயர் மட்டச் சங்கை செய்த நினைவலைகள் பெரிய பிக்குவின் மனதுக்குள் இடி இடித்தது. அந்த நினைவுகளால் கிளறப்பட்ட வேதனை அன்னாரை மேலும் அதிரச் செய்தது.

''சீலரத்ன மாத்திரம் தான் எனது சொல் கேட்டு முன்மாதிரியாகச் செயலாற்றினான். இருந்தும் சீலரத்ன எனக்கு முன்பே காலமாகிவிட்டார்''

பெரிய பிக்குவின் சிரேஷ்ட சிஷ்யனாகிய சீலரத்ன தேரரின் இறுதிக் கிரியைகளின் போது பெரிய பிக்கு நிகழ்த்திய குணநலன் தொடர்பான இரங்கலுரை அவருக்கு ஞாபகம் வந்தது. உண்மையாகவே அன்று அழுது ஓலமிடக் கூடியளவு சோகம் அன்னாரின் மனதிலே ததும்பி நின்றது. ஆனால் காவியுடைக்காரர் அப்படி அழுது விழுவது பொருத்தமானதல்ல என்பதால் மிகச் சிரமத்தோடு அடக்கிக் கொண்டார்.

''இந்தப் பிராந்தியத்தில் சீலரத்ன போன்று நல்ல முறையில் சீலத்தைப் பாதுகாத்தவர்கள் எவருமில்லை. அந்தளவுக்கு அன்னார் குணநலம் மிக்கவர்''- என்றார் பெரிய பிக்கு.

ஹேரத்ஹாமி குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். கட்டில் சட்டத் துடன் சேர்ந்து தூங்கிப் போன அவனது கழுத்து ஒரு பக்கமாக வளைந் திருந்ததால் குறட்டைச் சத்தம் பெரிதாகக் கேட்டது. ஆனால் இன்னுமே அவன் தன் பேச்சுக்குக் காது கொடுத்துக் கொண்டிருப்பதாகவே பெரிய பிக்கு எண்ணினார்.

நாள் பூராகவும் பெரிய பிக்குவின் எடுபிடி வேலைகளைச் செய்ததால் ஹேரத்ஹாமி களைப்படைந்திருந்தான். அவன் உயர்ந்த சத்தத்தில் குறட்டை விடுவது அதிகம் களைப்படைந்த நாட்களில் தான்.

ஹேரத்ஹாமியின் மடிப்பு விழுந்த இடுப்பிலிருந்து அணிந்திருந்த ஸாரம் அவிழ்ந்திருந்தது. அதற்கூடாக உள்ளாடையான கோவணம் வெளியே தெரிந்தது.

பெரிய பிக்குவிற்கு இந்தப் பன்சாலையிலிருக்கின்ற ஒரே உறவினரும் நண்பரும் ஹேரத்ஹாமி தான். இந்நேரத்தில் தனது ஏனைய உபயகாரர்க ளெல்லாம் தத்தமது வீடுகளில் நிம்மதியாகத் தூங்குபவர்களாக இருக்க வேண்டும். தனது தனிமைக்காக தனதருகே அமர்ந்து ஹேரத்ஹாமி விழித்திருக்கின்றான். கட்டிலில் சாய்ந்து கண்களை மூடிக் கொள்ள பெரிய பிக்கு நினைப்பதில்லை. நீண்டகாலமாக அவ்வப்போதல்லாமல் தொடர்ச்சியாகத் தூங்கிய நாள் அவரது ஞாபகத்திலில்லை. கட்டிலில் வளைந்து கண்களை மூடிக் கொள்ளும் பொழுது முதல் சிக்கலான எண் ணங்கள் அன்னாரைப் பயம் காட்டும். தனது சீவியக் காலம் முடிவடைந் துள்ளதாகவே அவர் அநேகமாகக் கற்பனை செய்வார். தனதுயிரைப் பறிப்பதற்காகப் பற்களை நீட்டியபடி கண்களை மூடிய கணத்திலேயே மாறன் வந்து தனக்கு மிக நெருக்கமாக நிற்பதாகத் தோன்றும். தன்னைத் துளைத்தெடுக்கும் ஆந்தைப் பார்வையுடன் நெருப்பு கக்கும் முகத்தோடு தன்னெதிரே மாறன் தோன்றும் போது அவருக்குக் கண்களை மூடிக் கொள்ளவே பயமாக இருக்கும். கண்களைத் திறந்து வெளியே பார்க்கும்

போது உக்கிய பலகை மீது தொங்கும் விளக்கின் வெளிச்சம் ஒளிப் பொட்டாகத் தெரிவதற்கப்பால், உலகமே அந்தக் காலத்தில் ஆழ்ந்து போயிருக்கும்.

கடந்த காலம் முழுவதும் இவ்வாறான தோற்றபாடுகளால் பயத்திற் குள்ளாகும் பெரிய பிக்கு நள்ளிரவில் கட்டிலின் மீதமர்ந்தபடி தூக்கத்தைப் பகிஷ்கரிப்பார். ஹேரத்ஹாமியும் குறட்டை விடுவது பெரிய பிக்குவிற்குத் தெரியாது. முழுப் பன்சாலையும் பாழடைந்து கிடந்தது. அவரது தனிமையில் பங்கு கொள்ள எவருமே இருக்கவில்லை.

முழு சர்வாங்கத்தையும் விறைப்படையச் செய்யும் பயங்கலந்த எண்ண அலைகளிலிருந்து விடுபடுவதற்காக, தனது முயற்சி மிகுந்த கடந்த காலத்தை முயன்று முன் கொண்டு வந்தார்.

சிறியதொரு குடிசையாக...... களிமண் சுவரெழுப்பி வெண் சுண்ணாம்பு தடவி, தென்னோலைக் கூரையமைத்து ஒழுங்குபடுத்தியிருந்த இந்தப் பிக்குமார் விடுதிக்குப் பதிலாக, பெரும் மதில் கட்டி, சிங்கள ஓடு பொருத்தி இத்தகைய விடுதி ஐம்பது வருடங்களுக்கு முன்பு கட்டியெழுப்பப்பட்டது.

ஸ்ரீமக போதியின் அரசமர அரும்பு பன்சாலை பூமியில் வேரூன்றி, உய ரமாக விசாலித்து வளர்ந்து விடுதிக்கும் கூட நிழல் கொடுத்திருக்கிறது. அதனை யானை ஊர்வலத்தோடு பன்சாலைக்கு கொண்டு வந்தமை இன்று கூட பெரிய பிக்குவிற்குள் பெரும் ஆத்மதிருப்தியை ஏற்படுத்து கின்றது.

ஊர் பங்களிப்பாளர்களிடம் மாத்திரமன்றி சுற்றயலிலுள்ள நன்கொடை யாளர்களதும் வீடுகளுக்குப் போய் பணம் திரட்டிக் கட்டியெழுப்பிய தாது கோபுரம் நிரந்தரமாகவே அவருக்கு மகிழ்ச்சியை நெருங்க வைக்கும். பகல் வேளையில் ஊன்று கோலுடன் சிரமத்துடன் முற்றவெளியில் நடக்கும் போது தனது வாழ் நாள் முழுவதும் இந்தப் பன்சாலையைக் கட்டியெழுப் பிய விதத்தை நினைத்துப் பார்த்து தனிமையானதொரு சுகத்தை அனுபவிப்பார்.

தேஜஸ் மிகுந்த அரச மரத்தின் சௌந்தர்யத்தை, பூத்துப் போன தனது

கண்களுக்குள் கொண்டு வர இயலாத போதும், அதன் முன்னால் நிற்கும் போது பெரும் குன்று போன்றதொரு நிழற் தோற்றம் பெரிய பிக்குவிற்குத் தெரியும்.

தன்னைப் பராமரித்துப் பாதுகாத்த இந்தச் சிறிய மெலிந்த உருவத் திற்கு நன்றி தெரிவிக்குமாப் போல் அரச விருட்சம் பெரிய பிக்குவின் முன்னால் அமைதியாக வீற்றிருந்தது. தான் ஊர்வலமாகக் கொண்டு வந்த அரசமர அரும்பு பெரிய பிக்குவின் ஞாபகத்தில் எழுந்தது. தெரியாம லேயே ஓடி மறைந்த கடந்த காலத்தில், தான் தனது சுற்றாடலில் எவ்வளவு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளேன் என்பதை அப்போது நினைத்துப் பார்த்தார்.

பளபளத்துக் கொண்டிருந்த தாது கோபுரம் காலத்தின் சீற்றத்தால் நிறம் மங்கிப் போய் அதன் நிழல் பெரிய பிக்குவின் கண்களில் பதிந்தது. அதற்கு மேலாகவுள்ள கோபுரக் கலசம் வெய்யிலுக்குப் பளபளப்பது அன் னாருக்குத் தெரிந்தது. அவர் அளவற்ற பக்தியுடன் தாது கோபுரக் கல சத்தை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பன்சாலை விடுதி இப்பொழுது அழிந்து போகும் சின்னம் என்ற நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளது. அதைச் சீரமைக்குமளவுக்கு ஆதரவாளர்களி டையே வளம் காணப்படவில்லை. முன்னைய காலம் போல் இப்பொழு தெல்லாம் பெரும் போகம் சிறுபோகமென்று சனங்களிடையே பொருளா தாரம் பெருகிக் காணப்படவில்லை. அதனால் உபயமளிப்போர் மிகவும் கவலையான வாழ்வையே நடாத்துகிறார்கள். இவ்வளவு காலமும் தனது வாழ்வை அர்ப்பணித்து வளர்தெடுத்தவற்றைப் பாதுகாப்பதற்கு தன்னால் உருவாக்கப்பட்ட ஒரு மாணவர் கூட எஞ்சியிருக்காததையிட்டு இதயம் விம்மி வெடிக்குமளவு வேதனைப்பட்டார் பெரிய பிக்கு.

தான் எவ்வளவு விடயங்களைச் சாதித்திருந்தாலும் கூட, அதனை ஞாபகப்படுத்தித் திருப்தி கொள்வதைத் தவிர, பாதுகாப்பதற்கான பலம் பெரிய பிக்குவிடம் மீதமிருக்கவில்லை. அவரது வாழ்வின் உள்ளார்ந்த ஆசை இறுதிப் புள்ளிவரை இறங்கியிருந்தது.

கற்பனையில் ஈடுபடுவது உண்மையில் வேதனையை வளர்த்துக்

கொள்ளவே வழி செய்யும். தனது மனதில் நிலவும் குழப்பத்தைத் தணிப்பதற்குரிய ஒரே வடிகால் ஹேரத்ஹாமிதான் என்பதைப் பெரிய பிக்கு நன்குணர்ந்தார்.

''ஹேரத்ஹாமி..... ஒருமுறை வாரியபொல பன்சாலைக்குப் புண்ணிய கருமமொன்றுக்குச் சென்றது உனக்கு ஞாபகமா? அடுத்தநாள் காலை தானம் எடுத்துவிட்டு பகல் தானத்துக்குப் பன்சாலைக்கு நடந்து வந்தோமல்லவா?''

ஹேரத்ஹாமி கடும் தூக்கத்தில் ஆழ்ந்து குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். தனது இளமைக் காலம் முழுவதும், தனது வாழ்வைப் பாதுகாத்துக் கொண்டிருந்த இளமையின் கம்பீரத்தை நினைத்துப் பார்த்தார் பெரிய பிக்கு.

''இப்போ இருக்கிற பிக்குமாருக்கு ஒரு மைல் கூட நடக்க முடியாது. நான் அந்த நாட்களில் நீண்ட தூரப் பன்சாலைக்குப் புண்ணிய கருமங்களுக்காகச் செல்வேன். அடுத்த நாள் காலை தானத்திற்குப் பிறகு பாதைக்கிறங்குவேன். பகல் தானத்திற்கு இங்கு வந்துவிடுவேன். போவதும் வருவதும் நடந்துதான். உனக்கு ஞாபகமா ஹேரத்ஹாமி? என்னோடு நடப்பதற்கு எந்த ஜாம்பவானும் அந்நாட்களில் இருக்கவில்லை''

ஹேரத்ஹாமியின் குறட்டைச் சத்தம் அதிகரித்தது.

''ஹேரத்ஹாமி..... ம்..... ம்.... ஹேரத்ஹாமி....''

எந்தச் சத்தமும் கேட்கவில்லை. அவன் நித்திரையில் ஆழ்ந்து போயிருக்கும் விடயம் பெரிய பிக்குவிற்கு இப்போதுதான் விளங்கியது.

பெரிய பிக்கு இரு கைகளாலும் மார்பை அழுத்திக் கொண்டு மீண்டும் மீண்டும் இருமினார். அதன் பின்பு இளைத்தார். மீண்டும் இருமினார். சிரமத்தோடு நெஞ்சில் இறுகியிருந்த சளிக் கட்டியை வாய்க்குள் இழுத்துக் குனிந்து கட்டிலுக்கடியில் கையை அங்குமிங்கும் அசைத்துப் படிக்கத்தைத் தேடிக் கொள்ளத் தவித்தார். சிரமப்பட்டு அதனைப் பிடித்து அருகே இழுத்து ''பு....ற்'' என்று சளிக் கட்டியைத் துப்பினார். அது படிக்கத்திற்கு வெளியேயும் அவரது கையிலும் விழுந்து வழிந்தது. படிக்கத்தைத்

திரும்பவும் கட்டிலுக்கடியில் தள்ளிய பெரிய பிக்கு துளியாய்த் தெரிந்த விளக்கு வெளிச்சத்தைக் கண்களுக்குள் சிறைப்படுத்த முயன்றார்.

எண்ணெய் முடிந்த விளக்கின் சுடர் ''புஸ்..... புஸ்'' என்று ஆடியது. அந்த ஒளி இம்முறை பிக்குவின் கண்களில் மிகவும் மங்கலாகவே விழுந்தது.

அது தவிர, முழுமையாகவே இருள் எங்கும் கவிந்து கிடந்தது. பெரிய பிக்குவின் மனம் கவலையாலும் இயலாமையாலும் துவண்டு கிடந்தது. அவரது தனிமையைத் தணிப்பதற்கு எவருமே விழிப்புடனிருக்கவில்லை. ஹேரத்ஹாமியும் நித்திரையில் ஆழ்ந்திருந்தான்.

மனதுக்குத் தொல்லை தரும் பயத்தையும் தனிமையையும் போக்கவோ என்னவோ பெரிய பிக்கு பாலி மொழிச் செய்யுலொன்றை முணு முணுக்கத் தொடங்கினார். அதனை வாய் திறந்து சத்தமிட்டுப் பாடக் கூடிய அளவுக்கு உடலில் சக்தி இருக்கவில்லை. இருந்தும் அவரது மனதுக்குச் சற்றே ஆறுதல் தெரிந்தது.

இடுப்பிலிருந்து அவிழ்ந்து சரிந்த காவியாடையை இருகைகளாலும் பிடித்து மார்பு வரை இழுத்துக் கொண்டு கால்களை நீட்டிச் சாய்ந்தார்.

சுற்றாடல் பாழடைந்து போய் அந்தப் பரப்பு முழுவதும் அமைதியில் ஆழ்ந்திருந்தது. பல வருடங்களுக்கு முன்பிருந்தே அவ்வப்போது பன் சாலைக்கு வந்து போன நாய்கள் ஒரே கூட்டமாய்ச் சேர்ந்து ஊளையிட்டன. கடும் அந்தகாரம் அப்பிராந்தியத்தையே வெறுமையாக்கியிருந்தது.

இந்தக் கும்மிருளில் ஆழ்ந்து, பூச்சுக் கழன்று அழுக்கு நிறமேறி இடிந்து விழுவதற்கு அறிகுறி காட்டிக் கொண்டிருக்கும் சுவர்களால் சூழப்பட்ட பிக்குமார் விடுதிக்குள் ஒளிரும் பழைய சிமிழ் விளக்கின் சுடர், அதன் மேற் பகுதியைக் கறுப்பாய் நிறந்தீட்டியது.

விடுதியின் நடுமுற்றத்தில் நின்ற தோடம்பழ மரத்தின் காய்ந்து போன கிளையொன்று விளக்கு வெளிச்சத்திற்கு சாடையாகத் தெரிந்தது. நெடுங்காலமாகப் பயன் தந்த இந்த தோடைமரம் இப்பொழுது விறகுக் கொள்ளியாய்க் காய்ந்து கருகி வருகிறது. அதனைப் பாதுகாத்துக்

கொள்வதற்காக ஹேரத்ஹாமி, நீர் வார்த்து எருக்கூட்டி கடந்த நாட்டிகளில் மிகவும் முயற்சித்தான். கடைசியில் அவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டான். நடுமுற்றத்தைச் சுற்றி வளைத்திருக்கும் ஒருபக்க விறாந்தையில் பிரம்புக் கட்டிலில் தான் பெரிய பிக்கு படுத்திருந்தார்.

அவர் பழைய, அழுக்குப் படிந்த காவியுடையால் தன்னைப் போர்த்திக் கொண்டிருந்தார். கட்டில் விரிப்பில் கூட வெற்றிலைச் சாறும் மருந் தெண்ணையும் வியர்வை அழுக்கும் படிந்து நிறக் கோலம் போட்டிருந்தது.

சுற்று விறாந்தையெங்கும் பாழடைந்த கட்டில், கதிரை, உடைந்த தளவாடங்கள், உக்கிய பாய்த்துண்டுகள் எல்லாம் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

கண்டு கொண்டிருந்த பயங்கரக் கனவால் திடுக்கிட்டு விழிந்த ஹேரத்ஹாமி அங்குமிங்கும் பார்த்தான். அவனது உடல் வியர்வையால் தோய்ந்து போயிருந்தது. முழுமையாகப் போர்த்தியபடி இருளுக்குள் எதுவும் புரியாது நின்றிருந்த ஹேரத்தஹாமிக்குப் பயங்கரக் கனவு நினைவு வந்த போது இதயத் துடிப்பு அதிகரிக்கத் தொடங்கியது. தன்னையறியாமல் நித்திரையாகிவிட்டதால் பெரிய பிக்குவின் கசாய முட்டியை மறந்தே போய்விட்டான் ஹேரத்ஹாமி.

''ஐயோ பெரிய பிக்குவின் மருந்து வடி......''

ஹேரத்ஹாமி தனது நலிந்த உடலை முயன்று பலமாக்கிக் கொண்டு, அவசரமாக எழுந்து குப்பி விளக்கைக் கையிலெடுத்தான். அதனைத் தலைக்குமேல் உயர்த்திப் பிடித்துப் பெரிய பிக்குவை அவதானித்த போது, அன்னார் அமர்ந்திருந்த கோணத்திலேயே வளைந்து சுருண்டு உறங்கிக் கொண்டிருப்பதை அவதானித்தான்.

ஹேரத்ஹாமி வளைந்த காலுடன் குப்பி விளக்கின் மங்கிய வெளிச் சத்தை ஏந்திக் கொண்டு இருளுடன் போராடியபடி, தொட்டுத் தொட்டுச் சென்று சமையலறைக்குள் புகுந்தான்.

அடுப்பில் நெருப்பு அணைந்திருந்தது. விறகுத் துண்டுகள் எரிந்து மிச்ச

மீதிகள் வெளியே காணப்பட்டன. ஹேரத்ஹாமி விளக்கை மேலுயர்த்திப் பிடித்துக் கசாய முட்டியின் உள்ளே அவதானித்தான்.

''ஐயோ'' ஹேரத்ஹாமி திடுக்கிட்டான்.

கசாய முட்டி முற்று முழுதாக வற்றிப் போய் மருந்துப் பொருட்கள் கறுப்பாக அடியில் ஒட்டியிருந்தது. தனக்குத் தெரியாமல் நித்திரையாகிய, பெரிய பிக்குவின் மருந்தை உரிய வேளையில் கொடுக்க மறந்ததையிட்டுத் தன் மீது கோபமும் பச்சாதாபமும் கொண்டான். குடத்தால் சிரட்டைக்கு நீர் வார்த்து முட்டியில் ஊற்றி மீண்டும் அடுப்பைக் கொழுத்தினான். நீர் மருந்துக்காரத்துடன் சேரும் வகையில் ஈர்க்குக் கட்டால் நன்கு கலக்கி, கோப்பையில் வடித்துக் கொண்டான் ஹேரத்ஹாமி.

கசாயம் உரியபதத்தை எய்தாததால் அதன் குணம் வேறுபடுமென் பதை நினைத்துப் பார்த்தான். தான் பெரிய பிக்குவிற்கு மோசமான தவறொன்றைச் செய்வதாக அவனது மனச் சாட்சி அவனைக் குத்திக் குடைந்தது. அப்படிப்பட்ட கசாயத்தைப் பிக்குவுக்குக் குடிக்கக் கொடுக்க நேர்ந்தமைக்காக அன்னார் மீது அவன் மிகுந்த அனுதாபம் கொண்டான்.

ஹேரத்ஹாமி கசாயக் கோப்பையையும் குப்பிவிளக்கையும் சிறு மேசை மீது வைத்து விட்டுப் பெரிய பிக்குவை சொற்ப நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அன்னாரை எழுப்பவும் வேண்டும் எழுப்பவும் விருப்பமின்றித் தடுமாறினான்.

அவ்வாறாக மேலும் சிறிது நேரம் பார்த்தபடியிருந்த ஹேரத்ஹாமி, பெரிய பிக்குவை எழுப்புவதற்குத் தீர்மானித்தார்.

''எங்கள் பிக்குவே...... எங்கள் பிக்குவே.....''

அழைப்புக்குப் பெரிய பிக்குவிடமிருந்து பேச்சு மூச்சு எதுவுமில்லை. அன்னாரின் உடலில் கைவைத்து அசைத்தான். பிரதிபலிப்பு எதுவுமில்லை. அவன் சிலையானான். உடல் புல்லரித்தது. கண்கள் மேலுயர்ந்தன. பயப் பிதற்றல் வித்தியாசமாக ஒலித்தது.

ஹேரத்ஹாமி மீண்டுமொரு முறை பெரிய பிக்குவின் உடலை

அசைத்தான். அன்னாரின் உடல் குளிர்ந்து போயிருந்து. அங்குமிங்கும் அசைக்கும் போது முழு உடலும் ஒரே விதமாக அசைந்தது. சர்வாங்கமும் கல்லாய்க் கனத்தது.

ஹேரத்ஹாமி சத்தமிட்டான்.

''ஐயோ...... பெரிய பிக்குவே...... கிரியோ..... கழுவோ..... டிகிரோ...... பண்டோ...... எல்லோரும் ஓடி வாருங்கோ''

குழம்பிப் போன மனதோடும் வளை காலோடும் விடுதியிலிருந்து இறங்கி, கற்களையும் முட்களையும் மிதித்துக் கொண்டு..... இருட்டுக்குள் தொட்டுத் தடவிக் கொண்டோடி காண்டாமணியின் கயிற்றைப் பிடித்து இழுக்கத் தொடங்கினான். அவனது முழு உடலும் விறைத்துக் கொண்டு வருவது போலிருந்தது. பயத்தாலும் கவலையாலும் ஏற்பட்ட ஆவேசத் தால், இழுத்த இழுவைக்குக் காண்டாமணி சோகத்தால் அழுகுரல் எழுப்பியது. ஏனைய நாட்களைப் போன்று சாந்தமான ஒலி அதிலிருந்து எழவில்லை.

''ஐயோ..... பொடியன்களே..... இங்கே வாருங்கோ''

உயர்ந்த தொனியில் ஓலமிட்டபடி, காண்டாமணியைப் பலமுறை ஒலிக்கச் செய்து, காண்டாமணித் தூணைக் கட்டிப்பிடித்துக் கொண்டான் அவன்.

''ஐயோ..... எங்கள் பெரிய பிக்குவே''- பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினான் ஹேரத்ஹாமி.

# வகுப்பறை வழக்கு

நான் வகுப்பறைக்குள் புகுந்தேன். நான்காம் வகுப்பு மாணவர்கள் என்னைப் பார்த்துச் சிரிக்க முயன்றனர். பொருத்தமற்ற பருவ மொட்டுக்களாய் அந்த முகங்கள் காணப்பட்டன. இருந்தாலும் அவை மலர்ந்திருந்தன. அதனூடாகவும் கூட சோர்வும் கவலையும் வெளிப்பட்டு நின்றது. நான் வகுப்புக்குள் புகுந்ததும், பிள்ளைகள் உடனே எழுந்து நின்றனர். அவர்களது முகம் பார்த்துச் சிரிக்க முயற்சித்தேன்.

காலைப் பொழுதிலேயே தகிக்கத் தொடங்கிய நெருப்பு வெய்யில் அவர்களுக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருந்த இற்றுப் போன தென்னோலை ஈர்க்குகளுக் கூடாகப் புகுந்து வந்து மாணவர்களின் தலையைத் தாக்கியது.

மண்டபத்தைச் சுற்றிச் சுவர்கள் இல்லை. கட்டைச் சுவர் கூட இல்லை. கொங்றீட் தூண்களும் கிடையாது. வளைந்து போன அந்தத் தூண்கள் முதிரையாகவோ காட்டு மரமாகவோ இருக்கலாம். அதுவும் நிறம் மங்கிப் போயிருந்தது.

தாங்கள் அமர்ந்திருக்கும் உடைந்து போன அல்லது ஆடிக் கொண்டிருக்கும் வாங்கு கதிரைகளைப் பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையு

மில்லை. பிரம்புப் பின்னல் அறுந்து போய்க் குறுக்கே இரு பலகைத் துண்டுகள் போட்ட ஆசிரியர் கதிரையும் எனக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை.

''வணக்கம் பிள்ளைகள்''

''வணக்கம் ஸேர்''

முதலில் நான் வரவு இடாப்புப் பதிய ஆரம்பித்தேன்.

ஒருவன் கொட்டாவி விட்டான். இன்னொருவன் வாங்கினுள்ளே தலையை மறைத்தபடி மாம்பழமொன்றை சூப்பிக் கொண்டிருந்தான். அருகே இருந்தவன் ''அங்க ஸேர் பார்க்கிறார்'' என்றான். அரைவாசி சாப்பிட்ட பழத்தை அப்படியே காற்சட்டைப் பையினுள் போடுவதை நான் அவதானித்தேன். தண்டனை கொடுக்கலாமா? என்று என் மனதிலே பிரச்சினையொன்று ஏற்பட்டது. 'இல்லை அவன் சாப்பிடட்டும்' என்று எனது உள்மனம் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டது.

''ரி. எம். ரண்பண்டா.....''

''இல்லை''

''பியசேன பண்டார.......''

''இல்லை.....''

''உபுல் குமார.....''

''இல்லை......''

''என்ன இந்தப் பிள்ளைங்க ஒருவருமே வரயில்ல''

''ஸேர் ரண்பண்டா அம்மாவோடு சேனை கொத்தப் போயிட்டான்''

நான் வெளியே பார்த்தேன். இப்போதே வெய்யில் கொதித்தது. இன்னும் சிறிது நேரத்தில் முழுச் சுற்று வட்டாரத்தையும் வெக்கை வாட்டியெடுக்கும். நிலமும் வெப்பத்தைக் கக்கத் தொடங்கியிருந்தது. மரம் மட்டைகள் வெக்கையைத் தாங்கியபடி முனங்கின. இந்தக் கொடும் உஷ்ணத்துக்குள்

தானா ரண்பண்டா சேனை கொத்துகிறான்? நான் சென்ற வாரம் எழுதிய கவிதை அடிகளிரண்டு எனக்கு ஞாபகம் வந்தது. அதனை நான் மனதால் முணுமுணுத்தேன்.

'வளரும் மனிதனாய்ச் சிறுவயதில்
வடிக்கும் வேர்வையில் பால் மணக்கும்'

''சுகததாஸ.....''

''இருக்கிறன்.....''

''கிரி பண்டா.....''

''இல்லை.....''

''ஏனாம் கிரிபண்டாவ காணயில்ல?''

''ஸேர் அவன்ற மூளையில மலேரியாவாம். ஆனமடுவ ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிட்டாங்க''

நான் வட்டமிட்டேன்.

''பியஸேன.....''

''இருக்கிறன்....''

''இருக்கிறன்.....''

''இல்லை.....''

''இருக்கிறன்....''

''இருக்கிறன்......''

''இல்லை.....''

''இருக்கிறன்...,''

''பியரத்த இங்க வா''

அவனது பெயருக்கெதிரே வரிசையாக வட்டம் விழுந்திருந்தது. நான் அந்த வட்டங்களை எண்ணினேன். அவன் என்னை நோக்கி மெல்ல நடந்து வந்தான்.

அவன் ஒன்றும் சொல்லவில்லை.

ஏதோ சொல்ல வேண்டியிருந்த போதும் வெட்கத்தோடு என்னையும் சுற்று வட்டாரத்தையும் பார்த்தான்.

''சரி நெருங்கி வா. உனக்கென்ன பிரச்சின பியரத்ன?''- நான் ரகசியமாகக் கேட்டேன்.

அவன் கண்ணீரால் பதில் சொல்ல ஆரம்பித்தான். கண்களில் நிரம்பிய கண்ணீர் கன்னங்களூடாக பெருக்கெடுக்க ஆரம்பித்தது.

''ஸேர் என்னிடம் ஒரேயொரு காற்சட்டை தான் இருந்தது. கடைசியாகப் பள்ளிக்கூடத்துக்கு வந்த நாளில் கம்பி வேலியில் சிக்கி அது கிழிந்துவிட்டது''

''என்ன செய்யப் போய் கம்பியில் சிக்கினநீ?''

''ஸேர் புளியம்பழம் பொறுக்கப் போனேன். வேலியால் பாயும் போது முள்ளுக் கம்பியில் சிக்கிக் கொண்டது''

''என்ன தம்பி தைத்துக் கொள்ளலாம் தானே?''

''முன்பே தைத்திருந்தது தான்.... நன்றாகக் கிழித்துவிட்டது''

சிறுவன் புறங்கையால் கண்களையும் மூக்கையும் துடைத்துக் கொண்டான். அழுதமையினால் இளகிய மூக்குச் சளி முகத்திலும் புறங்கையிலும் படிந்திருந்தது.

''சரி இப்போ உடுத்திருப்பது யாருடைய களிசான்?''

''தம்பியுடையது''

''தம்பி எங்கே?''

''தம்பி இன்று பாடசாலைக்கு வரவில்லை''

''என்னடா இது. அரசாங்கத்தால் தந்த துணியிருக்கே..... அதுக் கென்ன நடந்தது?''

''ஏன் பேசமலிருக்கிறாய்? சொல்லன்''

''ஸேர், அப்பா அதனை விற்று கசிப்புக் குடித்துவிட்டார்''- பியரத்னவின் பெருவிரலால் சீமெந்து இல்லாத தரை குழியாக்கப்பட்டிருந்தது.

''உன்ற அப்பா இன்னும் சில நாளில உன்னையும் விற்றுக் கசிப்புக் குடிப்பாரோ தெரியல்ல''

சிறுவனின் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளியை வரவுப் பதிவேடு உறிஞ்சிக் கொண்டது.

எனது நாவிலிருந்து வெளிப்பட்ட கடும் வார்த்தைகள் சுழன்று வந்து எனது நெஞ்சைப் பதம் பார்த்தது. தகப்பனிடம் கேட்க வேண்டிய கேள்வியை இந்தப் பிள்ளையிடம் கேட்காமலிருந்திருக்கலாமே!

''சரி இடத்துக்குப் போ......''

ஏனைய பெயர்களை நான் இயந்திரமாக வாசித்தேன்.

/

0

/

/

/

0

0

/

''இன்னக்கி எல்லாரும் சாப்பாடு கொண்டு வந்தீர்களோ?''

''ஆம் ஸேர்''- அதிகம் பேர் சொன்னார்கள். சிலபேர் முகத்தை மறைத்துக் கொள்ள முயற்சித்தனர்.

''ஸேர் கிரிபண்டா சாப்பாடு கொண்டு வரயில்ல''

''இங்க வா பார்ப்பம்..... எங்கே அடுத்தவங்கள் என்ன கொண்டு வந்தீங்க? இன்னக்கு நான் எல்லார்ட சாப்பாட்டயும் பார்க்கப் போறன். எங்கே வரிசையா வந்து காட்டுங்கோ பார்ப்பம்''

பிள்ளைகளின் உணவுக்காக அரசாங்கம் சிறிதளவு உதவி வழங்கு கிறது. அதனால் அது பற்றிப் பரிசீலிப்பது எங்கள் கடமைகளில் ஒன்றாக் கப்பட்டுள்ளது.

திறந்த சாப்பாட்டுப் பெட்டிகளை நான் பார்வையிட்டுக் கொண்டு சென்றேன்.

''சோறும் கத்தரிக்காயும்..... சோறும் சம்பலும்..... மரவள்ளி...... சோறும் பழமும்....... சோறும் பயற்றங்காயும்.....''

எனக்குப் பெருங்கவலையேற்பட்டது. இறுக்கிச் சுற்றப்பட்ட உணவுப் பொதிகளிலிருந்து எழுகின்ற வாசம் எனக்குள் விரும்பத்தக்க உணர்வை ஏற்படுத்தவில்லை.

இறைச்சி, மீன், பால், முட்டை, கடலை, பருப்பு...... போஷாக்குணவு...... புரதம், விற்றமின், காபோவைதரேற்று.

கேட்பதற்கு எவ்வளவோ கேள்விகள் இருந்தன. சொல்லிக் கொடுக்க எவ்வளவோ விடயங்கள் உள்ளன. சம்பிரதாய சுகாதாரப் பாடம் தொடர்பாகப் பெரும் வெறுப்பே ஏற்படுகின்றது.

நான் எதுவும் விசாரிக்காமல் தலையைத் தாழ்த்திக் கொண்டேன். டிகிரி பண்டாவின் பக்கமாகப் பார்த்தேன். அவன் பயந்த முகத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன் டிகிரி பண்டா சாப்பாடு கொண்டுவரல்ல?''

அவன் திக்குமுக்காடினான்.

''இங்க வா பார்ப்பம்''

அவன் என்னை நோக்கி மெல்ல மெல்ல வந்தான். முகம் சோர்ந்து வெளிறிப் போயிருந்தது.

''காலையில் சமைக்கவில்லயா?''

''இல்லை ஸேர்''

''நேற்றிரவு என்ன சாப்பிட்டாய்?''

''ரொட்டி''

''நேற்று பகல்?''

''சோறு''

''சோறும்.....''

''பால் சொதியும்''

''இன்று பகலைக்கு என்ன சாப்பிடுவாய்?''

''தெரியாது ஸேர். வீட்டில் அரிசியில்லை''

''இப்போது பசிக்கவில்லையா?''

''இல்லை ஸேர்''

ஆனால், அவனது உள்ளே பதிந்த வயிறு பசியால் நெருக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

''சாப்பிட ஏதாவது வேண்டித் தரட்டுமா?''

நான் கேட்டேன். அவசரமாக மூளையிலிருந்து மின்சாரம் போல் ஏதோ சென்று, அடி மனதுக் கூடாக மேல் மனசுக்குத் தகவல் பரிமாற்றம் நடந்தது. வார இறுதியில் வீடு செல்வதற்குத் தேவையான பஸ் செலவு மாத்திரமே என்னிடமிருப்பதை என்மனம் எனக்கு ஞாபகமூட்டியது.

''வேண்டாம் ஸேர்..... எனக்குப் பசித்திருந்து பழக்கம்''

டிகிரி பண்டா வீரம் போல் அப்படிச் சொல்லவில்லை.

''சரி அப்படியென்றா இடத்துக்குப் போ''

நான் பெயரிடாப்பை மூடினேன். பாடத்திட்டத்தின் படி இன்று கற்பிக்கவிருந்த விடயத்தையிட்டு எனக்குள் பெரும் வெறுப்பேற்பட்டது. எதனைக் கற்பிக்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொள்ள முடியாமல் நான் பிள்ளைகளைப் பார்த்தேன். பிள்ளைகளும் என்னைப் பார்த்தபடி இருந்தனர்.

# தேசப்பற்றாளன்

பெட்டிக் கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்ட டிஃபெண்டர் இராணுவ வாகனத்திலிருந்து படபடவென இறங்கிய வீரர்கள் பெட்டிக்கடையை நோக்கி வருவதைக் கண்டு சிரிமெவன் பண்டார திடுக்கிட்டான். ஓடி ஒளிப்பதற்கு இடமோ நேரமோ இல்லாததால் அவன் மௌனமடைந்து இராணுவ அதிகாரியைப் பார்த்தபடியிருந்தான். அதுவரையில் முடித்துக் கொண்டிருந்த சித்திரமும் தூரிகையும் கைநழுவி விழுந்துவிட்டன.

வீரர்கள் சூழ இறங்கி நடந்து வந்த இராணுவ அதிகாரி சிரிமெவனின் முன்னால் நின்றான்.

''யார் சிரிமெவன்?''

''நா...... நா..... நானல்ல''

''என்ன பயந்தபடி..... பயப்பட ஒரு தவறும் செய்யவில்லையே. சிறியதொரு ஆட் வேலை செய்து கொள்ள நாங்கள் வந்தோம்..... சரி யார் சிரிமெவன்?''

''நா....... நா...... நான்தான் ஸேர்''

''என்ன இது பயந்து கொண்டு..... முதலில் சிரிமெவன் அல்லவென்று சொன்னீர். இதென்ன வியர்த்துப் போய்....?''

மனதினுள்ளேயிருந்த நடுக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொற்களை ஒழுங்கமைத்துக் கொள்ளக் கடும் பிரயத்தனப்பட்டான். தனது பதவிக் கம்பீரத்துக்கு முன்னால் இந்த மனிதன் நடுநடுங்கி நிற்கும் விதத்தைப் பார்க்கையில் இராணுவ அதிகாரிக்குத் தன்னைப் பற்றியதொரு கௌரவம் ஏற்பட்டது.

''இல்லை ஸேர்..... நீங்களெல்லாம் ஒன்றாகக் கடைக்கு வந்த போது எனக்குப் பயம் ஏற்பட்டது. என்னால் ஏதாவது தவறு நடந்திருக்கலாமோவென்று......''

''இல்லை தம்பி. தம்பி பயப்பட வேண்டியதில்லை. எங்கட முகாமில் ஒரு பாஸிங் அவுட் இருக்கு. அதற்கு ஒரு தோரணம் அமைக்க வேண்டும். வாலிபர்களின் உணர்வைத் தூண்டத்தக்க இராணுவ வீரர் ஒருவரின் கட்அவுட் ஒன்று வரைந்து கொள்ள வேண்டும். அதற்காகத் தான் வந்தோம். தம்பியால் முடியும் தானே?''

துடிதுடிப்பான இராணுவ அதிகாரியின் முன் தனது மனதுள் எழுந்த அதிர்ச்சி கரைந்து போய் அதிகாரி கேட்கும் உதவியை நிறைவேற்ற சிரிமெவன் வாய் திறந்தான்.

''முடியும் ஸேர்''

''சரி தம்பி...... அப்படியென்றால் இப்பொழுதே வேலையை ஆரம்பிக்க வேண்டும். தேவைப்படும் பொருட்களுக்கு நாங்கள் காசு தருவோம். ஆனால் உழைப்பு உங்களுடையது. தம்பிக்கு விளங்குதல்லவா? நாட்டைக் காப்பாற்றப் பொடியன்கள் யுத்தத்துக்குப் போறாங்கள். அதற்கு நீங்களும் இங்கிருந்து கொண்டே உதவி செய்யலாம். சித்திரம் உங்களுடைய கணக்கில்..... சரிதானே? சித்திரத்தைக் கொண்டு போக நாளை மதியம் வருவோம். கைகளில் துப்பாக்கியோடு துணிவோடு முன்னே செல்லும் வீராவேசம் கொண்ட இராணுவ வீரரின் கட்அவுட்டொன்றை தம்பி எங்களுக்கு வரைந்து தர வேண்டும். அப்போ சரிதானே?''

இராணுவ அதிகாரி விடை பெற்றுத் திரும்பியதும் அவரது பரிவாங்கள் தடஸ் படஸ்ஸென்று ரிஃபெண்டர் வாகனத்தில் ஏறினர். அங்கிருந்து அது இராணுவ முகாமை நோக்கிப் பறந்து சென்றது.

அந்த உணர்விலேயே நீண்ட நேரமாகச் சிலையாகிப் பார்த்துக் கொண்டிருந்தான் சிரிமெவன். ஏற்பட்ட அதிர்வைத் தொடர்ந்து உடலெங்கும் கக்கிய வியர்வைத் தோய்வு நீண்ட நேரத்திற்குப் பின்னே அவனுக்கு விளங்கியது. சிரிமெவன் கைகளால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

பலவருடங்களுக்கு முன்பு திடீரென்று ஒருநாளிரவு வீட்டுக்கு வந்து பாய்ந்து தரதரவென்று அவனை இழுத்துச் சென்று ஜீப்புக்குள் போட்ட இராணுவ வீரர்களின் நினைவு அவனை அறியாமலே அவனுக்குள் சிந்தனையுடன் கூடிய பயத்தை ஏற்படுத்தியது.

இராணுவ அதிகாரியின் முன் தானொரு பொம்மை போல் நடந்து கொண்டமை சிரிமெவனுக்கு நினைவு வரவில்லை. ஆனாலும் அவ்வாறு நடந்து கொண்டதால் ஏற்பட்ட தோல்வி மனப்பான்மை அவன் மனதைக் கிளர்ச்சியடையச் செய்திருந்தது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாளை காலையில் கம்பீரமான வீராவேசமிக்க இராணுவ வீரனின் உருவத்தை வரைந்து கையளிக்கக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இராணுவ உடையணிந்த ஒருவனைக் காணும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஏற்படும் பயம் இதயத்திலிருந்து அகன்று விடாமல் பதிவாகியிருந்தது. அவற்றை அப்படியே விழுங்கிவிட முயன்றான். அவை முண்டியடித்துக் கொண்டு மீண்டும் வந்தன. இதற்கு மத்தியில் வீராவேசம் மிக்க இராணுவ வீரரின் பேருருவத்தைக் கற்பனை செய்ய கடும் முயற்சியெடுத்தான்.

❖❖❖❖❖❖❖❖❖

சிரிமெவன் பண்டார ஆனமடுவைப் பிரதானப் பாதைக்கு எட்டு மைல் தொலைவிலுள்ள பின் தங்கிய கிராமமொன்றில் பிறந்தவன். சிரமத்துடன் கல்வி கற்று உயர்தரம் சித்தியடைந்த போதும் பல்கலைக்கழகம் செல்ல ஒரு சில புள்ளிகள் போதாமையால், இரண்டு மூன்று வருடங்களாகத் தொழிலுக்காக விண்ணப்பம் அனுப்பியனுப்பிக் களைப்படைந்து

போயிருந்தான். தங்களைப் போன்று எந்த வரப்பிரசாதமும் அற்றவர்களைக் கண் திறந்து பார்க்கும் சமூக வேலைத் திட்டமெதுவும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இது பற்றித் தொடர்ச்சியாக அறிந்து வரும் சிரிமெவனுக்குள் தான் வாழும் சமூக அமைப்புத் தொடர்பாகக் கடும் சிந்தனைக் கிளர்ச்சியும் துவேசமும் வளர்ந்து வந்தது. சிறு வித்தாக விழுந்து மெல்ல மெல்ல வளர்ந்து திடீரென்று, குணரத்னவின் பேச்சுக்களால் விருட்சமாகியது.

இந்தச் சமூக அமைப்பை வீழ்த்திப் புதிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் கனவினூடே செல்லும் அரசியல் பிரவாகத்தின் பிரதேசச் செயற்பாட்டாளராக அப்போதிருந்தே குணரத்ன செயற்பட்டான்.

''இந்தச் சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்பால் எங்களைப் போன்ற சமூகப் பிரிவினர்க்கு ஒருநாளும் நன்மை ஏற்படப் போவதில்லை. எனக்கென்றால் எந்தவிதமான எதிர்பார்ப்பும் கிடையாது. எந்தவிதமான நம்பிக்கையும் கிடையாது. எங்கள் எதிர்காலத்தைத் திட்டமிட்ட சமூக அமைப்புக்குள் கொண்டுவர, நாங்கள் ஆயிரக்கணக்கில் அர்ப்பணிப்போடு செயற்படுகிறோம். கெஸட் பார்த்துப் பார்த்து அப்ளிகேஷன் போட்டுப் போட்டு இந்த அநியாயக்காரர்களின் பின்னால் போய்க் கொண்டிருக்கிறாய். நீ விரும்பினால் மாத்திரம் எங்களோடிணைந்து வேலை செய்யலாம்''

குணரத்னவின் இந்தக் கவர்ச்சியான பேச்சு சிரிமெவனின் மனதைத் தாக்கியது. இந்த சமூக அமைப்பில் எங்களுக்கான எதிர்காலம் திட்டமிடப்படவில்லை என்பதை இவ்வளவு காலமும் நிரப்பிய வேலை விண்ணப்பங்களின் பெறுபேறு காட்டியது. அவ்வாறாயின் எங்களது எதிர்காலம் மட்டுமென்ன, அதனூடாகக் கட்டியெழுப்பப்படவுள்ள எமது குடும்பத்து இளசுகளின் எதிர்காலமும், சேனைகளைக் கொத்தி கொத்தி அகாலமாய் வயதுக்குப் போய் விரக்தியடைந்து போயிருக்கும் எங்கள் பெற்றோரின் முதுமையும் கூட, திட்டமிட்ட சமூக அமைப்பொன்றை நாடிச் செல்ல வேண்டிய பொறுப்பை சிரிமெவனுக்கு உணர்த்தியது.

அன்று முதல் சிரிமெவன் குணேயுடன் ஒன்று சேர்ந்தான். தன்னோடு

அதே விதமான இளைஞர் யுவதிகள் இணைந்திருப்பதை அறிந்த சிரிமெவனுக்குள் பெரும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வேரூன்றியது.

குழப்ப நிலை உச்சமடைவதோடு அரசாங்கம் உடைந்து விழுந்து சுக்குநூறாகி விடுமென்று சிரிமெவன் கற்பனை செய்தான். அவன் தீர்மானித்த பட்டியலுக்கமையக் குறித்த கடைகளை மூடுமாறு கடிதத் துண்டுகளைக் கையளித்தான். தனிப்பட்ட அரசியல் தொடர்பான கட்டளைக் கடிதங்களைக் குறிப்பிட்டவர்களிடம் கொடுத்தான். இரவில் வீடுகளுக்குச் சென்று யன்னலைத் தட்டி அறிமுக அட்டைகளைச் சேர்த்து பாழ் கிணறொன்றில் போட்டான்.

இருந்தும் கோபத்துடனிருந்த அரச இராணுவத்தினரிடம் சிரிமெவன் எதிர்பாராத வேளையில் அகப்பட்டுக் கொண்டான். இராணுவ முகாமுக் குக் கொண்டு செல்லப்பட்ட அவனது இருகைகளும் பின்பக்கமாகக் கயிற்றால் இறுக்கிக் கட்டப்பட்டன. காலிரண்டும தடித்த கயிற்றால் முடிச்சிடப்பட்டிருந்தன.

ஜீப் வண்டியில் கொண்டு வரப்படும் போது விழுந்த உதைகளுக்கு மேலதிகமாக, முகாமுக்குச் சென்றதும் கிடைத்த எஸ்லோன் குழாய்த் தாக்குதலால் சிரிமெவன் விறைத்துப் போனான்.

கடுங்கோபத்தோடு சிரித்துப் பற்களைக் கடித்தபடி தனக்கு அடித்து உதைத்து நொறுக்கிய இராணுவ வீரன் இராட்சதன் போல் சிரிமெவன் முன் தோன்றினான். அவன் தோற்றத்திலும் வயதிலும் மட்டுமல்ல, சுபாவத்திலும் கூடத் தன்னையொத்த இளைஞனென்பதை அவன் கவனித்தான். அவனிடம் அடிவேண்டுவது தனது சுயகௌரவத்திற்கு இழுக்கென்று சிரிமெவன் நினைத்தான்.

விழுந்த அடிகளைக் கோபத்தோடு ஏற்றுக் கொண்டு, இராணுவ வீரனைத் திட்டித் தீர்த்தான் சிரிமெவன். அதற்குப் பதிலாக ஏழெட்டுப் பொல்லடியும் காலுதையும் அவனுக்குக் கிட்டின. சிரிமெவனுக்கு வலிக்கவில்லை. முழுச் சர்வாங்கமும் போலவே அவனது சிந்தனையும்

விறைத்துப் போயிருந்தது. சிரிமெவன் கோபத்தோடு இராணுவ வீரனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முகாமிலிருந்த உயர் அதிகாரியொருவர் அந்த அறைக்கு வேகமாக வந்தார்.

''அவனுக்கு அடித்து ஒன்றும் நடக்கப் போவதில்லை கோப்ரல். எவ்வளவு அடித்தாலும் இந்தக் கோதாரி உண்மையைச் சொல்வதில்லை. நவகத்தேகம சந்தியில் எங்களது ஜீப்புக்கு இன்று குண்டு வைத்துள்ளார்கள். விகிதவும், கபிலவும் அவ்விடத்தே சரி. இவங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். இவனையும் இன்னும் நாலைந்தையும் கொண்டு போக ஏற்பாடு பண்ணும்''

இராணுவ அதிகாரி அவ்வாறு சொல்லிச் சென்றவுடன் சிரிமெவனின் பக்கமாக வந்த வீரன் அவனுக்கு மீண்டும் காலால் ஒரு குத்துவிட்டான்.

''தயாராக நில்லடா...... நிலவிலே பயணம் போக......''

சிரிமெவன் இராணுவ வீரனைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது முகத்திலே கோபச் சிரிப்பைக் கண்ணுற்று மறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

சிரிமெவன் பயப்படுவதற்கு நடக்கக் கூடாத வேறெதுவும் எஞ்சியிருக்க வில்லை. அதற்கிடையில் அவனது இளைய தங்கைமார், தம்பிமார், அம்மா, அப்பா எல்லோரும் ஞாபகத்துக்கு வந்தனர். அவர்களது மனதிலே நெருப்பெடுத்து ஓலமிட்டுத் தன்னைத் தேடிக் கொண்டிருக்க வேண்டும். அவர்களது விதி என்னவாக அமையுமோ?

கையால் காலால் மற்றும் தடியால் அடித்து நொறுக்கி, கைகால்களைக் கட்டிப் போட்ட இராணுவ வீரன் தான் சம்பந்தமாக எடுக்கும் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர, தனக்காகப் பேசுவதற்கு எதுவும் எஞ்சியிருக்கவில்லையென சிரிமெவனுக்கு விளங்கியது.

தனது தம்பி தங்கையர்களதும் வாடிப் போய்விட்ட பெற்றோர்களதும் எதிர்காலத்தைத் திட்டமிடக் கூடிய, சமூக முறைமையை நிர்மாணிக்

கின்ற முயற்சியில் பங்காளியாகிப் பயணம் செய்ததற்கு இவ்வளவு குரூரமான, வதைமிகு அனுபவங்கள் கிடைக்குமென்று சிரிமெவன் ஒருபோது சிந்தித்ததில்லை. அவ்வாறு யோசித்ததற்காக வாழ்க்கையே நட்டஈடாக வழங்குமாறு இப்போது தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

அந்த முடிவை ஏற்றுக் கொள்வது தொடர்பில் எழக்கூடிய பயங்கர எண்ண ஓட்டங்களோடு சிரிமெவன் இருட்டறைக்குள் சுருண்டு போய்க் கிடந்தான்.

சிறிது நேரத்தில் அவனை இழுத்துச் சென்று ஜீப் வண்டிக்குள் தள்ளியது அவனுக்கு ஞாபகம். இன்னும் சிலரின் உடல் மேல் அவன் போய் விழுந்தான். தன்னைப் போன்றே அவர்களும் குற்றுயிராக்கப்பட்டுக் கைகால் கட்டப்பட்டிருந்தனர். சிலர் முனகிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலரின் உடல் குளிர்ந்து விறைத்துப் போயிருந்தது. ஜீப் வண்டியில் நிறைக்கப்பட்ட டயர்களிலொன்று சிரிமெவனின் இடுப்பில் வந்து விழுந்தது. அவனுக்குப் புதிதாக எந்த வேதனையும் ஏற்படவில்லை.

ஜீப் கோபத்தோடு விரைந்தது. அதனுள்ளிருந்த இராணுவ வீரன் உயரதிகாரியிடம் ஏதோ சொல்வது கேட்டது. அது சிரிமெவனுக்கு அடித்த வீரன்தான்.

''ஸேர் வேக்கந்ததை மேடுதான் இவங்களப் போடுவதற்குப் பொருத் தமான இடம். காலையில் ஊர்ச்சனங்களெல்லாம் வெளியே செல்வது அவ்விடத்தால் தான்''

சற்று நேரத்தில் ஜீப் வேக்கதந்தைக்கு வந்து சேர்ந்தது. அதன் விளக்கு கள் அணைக்கப்பட்டன. எஞ்சின் நிறுத்தப்பட்டது.

சிரிமெவன் உட்பட நாலைந்து பேரும் வேக்கந்தையில் குவிக்கப்பட்ட னர். உடல்களுக்கிடையே டயர்களும் சொருகப்பட்டன.

''ஸேர் இவங்களுக்காகத் தோட்டாக்களை வீணாக்கத் தேவை யில்லை. ஒருவனுக்காவது எழுந்து நிற்க முடியாது''

"சரி.... சரி.... அந்தப் பெற்றோலை ஊற்று. தீக்குச்சொன்று அடித்து விட்டு வாரும்"

இராணுவ வீரன் பெற்றோல் பேணியை ரயர்கள் மீது பரவுமாறு ஊற்றினான். பெற்றோல் உடலில் பட்டபோது சிறிமெவனுக்குக் குளிராகவிருந்தது. கண்களை மூடியபடி பற்களைக் கடித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் சென்றது. இராணுவ வீரன் பொக்கற்றில் கையை வைத்தபடி அங்குமிங்குமாக அலைந்தான்.

"அவசரப்படுத்தும்"

"ஸேர் தீப்பெட்டியை மறந்திட்டன். லைட்டர் இல்லையா ஸேர்?"

"எதுக்காக வந்தீர்? இங்கு என்ன கொண்டு வந்தாய்?"

"ஸொரி ஸேர். நான் ஓடிப் போய்த் தீப்பெட்டியை எடுத்திட்டு வாரன்"

"அதுவரையில் நான் இங்க தனிய இருக்கிறதோ?"

சற்று நேரம் திட்டித் தீர்த்த மேலதிகாரி ஜீப்பில் ஏறினார். இராணு வீரனும் ஏறினான். அது அமைதியாக வேக்கந்தை வீதியில் மீண்டும் பயணித்தது.

சிறிமெவன் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான். தனது உடலின் மீது இரண்டு டயர்கள் புரண்டு கிடந்தன.

அவனை வாழ வைப்பதற்காகவா இந்தப் புதிய வாய்ப்பு? ஒரு வித உயிரோட்டம் வெளிப்பட்டது. அவன் முழு முயற்சியையும் மேற் கொண்டு பின்பக்கமாகப் புரண்டான். ஒரு டயலிரிந்து உடலை விடுவித்துக் கொள்ள முடிந்தது. அங்கு காணப்பட்ட கட்டில் கால்களை ஊன்றி, கடும் முயற்சி செய்து மீண்டும் சற்றுப் பின்னோக்கி நகர்ந்தான். இரண்டு தடவை அவ்வாறு செய்ததைத் தொடர்ந்து அவனது உடல் டயரின் தலைவிதியிலிருந்து தப்பிக் கொண்டது. அவன் கண்களைத் திறந்து பார்த்தான். பாதிச் சந்திரன் மெல்ல எழுந்திருந்தது. தூரத்தே கேட்ட நாய்களின் ஊளையிடல் மற்றும் காட்டு விலங்குகளின் கத்தல்களையும் தவிர்த்தால், சுற்றாடல் நிசப்தமாகக் கிடந்தது. தனக்கு சில அடிகளுக்கப்பால்

வேக்கந்ததைப் பள்ளம் காணப்பட்டது. மறுப்பக்கம் குளமாக இருக்க வேண்டும்.

சிரிமெவன் முயற்சியெடுத்து அந்தப் பக்கமாகப் புரள எத்தனித்தான். பள்ளத்துக்குத் தள்ளப்பட்ட அவன் மரக்குற்றி போல் உருண்டு சென்றான். பின்பக்கமாகக் கைகள் கட்டப்பட்டிருந்ததால் அவனது உடல் எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை.

மரண பயத்தால் கோபமுற்று, வாழ்வின் மீதான ஆசையினால் பைத்தியமாகி நின்ற சிரிமெவன் தான் உருண்டு வந்து நின்ற இடத்திலிருந்து மீண்டும் தலையைத் திருப்பிய போது, திரும்பிய பக்கமாக உருளத் தொடங்கினான்.

ஜீப் வண்டியின் வெளிச்சத்தையும், சத்தத்தையும் வேக்கந்தைப் பக்கமாக விழுந்த சிரிமெவன் கண்டான். அவன் மீண்டும் மீண்டும் முயற்சித்து நகர்ந்தான். உடம்புகளைக் குவித்திருந்த பக்கமாக ஜீப்பின் வெளிச்சம் அணைந்து எஞ்சின் ஓய்ந்தது. இராணுவ வீரன் வந்து வெளிச்சம் பாய்ச்சி உடல்களைப் பரிசீலித்தான். அதன் பின்னர் அவன் வண்டியில் அமர்ந்திருந்த அதிகாரியிடம் ஓடினான்.

''ஸேர் ஒருத்தன் இல்லை''

அதிகாரி படாரென்று கீழே பாய்ந்தார்.

''உமது தவறால் தானே இது நடந்தது? அவனுக்குப் பதிலாக உம்மைப் போட வேண்டும். பார்த்துப் பார்த்திருக்காமல் சீக்கிரமாகத் தேடு அவனை''

இராணுவ வீரன் டோர்ச் லைட்டை அங்குமிங்கும் பாய்ச்சிக் காணாமல் போனவனைத் தேடினான். இதுவரையில் சற்றே தூரத்துக்கு உருண்டு போயிருந்த சிரிமெவன் சிறிய காடொன்றுக்குள் தள்ளப்பட்டு அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நிலம் நெடுக உருண்டதனால் ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் சொட்டுவது அவனுக்கு விளங்கியது. அந்த இடங்களில் மண், கல், கம்புத் துண்டுகள் குத்தப்பட்டு வலித்தது. இருந்தும் ஒரு சிறு முனகலேனும் வெளிப்படாதவாறு சிரிமெவன் கவனமாகவிருந்தான்.

இராணுவ வீரன் அதிகாரிக்குப் பயந்து நான்கு பக்கமாவும் ஓடிக் காணாமல் போனவனைத் தேடினான். அவனது டோர்ச் நாலா பக்கமும் சுழன்ற போதும் தேடிக் கொள்ளத்தான் இயலவில்லை.

"இங்கே வாரும். விடியும் வரை தேடப் போறியா? இனி இவங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டுப் போவோம்" அதிகாரி வேக்கந்தை மேட்டிலிருந்து கொண்டு குமுறினான்.

அதனையேற்ற இராணுவ வீரன் மனித உடல்களுக்கு நெருப்பு மூட்டிப் பயத்துடன் அப்பக்கமாகப் பார்த்திருந்தான். ஜீப் வண்டி சற்று நேரத்தில் சென்று மறைந்தது.

பெற்றோலுக்குப் பற்றிய தீ டயர்களுக்குப் பற்றி அதனால் சடலங்கள் எரியும் விதத்தைக் காட்டுப் பற்றைக்குள் மறைந்திருந்தபடியிருந்து மெல்லக் கழுத்தை உயர்த்திப் பார்த்தான். பிறபக்கமாகக் கைகள் கட்டப்பட்டிருந்ததால் போலும் அவனது உடலில் எஞ்சியிருந்த சக்தியும் நசுங்கிப் போயிருந்தது.

பெரும் பயங்கர நினைவுச் சாகரத்துக்கு மத்தியில் உயிர் வாழும் புத்தாசையும் எதிர்பார்ப்புக்களும் சிரிமெவனின் உடலுக்கும் உள்ளத்துக்கும் புதிய உயிரோட்டத்தைக் கொண்டு சேர்த்தது.

❖❖❖❖❖❖❖❖❖

சிரிமெவன் தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து சித்திரத்தை வரைவதற்கு மனதை ஒருமைப்படுத்தி முயற்சித்தான். தனக்கு வழங்கப்பட்டுள்ளது தவிர்க்க முடியாத கட்டளையென்பதை நன்கறிவான்.

தெற்கில் அரசியல் குழப்பங்கள் ஓய்ந்து மீண்டும் வடக்கில் யுத்தம் ஆரம்பித்துள்ளது. கடந்து போன வருடங்களில் இராணுவம் தொடர்பாக ஏற்பட்டுள்ள கறுப்புச் சித்திரங்களை வெள்ளையாக்க வேண்டிய அவசிய நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. அடி வேண்டிய நானே அடித்தவர்களைத் தூய்மையாக்கக் கட்டளை பெற்றிருப்பது எவ்வளவு பெரிய பகிடி பாருங்கள்.

தனது மரணத் தருணத்திலிருந்து உயிரைக் காத்துக் கொண்ட இடத்திலிருந்து, நாட்டின் பல்வேறு இடங்களில் முகம் மறைத்து ஒளிந்து கொண்டு, இராணுவச் சீருடையைக் காணும் போது கூட பயத்தால் நடுங்கிய படி கடத்திய காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, வெளியே வர மிக அண்மையில் தான் முடிந்தது.

தனதும் தனக்கிளையோரினதும் பெற்றாரினதும் வாழ்வைத் திட்டமிடும் சமூக அமைப்பு வரும் வரையிலும், அல்லது அதற்காகப் போராடிப் பெறும் வரையிலும், வாழ்வைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் சிரிமெவனுக்கு ஏற்பட்ட போதும், பின்னாளில் முகம் மறைத்துக் கொண்டு வேறு பெயரில் செய்த தொழிலே கைகொடுத்தது.

ஆரம்பத்தில் சினிமாக் கொட்டகையில் போஸ்டர் ஒட்டுபவனாகவும், நேரம் கிடைக்கும் போது போஸ்டர் மற்றும் கட்அவுட் வரைவதற்கு உதவுபவனாகவும் இருந்தான். சின்ன வயதிலிருந்தே அவனுக்குள் மறைந்திருந்த போதும், வளர்த்துக் கொள்ளாத திறமையை வெளிக் கொண்டு வர இது நல்ல வாய்ப்பாக அமைந்தது.

அவ்வாறு செய்து தேடிய சிறுதொகையால் கடந்த காலத்தில் தனது பெற்றோருக்கும் ரகசியமாகக் கொஞ்சம் அனுப்பப் பழகியிருந்தான். தான் வாழ்ந்து கொண்டிருப்பதைப் பெற்றார் தெரிந்து வைத்திருந்தாலும், இதுவரை சிரிமெவன் ஊர்ப் பகுதியின் மண் மிதிக்கப் போகவில்லை.

தாயின் கடும் கெஞ்சுதலால், ஒருமுறை தனது தகப்பன் தாயையும் தம்பி தங்கையரையும் அழைத்துக் கொண்டு அவனைப் பார்க்க வந்திருந்தார்.

அப்போது அவன் சேமித்திருந்த சிறுதொகையால் இந்தப் பெட்டிக் கடையைக் கூலிக்கு எடுத்திருந்தான்.

இராணுவ அதிகாரியினால் தனக்குத் தரப்பட்ட கட்டளை, புதிய எதிர்பார்ப்புகளுடன் கூடிய தனது வாழ்க்கைக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாக சிரிமெவன் யோசித்தான். வீரமிக்க இராணுவ வீரனின் பேருருவத்தை வரைந்து கொடுத்து, தனது எதிர்பார்ப்பை நோக்கிச்

செல்வதில் ஏற்படக் கூடிய இடையூறுகளை தந்திரமாகத் தவிர்த்துக் கொள்வதே இப்போதைக்குச் செய்யக் கூடியதென நினைத்த போதும் அந்தப் பின்னணியில் தூரிகையை முன்னெடுக்க மனதுக்கு வலிமை கிட்டவில்லை.

சிரிமெவன் கதிரையில் சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டு தான் வரைய வேண்டிய புதிய சித்திரத்தின் உருவத்தைக் கற்பனை செய்ய முயன்றான். அப்படியான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனதால் உருவாக்கிய, கம்பீரமான வீரம் மிகுந்த வீரனின் உருவம் மங்கிப் போய்த் தனக்குச் சித்திரவதை செய்த கோபம் நிறைந்த கொலைக்கார வீரனின் முகமே வெளிப்பட்டு நின்றது.

வெனிஸ்டர் பலகையில் வரைய முயற்சித்துத் தோற்றுப் போன உருவத்தை வெண்மையிட்டு அழித்துப் புதிதாக வரைய முனைந்தான் சிரிமெவன்.

❖❖❖❖❖❖❖❖❖

கடந்த தினம் இரவு முழுவதும் அதாவது விடியல் நெருங்கும் வரை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வீரமிகு இராணுவ வீரனை வரைய எத்தனித்தான். இறுதியில் அவன் இராணுவ வீரனின் தலைப் பகுதியை முதல் வரைபாக வரைந்து விட்டு, கழுத்துக்குக் கீழ்ப் பகுதியைத் துவக்கை ஏந்தி நிற்கும் விதமாக வரைந்து முடித்தான்.

தனது சிந்தனையில் ஏற்படக் கூடிய தடங்களை முடிந்தளவு குறைத்துக் கொள்வதற்காகவே, இராணுவ வீரனின் முகத்தை இறுதியாக வரைய வைத்துக் கொண்டனான்.

இன்றைய தினம் காலை வேளைக்குள் முடிக்க வேண்டியிருந்தது. இராணுவ அதிகாரியின் டிஃபென்டர் வாகனம் இன்னும் சிறிது நேரத்தில் அவனது பெட்டிக்கடைக்கு முன்னால் வந்து நிற்கும்.

சிரிமெவன் பண்டார மிகவும் சிரமத்தோடு இராணுவ வீரனின் முகத்தை வரைந்து முடித்தான். அவன் எவ்வளவோ பிரயத்தனப்பட்டுத் தவிர்த்துக் கொள்ள முயன்ற போதிலும், தன்னை டயரில் எரித்துச் சாம்பலாக்க முயன்ற கொலைக்கார வீரனின் முகம் வெளிப்பட்டு நின்றது.

சிரிமெவன் சித்திரத்தை முழுமைப்படுத்திக் குறைபாடுகளைத் தேடி நிவர்த்தி செய்ய அதனையே பார்த்தபடியிருந்தான். சித்திரத்தை உண்மை யான மனிதனின் அளவுக்கு வரைந்திருப்பதால், உயிருள்ள வீரனொருவன் தன்னெதிரே நிற்பது போன்றே அவனுக்குத் தெரிந்தது. அவன் ஒரே பார் வையில் ராணுவ வீரனின் முகத்தைச் சிறிது நேரம் பார்த்திருந்தான். மெல்ல மெல்ல அவனது கண்களில் ஏதோ படிந்து மறைப்பது போல் உணர்ந்தான்.

இராணுவ வீரன் சுயரூபம் மெல்ல அழிந்து, கொலைக்கார வீரனின் முகம் வெளிப்பட ஆரம்பித்தது. இன்னும் சிறிது நேரத்தில் அவன் துவ க்கை ஏந்தி அதைத் தன்பக்கமாக நீட்டியபடி கோபத்தோடு பார்த்துக் கொண் டிருப்பது தெரிந்தது. மேலும் சிறிது நேரத்தில் இராணுவ வீரன் பாய்ந்து தனக்குத் துப்பாக்கியால் அடிக்கக் கூடுமெனக் கருதினான். அல்லது துப் பாக்கி முனையால் குத்தப்பட்டுத் தனது மார்பு துளையாகிவிடுமென்று சிரிமெவன் பயந்தான்.

அவனுக்கு வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. அவனது நெஞ்சுக்குள் எழும் அதிர்ச்சி தனது காதுக்குக் கேட்கும் அளவுக்கு பலமாகி, தொண்டை வற்றிப் போய்விட்டது சிரிமெவனுக்குத் தெரிந்தது.

கொலை வீரன் தன்னைக் கடுங் கோபத்தோடு பார்ப்பதை உணர்ந் தான். தனது சுய பாதுகாப்புக்காக இனி என்ன செய்வது? மீண்டும அந்த எரி நெருப்பை நோக்கி நான் போக வேண்டுமா?

சிரிமெவன் கரடுமுரடான தனது கையை உயர்த்தி அகப்பட்ட மைக்குப்பியால் இராணுவ வீரனுக்கு எறிந்தான். குப்பியிலிருந்த மை இராணுவ வீரனின் உடலெங்கும் படிந்தது. அதன் பிறகுதான் தான் ஆழ்ந்து போயிருந்த கற்பனாவுலகிலிருந்து அவன் விடுபட்டான்.

சிரிமெவனின் வியர்வை வற்றி விட்டது. அவன் அங்குமிங்கும் பார்த்தான். தான் இரவு முழுவதும் விழித்திருந்து வரைந்த வீரமிகு இராணுவ வீரனின் சித்திரம் சிவப்பு மைத் தாக்குதலால் பாதிக்கப்பட்டி ருந்தது. தனக்கு என்ன நடந்ததெனத் தெரிந்து கொள்ள சிரிமெவனால் முடியவில்லை. இருந்தும் தனக்குப் பெரியதொரு பின்னடைவு ஏற்பட்டுள் ளது அவனுக்கு விளங்கியது. இப்பொழுது என்னதான் செய்யலாம்?

இன்னும் சற்று நேரத்தில் ராணுவ அதிகாரியைச் சுமந்தபடி டிஃபெண்டர் வாகனம் தனது பெட்டிக் கடைக்கு முன்னால் நிறுத்தப்படும். அவர்களுக்கு வீரம் நிறைந்த இராணுவ வீரனின் கட்அவுட்டை எப்படிக் கையளிப்பது? கட்டளையை நிறைவேற்றாமைக்கான தண்டனை எதுவாகவிருக்கும்?

சிரிமெவன் அவசரமாகச் செயற்பட்டான். அறையில் தூக்கி வைத்திருந்த சேட்டுக்கள், காற்சட்டைகள், தூரிகை இன்னும் அத்தியாவசியமான பொருட்களையெல்லாம் சேர்த்து பேக் ஒன்றினுள் திணித்துக் கொண்ட அவன் பெட்டிக் கடையிலிருந்து வெளியே பாய்ந்தான். அவன் நோக்கமெதுவுமின்றி ஓடிச் சென்று நூறு மீற்றருக்கு அப்பால் பஸ் தரிப்பிடத்தில் நின்றான். கொழும்பிலிருந்து வேகமாக வந்த பஸ் வண்டி ஒருவரை இறக்குவதற்காக அங்கு நிறுத்தப்பட்டது. சிரிமெவன் பஸ்ஸின் பெயர்ப் பலகையைக் கவனத்திற் கொள்ளவில்லை.

''எங்க போறீங்க....?'' குறுந்தூரத்துக்கு முடியாதென்ற பாங்கில் கண்டக்டர் கத்தினான்.

''இந்த பஸ் எங்கே போகிறது?''

''சரி போவம்''

சிரிமெவன் பஸ்ஸில் தொங்கி உள்ளே புகுந்து கொண்டான். அவன் திடுக்கிட்டபடி பஸ்ஸின் பின்பக்க யன்னல் கண்ணாடிக்கு முகத்தை நெருக்கிப் பார்த்தான்.

இராணுவ அதிகாரியின் டிஃபெண்டர் வாகனம் பஸ்ஸைத் தாண்டிச் சென்று தனது பெட்டிக் கடையருகே நிறுத்துவது சிரிமெவனுக்குத் தெரிந்தது. அவன் சுற்று முற்றும் பார்த்தான்.

பின் வரிசை இருக்கையிலிருந்த பயணிகள் பயந்து போன தனது முகத்தைத் தேவையுடன் பார்ப்பது சிரிமெவனுக்குத் தெரிந்தது. அவன் மனதை இலேசாக்கிக் கொண்டு இரு கைகளாலும் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

# பூங்கா காவலனின் காதல் கனவு

பூங்காவனத்தின் கலாசாரத்தையும் ஒழுக்கத்தையும் பாதுகாக்க காவல்காரனைப் போன்றே உயரமான மரங்களும் கூட காவல் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. தடித்த பட்டைகளைச் சீருடையாகப் போர்த்தியிருக்கும் உயர்ந்த மரங்கள் காதலர்களுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கும் அறிவித்தல் பலகைகளைச் சுமந்தபடி ஆங்காங்கே கவனமாக நின்றன.

காதலுக்குக் கண்ணில்லை. கண்களுக்குத் தெரியும் படியாக அறிவித்தல் காணப்பட்ட போதும் அவர்களால் அதனைப் பார்க்க முடியாதிருப்பது அதனால் தான். காதலர்கள் சோடி சோடியாக மரவேர்களில் அமர்ந்த வண்ணம் காதல் செய்வார்கள். சிரித்துக் கதைப்பார்கள், அரவணைப்பார்கள், உண்பார்கள், ஊட்டுவார்கள், முத்தம் சொரிவார்கள்.

காதலர்களுக்கு காதல் விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு அனுமதியில்லை. பூங்காவில் நடமாடிய படி காதல் செய்ய முடியுமே தவிர, ஒவ்வோரிடங்களில் அமர்ந்தபடியோ நின்றபடியோ காதல் செய்வது சட்ட விரோதமானது. அறிவித்தல் பலகை அவர்களுக்குத் தென்படாதாயின் சட்டத்தை நிறைவேற்றுவது காவலாளியின் கடமையாகும்.

''தயவு செய்து இந்த இடத்தால் போய் விடுங்கள்''- பிரேமதுங்க கட்டளை பிறப்பித்தான்.

பெருமரத்துக்கு மறைந்தபடி அதன் அடிவாரத்தில் காதல் செய்து கொண்டிருந்த யுவதி அவசரமாகத் தனது உதட்டைத் துடைத்துக் கொண்டாள். பொத்தான் அவிழ்ந்த கவுனைச் சரி செய்து கொள்வதற்காக அவள் மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

பிரமேதுங்க உடனே கீழே பார்த்துக் கொண்டான். அவனது சர்வாங்க முமே கூச்சத்தால் துவண்டு போனது.

''என்ன இது மிருக்கத்தனமா நடந்து கொள்றீங்க....? எங்கள துன்பப்படுத்தாம போய்விடுங்க......'' இளைஞன் ஆவேஷப்பட்டான்.

''நாங்கள் எங்கட கடமையச் செய்றோம்''

''பெரிய்ய கடம''

பிரேமதுங்க மெல்ல அந்த இடத்தால் நழுவினான்.

'நீர் பெரும் பாவமான காரியம் செய்திட்டாய்' காதலால் பூரித்துப் போன பிரேமதுங்கவின் மனம் முறையிட்டது. எப்பொழுதுமே அடுத்தவர்களின் காதல் கோலங்களைப் பார்த்துப் பூரித்த மனதிலே பொறாமையுணர்வு தோன்றியிருக்கலாம். தனக்குத் தரப்பட்டிருக்கும் பொறுப்பு மனிதத் தன்மையற்றதென பிரேமதுங்க நினைத்தான். அவனது மனதிலே இரக்கம் சுரந்தது.

'போகட்டும் பொறுப்பு. அவர்கள் காதல் பண்ணட்டும்'- மரவேர்களில் சுருண்டு கொண்டிருக்கும் காதலர்களைக் கள்ளக் கண்களால் பார்த்துவிட்டு அவன் அங்குமிங்குமாக அலைந்தான்.

பூங்காவின் எல்லையில் மகாவலி கங்கை பாய்ந்தோடியது. தார் போட்ட குறுகிய பாதையின் ஓரமாக ஒரு சரிவான பகுதி. அது பற்றைக ளால் மறைந்து காணப்பட்டது. மரத்திற்கு மறைந்து நின்ற சோடியொன்று அந்த இடத்தை நோட்டமிட்டனர். பிரேமதுங்கவும் அந்தப் பக்கமாகத் திரும்பி, பொய் வேலை செய்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சோடி ஆற்றின் வரம்பை நோக்கி கீழே இறங்கினர். அந்த இடத்தில் பூக்கள் இல்லை. கற்கள் இல்லை. பற்றையுண்டு; இருளு முண்டு; பூங்காவின் சட்டம் ஆற்று வரம்புக்கு இல்லையென்று அவர்கள் நினைக்கக் கூடும்.

பிரேமதுங்கவின் மனதினுள்ளே அறிந்து கொள்ளும் ஆவல் உதித்தது. பூங்காவனத்தில் மிக அழகிய காட்சியை ஆற்று வரப்பின் பற்றைக்குள்ளே தான் காணமுடியும். பிரேமதுங்க நோட்டம் பிடித்தபடி விசாலமான மரமொன்றுக்கு மறைந்து வரப்புப் பக்கமாக பார்வையை ஓடவிட்டான்.

மெல்லிய பேச்சுக் கேட்டது. இச்சை மிகுந்த சிரிப்பும் ஒலித்தது; மெல்லத்தான்.

''ஐயோ ரினே எனக்கென்றால் பயம்''- யுவதி முனகினாள்.

காதலுக்கு கண் இல்லையே.

பிரேமதுங்கவின் மனம் கூச்சப்பட்டது. இதயம் படபடவென்று அடித்தது. அவன் பற்றைக் காட்டுப் பக்கமாகத் தவழ்ந்து சென்றான்.

மகாவலியின் நீரலைகள் கற்களில் மோதி மோதி குதித்துப் பாய்ந்தது. பிரேமதுங்கவின் மனதிலும் ஆற்றுநீர் பாய்ந்து பெருக்கெடுத்தோடியது. அவனது சர்வாங்கமும் மயிர்க் கூச்செறிந்தது. புலிபோல் பற்றைக்குள் பாய்ந்து அந்த இளைஞனை ஆற்றுக்குள் உருட்டிவிட நினைத்தான்.

பிரேமதுங்க உடும்பு போல் ஊர்ந்து மேலே வந்தான். பையிலிருந்த பாக்குத் துண்டொன்றை எடுத்து வாயில் போட்டு கடஸ்ஸென்று கடித்தான். வெற்றிலையொன்றைச் சுருட்டி வாயினுள் திணித்தான். சுண்ணாம்பு பக்கற்றை நெரித்து விரலுக்கெடுத்து நக்கினான்.

இன்று முழுநாளும் பிரேமதுங்க டிங்கிரி மெனிகேயைக் காணவே யில்லை. அவளது சுந்தர முகத்தை முத்தமிடும் ஆவல் அவனது மனதிலே நெடுநாட்களாகப் போராடிக் கொண்டிருந்தது. பூஞ்சோலையில் அணைத் துக் கிடக்கும் சோடிகளுக்கு மத்தியில் தானும் டிங்கிரி மனிகேயுடன் மயங்கிக் கிடப்பதாக அவனுக்குத் தோன்றும்.

'காதலினால் மனம் மகிழ்ச்சியுறும்
காதலினால் பெரும் விருப்பமெழும்
பூப்போன்று சுந்தர அழகொளிரும்....'

அங்குமிங்கும் நோட்டம் விட்டபின் மெல்ல அவளது யௌவன மார்பை ஸ்பரிசித்தான்.

''நீங்களில்லாமல் என்னால் இருக்க முடியாது...... நான் உங்களை மிகவும் விரும்புறன்..... நாங்கள் கல்யாணம் செய்து கொள்வோம். இல்லாவிட்டால் ஓடிப் போவோம்''

பிரேமதுங்கவின் மனதில் ஆயிரமாய் காதலுணர்வு பொங்கியெழத் தொடங்கியது.

'டிங்கிரி மனிகேயின் முகத்தைப் பார்த்தபடி மனதில் உதிப்பதையெல்லாம் சொல்ல முடியுமாகவிருந்தால்....'

''பிரேமயா..... உன்ற மயிரெல்லாம் நரைக்குது. அவசரமாக ஏதாவது ஏற்பாடு செய்யென்டா'' ஜயவர்தன சொன்னான்.

அவன் வாயை விரித்துக் கொண்டு ஒரு விதமாகச் சிரித்தான். இரண்டு பிள்ளைகளின் தந்தையான போதும் அவனது பாலியல் உணர்வுகள் தலைக்கு மேலேதான்.

பிரேமதுங்க அன்று செய்த நையாண்டி இன்றும் அவனது மனதைக் கூராயுதமாய்த் துளையிட்டது. அவன் அன்று மாலையே கண்ணாடியின் முன்னமர்ந்து நரைத்த முடிகளைப் பிடுங்கினான். அவை முப்பதுக்கு மேற்பட்ட போது, அவன் விறைத்துத்தான் போனான்.

பிரேமதுங்கவுக்கு காதல் செய்யக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. பல வருடங்களாக ஆயிரக் கணக்கான காதல் சோடிகள் பூங்காவன மரத்தடிகளில் மறைந்து மறைந்து காதல் செய்யும் விதத்தையும் காதல் விளையாட்டுக்களையும் அவன் பார்த்துள்ளான். அவர்களின் கதைகளைக் கள்ளத்தனமாகக் கேட்டுள்ளான். தனக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது காதல் செய்ய அவனுக்கு நன்கு தெரியும்.

பிரேமதுங்க தனது சீருடையைப் பார்த்தான். அது கவர்ச்சியற்றது. இந்த உடைக்கு டிங்கிரி மெனிகே விரும்பப் போவதில்லை. அதுவும் கசங்கிப் போயிருந்தது. இனிக் கோட்டைக் கழுவி மினிக்கிக் கொள்ள வேண்டும். ஆனால் ஜயஸேனவும் விமலரத்னவும் பூங்கா காவலாளிப் பெண்களைத்தான திருமணம் செய்தார்கள். அவர்கள் காதல் செய்ததும் இந்தக் கோட்டை அணிந்தபடி தான்.

முன்பு டிங்கிரி மெனிகேயைத் திருமணம் செய்திருந்த சுமனரத்னவும் இந்தக் கோட்தான் அணிந்திருந்தான். அவன் புற்று நோயால் செத்துப் போனான். அவன் இறந்த பின் பூந்தோட்டத்தில் தற்காலிக சேவகியாக டிங்கிரி மெனிகே இணைந்து கொண்டாள்.

அவள் பூங்காவுக்கு வேலைக்கு வந்ததிலிருந்தே பிரேமரத்ன அவள் மீது கண் வைத்திருந்தான். விதவையானாலும் டிங்கிரி மெனிகே இன்னும் திருமணமாகாத யுவதிகளுக்கு இரண்டாம் பட்சமாகவில்லை. அவளது தோற்றத்தைப் பார்க்கும் போது பிரேமதுங்க முற்று முழுதாகக் கட்டுண்டு போய்விடுவான். அன்று முதலே அடிக்கடி அவன் அவளைச் சுற்றிச் சுற்றி வருவான். இருந்தும் மனதிலிருப்பதைச் சொல்லத் தைரியமில்லை. டிங்கிரி மெனிகேயைக் காணும் போது மனம் ஏதோவாகிவிடும்.

'இன்று சொல்கிறேன்' என்று எண்ணியபடி அவளருகே செல்லும் போது, 'இன்று மாலையில் சொல்வோம்' என்று அவன் நினைத்துக் கொள்வான். மாலையில் நெருங்கும் போது திரும்பவும் நாளைக்கு என்று மனம் சொல்லும். நாளை சென்றால் திரும்பவும் நாளை. பிரேமதுங்கவின் காதலும் பாலகிரி தோஷம் போன்றதுதான். இன்றல்ல, நாளை. நாளை நாளை நாளை. ஒரு வருடமாக அந்த நாளை நாளையே தான். டிங்கிரி மெனிகேயின் வசீகரப் புன்னகையைக் காணும் போது பிரேமதுங்கவின் மனம் இறங்கிவிடும்.

'இன்று எப்படியும் கேட்பேன். விருப்பப்பட்டால் இன்றோ நாளையோ திருமணம் தான்' அவ்வாறு சிந்தித்தபடி பிரேமதுங்க அங்குமிங்கும் அலைவான்.

பிரேமதுங்கவின் கண்கள் பூங்கா முழுவதும் டிங்கிரி மெனிகேயைத் தேடின.

'இன்றைக்கு எப்படியும் இரண்டிலொன்று கேட்பேன். விருப்பப்பட்டால் அடுத்தமாதம் கல்யாணம் கட்டுவேன். இல்லாவிட்டால்........'

பூங்கா முழுவதும் சோடி சோடியாக...... எல்லா மரவேர்களிலும் மலர்கள் பூத்துள்ளன. அந்த எல்லாப் பூக்களிலுமே வண்டுகள். மலரில் மொய்க்காத ஒரேயொரு வண்டு அவன்தான். அவர்களை அந்த இடத்திலிருந்து அகற்றுவது அவனது கடமை. அதற்குப் பரவாயில்லை. காதலர்கள் காதலியர்க்கு அன்பு செலுத்த வேண்டும். அவரவர்களை அணைத்துக் கொள்ளவேண்டும். முத்தமிடவேண்டும். நெருங்கி காதல் கீதம் இசைக்க வேண்டும். நடந்து நடந்து இவற்றைச் செய்ய முடியாது. அதனால் அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

காதலர்களுக்கு பிரேமதுங்க ஒரு பொலிஸ்காரர் போன்றே தெரியும். அவன் மறுபக்கம் பார்த்தபடி மெனிகேயைத் தேடிக் கொண்டு திரிந்தான்.

''டிங்கிரி மெனிகே.........''

இல்லையில்லை. அங்குமில்லை. இங்குமில்லை. எங்கே பார்த்தாலும் டிங்கிரி மெனிகே இல்லை. பிரேமதுங்கவுக்கு தனிமை தெரிந்தது. பூங்காக் காவலர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள விடுதியில் டிங்கிரி மெனிகே இருக்கக் கூடுமென அவன் கருதினான். மெல்ல மெல்ல அந்தப் பக்கமாகச் சென்றான்.

சேவகர்களுக்காக சமர்ஹவுஸ் போன்றதொரு சிறு அறை அமைக்கப் பட்டிருந்தது. மறு பக்கமாகச் சிரிப்புச் சத்தம் கேட்டது. அது ஜயவர்தனவின் மாயச் சிரிப்பு. பிரேமதுங்க மெல்ல நெருங்கினான். மெல்ல கலகலவென்ற சிரிப்பும் கேட்டது. அது டிங்கிரி மெனிகேயுடையதல்லவா?

பிரேமதுங்கவின் இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது. படபடப் போடு கூடாரத்தை நெருங்கினான். டிங்கிரி மெனிகே ஜயவர்தனவின் அருகிலிருந்தாள். பிரேமதுங்கவின் உடல் விறைப்படையத் தொடங்கியது.

'கேடு கெட்ட தேவடியாள்'

சில வினாடிகள் பார்த்திருந்த பிரேமதுங்க வெறிநாய் போல் அங்குமிங்கும் ஓடினான். பைத்தியம் போல் சத்தமிடத் தொடங்கினான்.

''மரங்களுக்குக் கீழ இங்க யாரும் நிக்கிறதில்ல. காதல் பண்ண வேண்டுமென்றா நேரே சமர் ஹவுஸுக்குப் போங்க. இங்க யாருக்கும் கூத்தாட இடமில்லை''

மரங்களுக்கு கீழ் காதல் செய்து கொண்டிருந்த சோடிகள் பைத்தியம் பிடித்த புலியைக் கண்டது போல் பிரமித்துப் போனார்கள். பிரேமதுங்க இன்னுமின்னும் சித்தம் கலங்கியவனாகச் சத்தமிட்டபடி பூங்காவெங்கும் அலைந்தான்.

காதலர்கள் பிரிந்து நாதியற்றவர்களாக அங்குமிங்குமாக நழுவத் தொடங்கினர். அவர்களது காதலிகள் உதவியற்ற நிலையில் அடுத்தவர்கள் காணாமல் மறைந்து செல்ல முயற்சித்தனர்.

பிரேமதுங்க தொடர்ந்தும் சத்தமிட்டான்.

''போங்க போங்க இங்க காதல் பண்ண அனுமதியில்லை. தொங்க விட்டுள்ள அறிவித்தல் தெரியலையா?'' பிரேமதுங்க பைத்தியத்தில் சத்தமிட்டான். யாரும் யாரையும் காதலிக்கக் கூடாதென அவன் நினைத்தான்.

# அர்ப்பணிப்பு

காலையில் விழித்த நேரம் முதல் முற்றம் பெருக்கி, சட்டி முட்டிகளை கழுவி, அழுக்கேறிய தனது உடுப்புக்களைத் தோய்த்துக் கொடியில் காயப்போட்ட சோமலதாவுக்கு இப்போது தான் சற்று ஆறுதல். மணிக்கூடு 'டாங் டாங்' அடித்து ஒன்பது மணியை நினைவூட்டியது. தனது உடையை மாற்றித் தலை சீவிக் கொண்ட சோமலதா விறாந்தையில் கிடந்த கதிரைக்குப் பாரமானாள். இன்னும் சொற்பவேளையில் பகலுணவு தயாரித்து வயல் வேலைக்குச் சென்றுள்ள அப்பாவுக்கு கொண்டு போக வேண்டும். தனது தங்கை சுவர்ணலதா வீட்டிலிருந்த போதும் வீட்டு வேலைகளைத் தேடிப் பார்த்துச் செய்வது கிடையாது. சுவர்ணலதா தனது நாளாந்த நேரத்தின் பெரும் பகுதியை வானொலியில் பாட்டுக் கேட்பதிலும் தலை சீவுவதிலும் முன் கதிரையில் அமர்ந்து ஏதாவது பாட்டொன்றை முணுமுணுப்பதிலுமே கடத்துகிவாள்.

கண்ணாடியருகே நின்றபடி பொப்பாடலொன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்த சுவர்ணலதா, வீட்டருகே வந்த சைக்கிள் மணியொலி கேட்டதும் தலை சீவுவதை மறந்துவிட்டு ஒரேயடியாக அந்த இடத்துக்குப் பறந்தாள். 'ரனதுங்கவாக இருக்க வேண்டும்' சோமலதா அனுமானித்தாள். ரணதுங்க சுவர்ணலதாவின் காதலன். வாரம் ஒரு கடிதம் அனுப்பத்

தவறுவதில்லை. ஆனால், சோமலதாவுக்கு எதிர்பாராத விதமாகக் கூட ஒரு கடிதம் வருவதில்லை. கடிதம் அனுப்பக் கூடியளவுக்கு அவளுடன் எவரும் நட்பாக இல்லை. சுவர்ணலதாவைப் போன்று சோமலதாவுக்குக் காதலன் கூட இல்லை.

தங்கைக்கு ரனதுங்கவிடமிருந்து கிடைக்கும் காதல் கடிதங்கள் சின்னஞ் சிறியவையல்ல. அவள் அதனை மணிக் கணக்காக வாசிப்பாள். ஒருமுறை இரண்டு முறையல்ல, சிலவேளைகளில் ஆறேழு தடவை வாசிப்பதையும் சோமலதா பார்த்திருக்கிறாள். அவள், அந்தக் கடிதங் களைச் சிரித்தபடியே வாசிப்பாள். அவ்வேளை விபரிக்க முடியாத சௌந் தரியம் அவளது முகத்தில் பரவும். ரனதுங்க சுவர்ணலதாவுக்கு எழுதும் கடிதங்களில் அப்படி என்ன தான் எழுதியிருப்பான்? சோமலதா எண்ணிப் பார்க்க முயற்சித்தாள்.

‘அழகுத் தேவதையே! உன்னை நான் நெஞ்சாற நேசிக்கிறேன். எப்போதாவது ஒருநாள் நாங்கள் தூரத் தெரியும் அந்த மலையின் உச்சியில் சின்ன அழகு வீடொன்றில் பறவைச் சோடிபோல் வாழ்ந்திருப் போம்’ தான் தரம் பத்தில் படித்துக் கொண்டிருந்த போது, தனது நண்பி நீதாவுக்கு அவளது காதலன் ரத்னசிறி அனுப்பிய கடிதத்தில் இப்படி எழுதி யிருந்தமை சோமலதாவுக்கு ஞாபகம் வந்தது. ரனதுங்க சுவர்ணலதா வுக்கு அனுப்பும் கடிதங்களிலும் இத்தகைய சுவையான மகிழ்ச்சியான விடயங்களே இருக்க வேண்டும்.

சோமலதாவுக்கு பொறாமை மேலிட்டது. அதைவிட தன்னைப் பற்றிய வெறுப்பும் கவலையும் ஏற்பட்டது.

சுவர்ணலதா தனது கைக்குக் கிடைத்த கடிதத்தை பொறுமையற்றவ ளாக விரித்துப் படிக்கும் போது, அவளது முகத்தில் தோன்றும் மாற்றங் களை சோமலதா மிகவும் தேவையுடன் அவதானித்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஒரு புதுமை; அவள் வழமை போல் கடிதத்தைப் பார்த்தடி சிரிக்கவில்லை. முகத்திலே அவ்வளவாக சந்தோஷமும் காணப்பட வில்லை. அதற்குப் பதிலாக ஏதோ பிரச்சினைக்குரிய தன்மை படர்ந்திருந் தது. சுவர்ணலதா வீட்டின் முன்பக்கமாக நின்றபடியே கடிதத்தைப் படித்து முடித்துப் பெருமூச்சு விட்டாள். மற்றைய நாட்களைப் போல் இன்று

அவளது முகம் நன்றாக இல்லை. வேறு நாட்களில் ரனதுங்கவின் கடிதம் கிடைத்ததும் அவள் எவ்வளவு மகிழ்ச்சியோடிருப்பாள். இரண்டு மூன்று தடவை கண்ணாடியருகே சென்று தலைவாரி, முகப்பவுடர் தடவி, சிரித்து, நாணிக்கோணி செய்யும் கூத்துக்கள் எதுவும் இன்றில்லை. கடிதத்தைக் கையில் சுருட்டியபடி முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு நேரே சமையலறைக்குச் சென்றாள் சுவர்ணலதா.

அவள் அம்மாவைத் தேடிக் கொண்டுதான் சென்றிருப்பாள். ஏதோ வொரு பிரச்சினை தலை தூக்கியிருப்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. ரனதுங்க தங்கையை மறந்து விட முயல்கிறானா? உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டுமென்ற தேவை அவளுக்கு ஏற்பட்டது. அவள் மெல்ல எழுந்து சென்று சமையலறைக்கு அருகேயிருந்த கட்டிலில் சாய்ந்து கொண்டாள். அம்மாவும் சுவர்ணலதாவும் மெல்லக் கதைத்துக் கொள்வது சோமலதாவுக்குச் சாடையாகக் கேட்டது. அவள் பொறு மையோடு அதற்குக் காது கொடுத்தாள். இருவரதும் குரல் அவ்வப்போது உயர்ந்து தாழ்வது சோமலதாவுக்குக் கேட்டது.

''சீக்கிரமாகக் கல்யாணத்தை முடிக்கச் சொல்லி ரனேயின் அம்மா நெடுகத் தொல்லை கொடுக்கிறாங்களாம். அடுத்த மாதம் ஆரம்பத்தில் செய்வோமென்று ரனே வேற சொல்றார் அம்மா''

''இந்த வீட்டில் உன்னைவிட மூத்த ஒருத்தி இருக்கிறாவென்று கொஞ்சம் யோசித்துப் பார் பிள்ள. அவளுடைய விஷயத்தை முடிக்காமல் நானெப்படி உனக்கு சரியென்று சொல்ல முடியும்? அக்கா இருக்கும் போது தங்கைக்குச் செய்தால் சனங்கள் என்ன சொல்லுவாங்கள்?''

''இனி அம்மா அக்காவுக்கு கல்யாணம் கட்டச் சொல்லுங்கோவன். இவ்வளவு காலமும் பார்த்திருந்தது போதாதா?''

''நீ சொல்றபடி முடியாது பிள்ள. ம்..... சும்மா கல்யாணம் செய்ய முடியுமே. அவளை விரும்பிற ஒருத்தன் இருக்க வேண்டுமே. வந்து வந்து பார்ப்பவங்களெல்லாம் வடிவு காணாதென்று சொல்றாங்க. எல்லாரும் வெளிப்படையாகப் பாக்கிறாங்களே தவிர, குணநலன்கள் பார்க்கிறாங்களி ல்லயே! அப்படிப் பார்த்தால் சோமலதாவை விட நல்ல ஒருத்தி இந்த

ஊரில் இருக்க முடியுமா? இன்னும் கொஞ்ச நாள் பொறுபிள்ள. இவளது விஷயம் ஒரு முடிவுக்கு வரும் வரையில''

''இனி அம்மா அந்தக் குனபால அக்காவைக் கேட்டுக் கொண்டிருந்த வர்தானே? அவர விரும்பச் சொல்லி அக்காவுக்கு சொலுங்கம்மா''

''அவனப் போல நரகம் பிடித்தவனுக்கு இந்த அப்பாவிப் பிள்ளய கொடுக்க முடியுமா? அதுவும் அவள் விருப்பமில்லாமல்''

''அப்படியென்றா இனிப் பேசாம இருக்கச் சொல்லுங்கோ''

''என்னடீ ஒரு வ்யிற்றில பிறந்த அக்கா அல்லவா அவள்!''

''என்னம்மா அக்கா கல்யாணம் செய்யும் வரையும் தானே நானும் இவ்வளவு காலமா பாத்திருந்தன். இன்னும் எவ்வளவு காலம் இருக்கச் சொல்றீங்கள்? அக்காவுக்கு ஒருவரும் விருப்பமில்லையென்றால் அதற்கு நான் பழியா? அந்தத் திகதிக்கு விருப்பமென்று நான் ரனேக்குச் சொல்லப் போறன்''

''சொல்றத கேட்க முடியாட்டா உனக்கு விருப்பமான கூத்தப் போடு''

அம்மா கோபத்துடன் போய்விட்டமை கேட்டுக் கொண்டிருந்த சோமலதாவுக்கு விளங்கியது. சுவர்ணலதாவும் சமையலறையிலிருந்து வெளிப்பட்டு தனதறைக்குச் செல்கையில், சோமலதா படுத்திருப்பதைக் கண்ணுற்று பெரும் சங்கடத்திற்காளானாள். அவள் சோமலதாவின் முகத்தைக் கோபத்தோடு பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றாள்.

தான் அவர்களின் ரகசியக் கதைக்குக் காது கொடுத்ததன் மூலம் பிழையான ஒரு செயலைச் செய்துவிட்டேனேயென்று அவள் தவித்துப் போனாள். தனக்கு விரோதமாகத் தாயோடு சுவர்ணலதா சதி செய்ததை தான் கேட்டுக் கொண்டிருந்தது தெரிந்ததால் அவள் கூடக் கவலைக் குள்ளானதை சோமலதா அவதானித்தாள்.

சோமலதாவின் கண்ணீரால் தலையணையின் ஒரு பகுதி நனைந்திருந்தது. தான் அழுதிருக்கிறேனென்று அவளுக்கு அப்போதுதான் தெரிந்தது. தனக்கெதிராக அம்மாவுடன் சேர்ந்து என்னதான் சதி செய்தாலும், சுவர்ணலதா தொடர்பாக சோமலதாவின் மனதிலே கோபத்திற்குப் பதிலாக

அனுதாபமே ஏற்பட்டது. அவளுக்குக் கூடத் திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்புத் தன்னால் தான் அற்றுப் போயுள்ளது. தனக்கு விவாக அதிர்ஷ் டம் இல்லாமைக்காக தனது தங்கை நட்டஈடு வழங்க வேண்டுமா என்ன?

இவை எல்லாவற்றுக்குமே தான் அழகற்றவளாக இருப்பதுவே காரணமென்பதை அவள் அறியாமலில்லை. இதற்கு முன் தரகர்கள் கொண்டு பதினைந்துக்கு மேற்பட்ட கல்யாணப் பிரேரணைகளில் ஒன்று கூடச் சரிப்பட்டு வரவில்லை. அதன் பின்னர் பத்திரிகை மூலமாகத் திருமண சேவைப் பக்கத்தில் விளம்பரம் வெளியிட்ட போதும் அதனால் எந்தப் பலனும் கிட்டவில்லை. எல்லோருமே தான் அழகில்லை என்பதால் விரும்பவில்லையென்றே சொன்னார்கள். சிலபேர் சீதனம் போதவில்லை யென்று சொல்லித் தப்பிக் கொண்டார்கள். இருபத்தையாயிரம் சீதனத்தோடு பெண்ணொருத்தியைப் பொறுப்பெடுத்து இந்நாளில் என்ன தான் செய்ய முடியும்? சிலபேர் இச்செய்தியை கேட்டிருந்துவிட்டு அதைக் கொண்டு வந்து தாயின் காதிலே போடுவதை அவள் அவதானித்திருக்காம லில்லை. அந்தப் பணத்தைக் கூட ஒழுங்குபடுத்துவது இலேசான காரிய மாக இருக்கவில்லை. தான் சிரமத்தோடு தென்னோலை பின்னிச் சேர்த்துக் கொண்ட பணத்தோடு இன்னும் சில பொருட்களையும் விற்றே அப்பணம் திரட்டப்பட்டது. வியர்வை சிந்தித் தேடிய அந்தப் பணம் கூட அவளது திருமணத்திற்கு பயனற்றுப் போய்விட்டது.

கடைத் தெருவில் சிறுகடை நடாத்தும் குனபால இரண்டு தடவை சோமலதாவுக்குத் திருமண யோசனை முன்வைத்திருந்தான். ஆனால் அவனைப் பற்றி ஊரவர்கள் சொன்ன கதைகள் அவளை மயிர்க்கூச்செறிய வைத்தது. அப்படிப் பட்ட ஒருவனை விரும்பித் தனது வாழ்க்கை இருளுக்குள் ஆழ்த்திக் கொள்ள சோமலதா விரும்பவில்லை. அவ்வாறானவனைத் திருமணம் செய்ய எப்படி இசைவதென்று அவளுக்கு விளங்கவில்லை.

ரத்ன அக்காவின் வீட்டுக்கு மறுபக்க பங்களாவைச் சேர்ந்த பிராய்டிஸ் தன்னைவிட அழகற்றவள். தன்னைவிடக் கறுப்பானவள். அவளது முன் பற்கள் சற்று வெளித் தள்ளப்பட்டிருந்தன. இருந்தும் அவள் ஒரு டாக்டரைத் திருமணம் செய்துள்ளாள். அவளது திருமணத்தின் போது அவளது பெற்றோர் மணமகனுக்கு ஐந்தரை லட்சம் வழங்கியதை

ஊரவர்களின் கதை மூலம் சோமலதா அறிவாள். அந்தளவு பணம் எனக்குமிருந்தால்.....

எவ்வாறாயினும் இப்பொழுது தனது துரதிர்ஷ்டம் காரணமாக, தனது தங்கை எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதையும் பிறபோட வேண்டி நேர்ந்துள்ளது. தன்னைப் போலன்றி, சுவர்ணலதா அழகானவள். அவளது சுருளான தலைமுடி, கன்னம், உதடுகள், மொட்டு மார்பகம், மெல்லிடை இப்படி எல்லாமே ஆண்களின் மனதை ஈர்க்கும் விதமாகவே அமைந்துள் ளது. தனது தங்கையைப் போல் இப்படி எந்த உறுப்பும் அவளுக்குப் பொருத்தமாக வந்து வாய்க்கவில்லை. உண்மையில் ரனதுங்க போன்ற மனிதருக்கு இப்படி வடிவான யுவதியொருத்தி கிடைப்பது ஒரு வகையில் அதிர்ஷ்டம் தான்.

சுவர்ணலதா சோமலதாவை விட எவ்வளவுதான் அழகாகவிருந்த போதும், ஊரில் எல்லோரிடமும் நல்ல பெயர் கேட்பதென்னவோ சோம லதா தான். தனது பெற்றோர் தன் மீது தான் அதிக அன்பாக உள்ள தையும் அவளறிவாள். அவர்கள் எவ்வளவுதான் தங்கைக்குச் செலவிட்டா லும், அவர்களது முடியாத காலத்தில் பார்க்க இருப்பவள் சோமலதா தான் என்பது அவர்களது நம்பிக்கையாகும். அது அவளிடம் காணப்படும் நல்ல பண்பின் வெற்றிதான்.

சுவர்ணலதாவின் சில நடவடிக்கை காரணமாகப் பலதடவை ஊரவர்கள் அவளுக்கு கதை கட்டினர். சில காலத்திற்கு முன் தபாற் கந்தோரில் வேலை செய்த இளைஞனோடு காதல் கொண்டிருந்தமையும் அவ்வாறான கதைக்குக் காரணமாகியது. ரனதுங்க அவளது ஆறாவது காதலன். பெரிய பிள்ளையாகு முன்பே அவள் காதலிக்க ஆரம்பித்து விட்டாள். அழகு தான் அதற்கு வாசல். சோமலதா அவ்வாறான விடயங்க ளில் ஈடுபடாமைக்கு அவள் அழகாக இல்லை என்பது மாத்திரம் காரண மல்ல, அவள் சிறுவயது முதலே வாழ்வை வித்தியாசமான கோணத்தி லேயே பார்த்து வந்தாள்.

தலையணைக்குள் முகம் புதைத்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித் தாள் சோமலதா. திடீரென்று கட்டிலிலிருந்து எழுந்து கண்ணாடியருகே சென்று தனதுருவத்தைப் பார்க்கத் தொடங்கினாள் அவள். கூடவே தனது தங்கையின் உடலையும் ஒப்பு நோக்கிப் பார்த்தாள். தங்கை முகம் பூரணத்

துவமாகக் காணப்பட்ட அதே வேளை, அவளது முகம் ஒட்டியுலர்ந்திருந்தது. தங்கையைப் போன்று ரோஜா நிறக் கன்னங்கள் அவளுக்கிருக்கவில்லை. தனது உதடுகள் வாடிக் கறுத்திருந்த அதே வேளை, அவளது உதடுகளோ இச்சை தரும் விதமாய்க் குவிந்திருந்தது. இளமையின் கொடையாய் குத்திட்டு நின்ற தங்கையின் மார்பகங்களுக்கு மாற்றாய் அவளுக்கிருந்ததோ சூம்பிப் போன ஒட்டிய மார்பகமே. மெல்லிடையென்று எதுவு மில்லாமல் அவளது உடல் ஒரே சீராகக் காணப்பட்டது. குழந்தை பெற்ற பெண்களைப் போன்று அவளுடல் வாடிப் பொலிவிழந்துள்ளது. எவ்வா றெல்லாம் யோசித்தபடி அவள் தனது சுட்டுவிரலால் கீழுதட்டை தடவிக் கொண்டாள்.

மனம் மென்மேலும் வெறுப்பாலும் வேதனையாலும் நிறைந்து கொண்டு வந்தது. அவள் மீண்டும் கட்டிலில் புரண்டு தலையணையுள் முகம் புதைத்தாள். மன வேதனை அகலும் வரை அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு. இருந்தும் அழுது என்னதான் பயன்? அம்மாவிடம் அனுதாபம் பெறும் வரை காத்திருந்து பிரயோசனமில்லை.

தன் பக்கத்தால் முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பான ஞாபகம் அவளது மனதிலே பிரவகித்தெழுந்தது. செய்திப் பத்திரிகையொன்றில் பிரசுரித்த விளம்பரம் அவளுக்கு நினைவு வந்தது. அது அம்மாவும் தங்கையும் சேர்ந்து செய்த ஏற்பாடாகும். எழுந்து சென்ற சோமலதா புத்தகமொன்றுக்குள் மறைத்து வைத்திருந்த விளம்பரத் துண்டை எடுத்துக் கொண்டு வந்து கட்டிலில் அமர்ந்தாள்.

‘விவசாயக் குலத்தைச் சேர்ந்த பண்புள்ள, அழகிய, சீதனத்துடன் கூடிய முப்பத்திமூன்று வயதுப் பெண்ணுக்குப் பொருத்தமான ஒருவரை பெற்றோர் தேடுகின்றனர். மேலதிக விபரங்கள் முதற் கடிதத்தில் தரப்படும்’

அவள் ஒருமுறை இருமுறையல்ல ஐந்தாவது தடவையாகவும் அதனை வாசித்தாள். அழகிய, சீதனம் போன்ற சொற்கள் மக்களை ஏமாற்ற அவர்களால் பிரயோகிக்கப்பட்டிருந்த போதிலும், உண்மையில் முப்பத்திமூன்று வயதாகியும் திருமணம் செய்து கொள்ள முடியாத துரதிர்ஷ்டத்தைச் சொல்லி அனுதாபம் தேடுவதே அங்கு வெளிப்பட்டிருந்த செய்தியாகும்.

சோமலதா அந்தப் பத்திரிகை விளம்பரத்தைத் துண்டுதுண்டாகக் கிழித்தெறிந்தாள்.

இவை எல்லாமே முழு உலகமுமே தன்னை ஒதுக்கித் தள்ளுவதை யல்லவா வெளிப்படுத்துகிறது? கொஞ்சமாவது தன்னைப் பற்றிய உணர்வு குனபாலவுக்கு மாத்திரமே உண்டு. இருந்தும் அவனொரு குடிகாரன்..... கள்ள வியாபாரி. இதைத் தெரிந்து தெரிந்தும் அவனை விரும்ப முடியுமா? அவள் தலையணைக்குள் முகம் புதைத்துக் கொண்டாள். வீட்டில் எந்த ஊசாட்டமுமில்லை. தங்கை என்றும் போலல்லாது ஒரு பக்கமாக ஒதுங்கி யோசித்துக் கொண்டிருந்தாள். சோமலதா எழுந்து அம்மாவைத் தேடிக் கொண்டு சென்றாள்.

அம்மா வீட்டின் பின்றபுறமாக அமர்ந்து மேலே பார்த்து யோசித்துக் கொண்டிருந்தாள். சோமலதாவும் அவளது அருகே போய் அமர்ந்து கொண்டாள். அம்மா அவளை அனுதாபம் மேலிடப் பார்த்தாள். கதைக்கவில்லை.

''அம்மா....?''

''என்ன....?''

சோமலதா சிறிது நேரம் மௌனமாக நின்றாள்.

''நான் விருப்பமென்று குனபாலவுக்கு சொல்லியனுப்புங்கம்மா''

''என்னடி?''- அம்மா புதுமையாகச் சோமலதாவைப் பார்த்தாள்.

''ஆமம்மா, தங்கைக்கு நல்லது நடக்குமென்றா எனக்கு என்னவானா லும் பரவாயில்லை''

அம்மா ஆழ்ந்த பெரு மூச்சு விட்டபடி, கன்னத்தில் கையூன்றிக் கொண்டாளே தவிர, எதுவும் கதைக்கவில்லை. சொற்ப நேரம் மௌனமாக நின்ற சோமலதா பெரும் நிம்மதியோடு எழுந்தாள். அவள் வந்து கட்டிலில் சாய்ந்து இரு கண்களையும் மூடிக் கொண்டாள். குனபாலவின் பொல்லாத முகம் அவள் மனதைப் பயமூட்டத் தொடங்கியது. வீட்டின் பின்பக்கமிருந்து தாயின் விம்மல் ஒலி அவளது செவிகளை வந்து தாக்கியது.

# தேவாங்குக் குட்டி

சித்தி வயிற்றைத் தடவியபடி பெரும் சத்தமிட ஆரம்பித்தாள். முள்ளந்தண்டு நரம்பு இரண்டாகப் பிளக்கும் படியான வேதனையால் சித்தியின் முதுகு வெடிக்குமாப் போலிருந்தது. வேதனையை அடக்கியாளப் போராடும் உடலிலிருந்து வியர்வை பெருக்கெடுத்தது.

''ஐயோ என்னால் இருக்க முடியாது'' சித்தி மீண்டும் வேதனையால் முறுகத் தொடங்கினாள். அருகே யாரோ இருந்து தலையைத் தடவுவது தெரிந்தது. அது சுந்தரா என்றே சித்தி நினைத்தாள்.

''வேதனையாக இருக்கா சித்தி?''

கூடவே சுந்தரா தென்னை மர அடிவாரத்தில் விழுந்து முனகுவது சித்திக்குத் தெரிந்தது.

சித்தி ஓலமிட்டாள். வெள்ளை நீட்டக்கைச் சேர்ட்டும் வெள்ளைச் சாரனும் அணிவிக்கப்பட்டு கையுறை காலுறையிட்டு சவப் பெட்டியிலிருந்து சுந்தரா அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். சவப் பெட்டியிலிருந்து வெளிப்பட்ட மரண நறுமணம் சித்தியின் மனதில் சோகத்தை ஜனிக்கச் செய்தது.

''ஐயோ என்ற சுந்தரா'' என்றவாறு சித்தி அழுது விழுந்தாள். சித்தியின் முதுகெலும்புக்குள்ளிருந்து வெடித்துக் கிளம்பும் வேதனை திடீரென்று மின்னலடிக்குமாப் போல் உடலெங்கும் பரவிச் சென்றது. மீண்டும் வயிற்றுளைவு மேற்கிளம்பியது. சித்தி சத்தமிட்டாள். ''ஐயோ என்னாலிருக்க முடியாது''

''சித்தி..... சித்தி உங்களுக்கு ரொம்பத்தான் வருத்தமா?'' மீண்டும் சித்தியின் தலையைத் தடவும் அந்தக் கைகள். வேதனையால் துடித்தபடியே கண்களைச் சுழற்றி சூழவரப் பார்த்தாள். அங்கே தலை மாட்டில் அமர்ந்தபடி தலையைத் தடவிக் கொண்டிருந்தாள் சுரங்ஜனா.

''சித்தி...... நான் ஐயாவுக்கு டெலிபோன் செய்தன். இன்னும் ஐந்து நிமிடத்திற்குள் வந்துவிடுவார். நாங்கள் சீக்கிரமாக ஹொஸ்பிடலில் எட்மிட்டாவோம்''

சுரங்ஜனா சித்தியின் வேதனையைத் தனதாகக் கருதிச் செயற்பட்டாள். அவளது வயிற்றைத் தடவினாள். மெல்லிய தோலுடன் கூடிய உப்பி வளைந்த வயிற்றைக் கண்ட போது சுரங்ஜனாவுக்குப் பயமெடுத்தது. கூடவே பொறாமையும் தலை காட்டியது.

மின் விசிறி அவளது கட்டிலுக்குப் பின்னாலிருந்து சித்திக்குக் காற்று வீசியது. விரும்பிய விரும்பிய நேரமெல்லாம் சாப்பிட வாழை, பப்பாசி, அப்பிள், தோடை, ஆனைக்கொய்யா என்று பலவர்க்கங்கள் நிறைந்திருந் தன. நினைத்த மாத்திரத்தில் சாப்பிடக் கூடியதாக பால், தயிர், என்கர், நெஸ்ப்ரே, சஸ்டஜன், மாமைட், சீஸ், பட்டர் வகையறாக்கள் வேறு. சித்திக்கு அரச போகம் தான்.

''எந்த நேரமும் நன்றாகச் சாப்பிடணும் சித்தி. பழங்கள் சாப்பிட்டால் பிள்ளை அழகாகுமாம்.''

பப்பாசி, வாழை, ஆனைக்கொய்யா கலந்து தயாரித்த பழப்பாகைப் பருகுமாறு சுரங்ஜனா கெஞ்சினாள். அதன் பின்னர் அப்பிள் பழமொன்றை சாப்பிடுமாறு வற்புறுத்தினாள்.

சுரங்ஜனா அதிகாலையிலேயே சித்திக்கு அங்கர் பருக்குவாள். பத்து

மணிக்குப் போல் சஸ்டஜன் கலந்த பால் கோப்பையொன்று கொடுப்பாள். பகல் சாப்பாட்டின் பின் ஒரு பேணிப் பசுப்பால். மாலையில் மீண்டும் சஸ்டஜன் கலந்த என்கர். இரவு உணவின் பின் ஒரு கோப்பை ஆனைக் கொய்யாப் பாகு.

''நன்றாகச் சாப்பிட்டால் குடித்தால்தான் ஆரோக்கியமான குழந்தை கிடைக்கும்''- சுரஞ்ஜனா இரு உணவு வேளையின் போதும் சித்திக்கு ஞாபகமூட்டுவாள். ''சித்தி எப்பொழுதும் துப்புரவாக இருக்கணும். ஒவ் வொரு நாளும் குளிக்கணும்''

சுரஞ்ஜனா சித்திக்குக் குளிப்பதற்காக பாத்ரூமில் சவரைப் போட்டுக் கொடுப்பாள். அந்தக் குளியலறை சலவைக் கல் மாளிகை போன்றது. அமிழ்ந்து குளிப்பதற்காகத் தொட்டி வேறாகக் கிடந்தது. கழிப்பறை போச்சி பால் வெள்ளையாய்ப் பளபளத்தது. சுரஞ்ஜனா தொட்டியில் தண்ணீர் நிறைத்து வைத்திருந்தாள்.

''சித்தி இதில் கொஞ்சம் இறங்கி நில்லுங்கள். அப்போ குழந்தைக்கு நல்லது''

குளியலறையைப் பயன்படுத்துவது வீண் விரயம் போலிருந்தது அவளுக்கு.

''சித்தி நெட் இல்லாமல் தூங்க வேணாம். மெலேரியா பிடித்தால் பிள்ளை பலவீனமடைந்து விடும்''

சித்தி தூங்கிய பின் சுரஞ்ஜனா நெட்டைப் பரிசீலனை செய்தாள்.

நாள் முழுவதும் சுரஞ்ஜனா அன்புக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந் தாள். காலை முதல் இரவு வரை குதம் நிரப்புவது போல் சுரஞ்ஜனா சித்தியின் வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தாள். சிலபோது அவளுக்கு மூச்சுத் திணறுவது போலிருக்கும். ராஜ சுகபோகங்களுக்கு எல்லையிரு க்கவில்லை. சுரஞ்ஜனா சித்தியின் வேலைக்காரி போலாகிவிட்டாள். உபசாரங்களால் தடுமாறிப் போய்விட்டாள் சித்தி.

அவளது முதுகுவலி சற்றுக் குறைந்திருந்தது. வயிற்றுப் பொருமலும்

தணிந்திருந்தது. அவள் தனது நிலைப்பாட்டை எடுத்து விபரித்தாள். சுரங்ஜனா அங்குமிங்குமாக ஓடிச் சித்தியை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக நடவடிக்கைகளில் ஈடுபட்டாள்.

பூப்போட்டு போடர் பிடித்த சின்ன கவுன், இடுப்பில் அணிவதற்கான துவாய், பிள்ளையை போர்த்துதவற்கான விரிப்பு, பிள்ளையைத் துடைப்ப தற்கான மென்துணி, சித்திக்கு பெட்ஜெகட் இப்படியெல்லாம் சுரங்ஜனா முன் கூட்டியே ஏற்பாடு செய்து வைத்திருந்தாள். அவள் அவற்றைத் தைத்து, டிடோல் கலந்த நீரில் தோய்த்து மினுக்கித் தயார்படுத்தியிருந்தாள்.

சித்தி ஒன்பது மாதம் வயிற்றில் சுமந்து சகல துன்பங்களையும் தாங்கி பிரசவிக்கும் குழந்தையின் தயாராகுவதே சுரங்ஜனாவின் ஒரே அபிலாசை. சித்தியின் உரிமையான தாய்மையைப் பறிப்பதற்கு சுரங்ஜனா கற்பனை வளர்ப்பதை அவதானிக்கும் போதெல்லாம் அவளுக்குள் கோபமும் வெறுப்பும் கைகோர்த்துக் கொண்டன.

சித்தி மிகக் கவனமாக எழுந்து கட்டிலில் அமர்ந்து கொண்டாள். அவளது மனம் சோகத்தால் நிரம்பியிருந்தது. சுந்தராவின் வேதனை மிகுந்த முகம் தோன்றும் போது அவளுக்கு அழுகைவரும்.

''உங்களிடம் ஒரு சின்ன ரகசியம் சொல்ல வேண்டும்''

''என்னவாம்?''

''எனக்கு இந்த நாட்கள் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கு. காலையில் கொஞ்சம் தலை சுற்றுகிறது. காலையில் குமட்டல் கூட வந்தது. குழந்தை கிடைப்பதற்கோ தெரியல்ல''

''சரி..... எவ்வளவு சந்தோசமான விஷயம்''

சுந்தராவின் முகமாற்றத்தை நோட்டம் பிடித்தாள் சித்தி. அவனது வதனம் எதிர்பார்ப்புக்களால் மதாளித்து நின்றது. அவன் கற்பனா லோகத்தில் சிறகடித்தான்.

''அப்படியென்றால் நான் இன்னும் கொஞ்சம் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியிருக்கும். எமக்குப் பிறக்கும் குழந்தையை என்னைப்

போல் ஒருநாளும் மரமேற வைக்கமாட்டன். நன்றாக உண்ண உடுக்கக் கொடுத்துப் படிப்பிக்க வேண்டும்''

ஒரு நாள் சுந்தரா வேலை செய்யும் கள்ளுச் சீவல பகுதிக்குப் பொறுப்பான பிரான்ஸிஸ் ஓடோடி வந்தான்.

''சித்திக் குட்டி...... சித்திக் குட்டி..... தெரியுமா விஷயம்? சுந்தரா சீவல் கயிற்றால தவறி விழுந்திட்டான்''

சித்தியின் மூளையினுள்ளே பேரிடி விழுந்து வெடித்தது போலிருந்தது. அவள் ஓடிப் போய் சுந்தராவின் உடலைக் கட்டியணைத்துக் கொண்டாள். அவனது முதுகுத் தண்டுடைந்து, தலை கற்பாறையில் மோதி எங்கும் இரத்தக் குளம் போலிருந்தது. அதற்கு முன்பே சுந்தரா பரலோகம் போய்ச் சேர்ந்திருந்தான்.

சுந்தராவின் உயிரற்ற உடல் ஓலைக் குடிசையில் கட்டிலின் மேல் வைக்கப்பட்டிருந்தது. சித்தியின் தொண்டையில் இரத்தச் சுவை தட்டியது. சத்தமிடக் கூட முடியாதளவுக்கு சித்தி களைப்படைந்து போயிருந்தாள். ஏலவே அழுது ஓலமிட்டதனால்.

சித்தி பிரமை பிடித்தவளாக மண்ணிற் புரண்டாள். இருந்தும் சுந்தரா வுக்கு உயிர் வரவேயில்லை. சுந்தராவை நினைக்கும் போது அவளது இத யம் பற்றியெரிந்தது. சுந்தராவின் பரம்பரையை அவள் வயிற்றிலே சுமந்தி ருந்தாள். அது பிறந்த பின்னர் எப்படி வளர்ப்பதென்பது நிச்சயமில்லாதிருந்தது.

சுந்தரா இறந்த பின் தொடர்ந்தும் சித்திக்கு ஹரமானிஸ் முதலாளியின் காவல் குடிசையில் வாழ முடியாது. புதிதாக சீவலுக்கு வருபவனுக்கு அது கொடுக்கப்பட வேண்டும். அந்த வேலைக்கு குனசேன வந்து சேர்ந்தான். திருமணமாகாத அவன் பியதாஸவின் குடிசையில் வாழ்ந்தான். இன்னும் சிலநாட்களில் ஹரமானிஸ் முதலாளி தன்னை வெளியேறுமாறு கட்டளையிடுவார். அப்போது சித்திக்கும் அவளது அம்மா பேபிநோனாவுக் கும் போக்கிடமில்லாமல் அலைவதைத் தவிர, வேறு வழியிருக்கவில்லை.

சுந்தரா இறந்து சில நாட்களின் பின்னர் ஒரு நாள் பியதாஸ சித்தியின் குடிசைக்கு வந்தான். அவள் அமைதியாகச் சாய்ந்திருந்தாள். பிள்ளை

சூல் கொண்டிருந்த ஆரம்ப காலமென்பதால் சித்திக்கு ஒரே விதமாக இருப்பது கஷ்டம். சாப்பாடு சுவைக்கவில்லை, தலை சுற்றல், குமட்டல் போன்ற கஷ்டங்களால் நாள் முழுவதும் அவள் பாயிலே புரண்டு கொண்டிருந்தாள். சித்தியின் வேலை வெட்டிகளை பேபி நோனா தான் செய்து கொண்டிருந்தாள்.

''சுந்தராவுக்கு நடந்த விஷயம் பற்றி எனக்கு மிகுந்த கவலை பேபிமாமி. அவன் மிகவும் நல்லவன். அதே போல நல்ல உழைப்பாளி. சித்திக்குக் குழந்தை கிடைக்கவிருப்பதாகச் சொல்லி மேலும் கஷ்டப்பட்டான். அதிகமாகக் கள்ளிறக்கவும் தென்னம்பூ வெட்டவும் தொடங்கினான். என்னாலென்றால் பொறுக்க முடியவில்லை. சுந்தரா இல்லாமல் சித்தி எப்படி வாழப் போகிறாள்?''

அதுவரையில் தனது மனதுக்குள் மறைத்து வைத்திருந்த ரகசியத்தை பியதாஸவின் முன்னிலையில் பேபி நோனா திறந்துவிட்டாள்.

''ஹரமானிஸ் முதலாளியின் மூத்தமகள் சுரங்ஜனா நோனாவுக்கு பிள்ளை இல்லையாம். சித்திக்குக் கிடைக்கும் பிள்ளையை எடுத்து வளர்க்க நோனா விருப்பமாம். சித்தி விருப்பமென்றா பிள்ளை கிடைக்கும் வரை சுரங்ஜனா நோனாவின் வீட்டிலேயே நிற்க முடியும். பிள்ளை கிடைத்ததும் நோனாவுக்குப் பொறுப்புக் கொடுத்து விட்டு வாரதுதானே. பிள்ளைக்கு ராஜ சுகம் அனுபவிக்கலாம். இல்லாவிட்டால் பிள்ளை பெற்று எதைக் கொடுத்து வளர்க்கப் போறம்? மூன்று வேளை ஒழுங்காகச் சாப்பிட முடியாவிட்டால் இவளுக்கு எப்படிப் பால் சுரக்கப் போகிறது? எனக் கென்றாலும் உடலில் பலமில்லயே? கடைசியில் பால் குடிக் குழந்தை யையும் தூக்கிக் கொண்டு பிச்சையெடுக்க வேண்டிவரும். ம்...... எப்படியும் இவளைச் சம்மதிக்க வைக்க முடியாது. கதைத்தால் ஒப்பாரி வைக்கத் தொடங்கிறாள்''

பேபி நோனா கோபத்தோடு கதையை முடித்தாள். வீட்டினுள்ளே பாயில் சுருண்டபடி சித்தி விம்முவது பியதாஸவுக்குக் கேட்டது.

''சித்தியைப் பற்றி எனக்கு ரொம்பக் கவலை பேபி மாமி. சுந்தரா என்ற நண்பனல்லவா. அதனால நான் தெரியாதது போலிருக்க முடியாது.

பிள்ளையை சுரங்ஜனா நோனாவுக்குக் கொடுத்திட்டு வரமுடியுமென்னா நான் சித்தியை ஏற்றுக் கொள்றன். பிள்ளையோடு பாரமெடுக்கவும் நான் விருப்பம் தான். அப்படிச் செய்தால் அம்மா என்னை விரட்டிவிடுவா''- பியதாஸ பயந்து பயந்து சொல்லிக் கொண்டு சென்றான். சித்தியின் விம்மல் அழுகையாகப் பரிணமித்தது.

''ம்..... இனிக் கண்ணீர் வடிக்கத் தொடங்கிட்டாள்''- பியதாஸ வெளியேறிச் சென்ற பின் பேபி நோனா சொன்னாள்.

''ஐயோ அம்மா சுந்தராவை ஞாபகமூட்ட எனக்குள்ளது வயிற்றிலிருக்கும் இந்தக் குஞ்சுக் குழந்தை மட்டுந்தான். ஏன் அதை வேறு யாருக்கும் கொடுக்கச் சொல்றீங்கள்? நான் என்ன கஷ்டபட்டாவது பிள்ளையை வளர்க்கிறன். பியதாஸவுக்கு வேணுமென்ற பிள்ளையோடு என்னை எடுக்கட்டும்''

''அடி மடச்சியே என்ன உனக்கு ஒன்றும் விளங்கமாட்டேங்குது. அவனுக்கு யார்டயும் பிள்ளையை வளர்க்க, சம்பாதிக்க என்ன பைத்தியமா? அப்படியென்றா நீயே செய்து கொள். தலை போற திக்கில் நான் போறன்''

பேபிநோனாவின் கடுமையான கருத்துக்களையிட்டு சித்திக்கு வெறுப்பும் விரக்தியுமே மேலிட்டது. இருந்தும் பேபிநோனா சொல்வதில் ஓர் உண்மையுமுண்டு.

பியதாஸ இடையிடையே வந்து கெஞ்சுவான். சித்தி கடைசியாக தனது மனநிலையை ஒருநிலைப் படுத்திக் கொண்டாள். யாரிடமிருந்தாலும் சரி பிள்ளை சந்தோசமாக இருந்தால் போதுமென்று முடிவு செய்தாள்.

''சித்தீ...... அதோ ஐயா வந்திட்டார். நாங்கள் ஹொஸ்பிட்டலுக்குப் போவோம். சித்தி ஒன்றும் பயப்பட வேண்டாம். பிரைவட் ஹொஸ்பிடலில் தான் எட்மிட் பண்ணப் போறம்''

சுரங்ஜனா சித்தியைப் பிடித்துக் காரிலேற்றினாள். அவள் கருவின்றித் தாயாகக் கற்பனை வளர்த்தாள். அவள் பிள்ளையொன்று கிடைக்கப் போவதை எதிர்பார்த்து இன்புற்றபடி சித்தியின் வயிற்றைப் பார்த்தாள். சித்தி குழந்தை பெறுவதற்காக மிகுந்த வேதனையோடு தவித்தாள்.

பிள்ளை பிறந்ததும் தாய் என்ற வகையில் சுரங்ஜனாவின் பெயரே பதிவு செய்யப்படப் போகின்றது. அவளுடைய கணவனே தகப்பன்.

''எனது வயிற்றில் பிள்ளை பிறக்காவிட்டாலும் எனக்கும் தாய்ப் பாசமுண்டு சித்தி. நான் உனது குழந்தையை எனது வயிற்றில் பிறந்த பிள்ளை போல் பார்த்துக் கொள்றன்''

சுரங்ஜனா அவ்வாறு சொன்ன போது சித்தி அடிமனதால் அழுது கொண்டாள். எனது வயிற்றில் பிறந்த குழந்தை எவ்வளவுதான் சுகம் அனுபவித் தாலும், அது வேறு எவரையோதான் அம்மாவென்று அழைக்கப் போகிறது. சுந்தரா அவளது கட்டிலருகே வந்து பிள்ளையை இருகைகளாலும் தூக்கி, அந்தப் பச்சிளம் பாலகனை மிகுந்த பாசத்தோடு பார்த்துக் கொண்டிருப்பது போல் சித்திக்குத் தெரிந்தது. அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

''என்ன சித்தி வலிக்குதா?'' சுரங்ஜனா மிகுந்த பிடிப்போடு கேட்டாள். சித்தி எதுவும் சொல்லாமல் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

வைத்தியசாலைக்குள் பிரவேசித்து உடனடியாகவே அவள் பிரசவ அறைக்குள் அனுமதிக்கப்பட்டாள். சுற்றுப் புறத்திலும் வேதனை மிகுந்த முனகல் கேட்டது. ஒரு போது குழந்தையொன்றின் அழுகையுடன் கலந்து ஒரு பெண்ணின் முனகல் கேட்டது. சித்தி கண்களைத் திருப்பிப் பார்த் தாள். கண்கள் பனிப் புகாரால் மறைந்தது போலிருந்தது. பேபி நோனா சித்தியின் கட்டிலின் பின்னால் கன்னத்தில் கையூன்றியபடி நின்றாள்.

தனதுடல் தளர்ந்துவிட்டது போல் சித்திக்கு விளங்கியது. வளைந்தி ருந்த வயிறும், தளர்ந்திருந்த வயிற்றுக்குள் தொய்வடையும் வேதனையும் எழுந்தது. சித்தி முனகினாள்.

''அ.....ம்....மா''

சித்தியின் கண்கள் மீண்டும் மூடின. பேபி நோன பேசிய போதுதான் மீண்டும் அவள் கண்விழித்தாள். சித்தி திரும்பவும் முனகத் தொடங்கினாள். தாதியொருத்தி அருகிலிருந்து சித்தியைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சித்தி கண்களைத் திறந்து எங்கும் பார்த்தாள். தான்

இருப்பது ஐந்து நட்சத்திர வைத்தியசாலையில்! பேபிநோனா இன்னும் தான் கன்னத்தில் கையூன்றி நின்றாள்.

''அ.....ம்....மா'' சித்தி முனகினாள். பேபி நோனா அதே கோணத்தில் தான்.

''என்ற குழந்த எங்கே?''- சித்தி தனது வயிற்றைத் தடவிப் பார்த்தாள்.

''..........''

''அம்மா எங்கே என்ற குஞ்சு?'' சித்தி அழும் சுபாவத்தோடு கேட்டாள்.

''பிள்ள தொட்டிலில் இருக்கு''

பேபி நோனாவின் முகம் வாடிப் போயிருந்தது.

தொட்டிலிலிருந்தெழுந்த பிஞ்சுக் குழந்தையொன்றின் அழுகுரலைக் கேட்டுச் சித்தியின் மனம் பிள்ளைப் பாசத்தால் பூரித்துப் போனது.

''பிள்ளைக்கு பால் கொடுக்க வேண்டுமல்லவா? சித்திக்கு பால் கொடுக்க முடியுமா?''

தாதிப் பெண் சித்தியைக் கருணையோடு கவனித்தாள். சுரங்ஜனா நோனாவின் காசினால் தாதியின் மனிதத் தன்மை வெளிப்பட்டிருந்தது.

குழந்தை அழுதது. அதற்குத் தாயின் அரவணைப்புத் தேவைப்பட்டது. சித்தியின் முன் சுந்தரா தோன்றினான். சுந்தராவுக்குப் பிள்ளை பிறந்துள் ளது. இருந்தும் அது தமக்குச் சொந்தமில்லை. தனது வயிற்றில் பிறக்கும் குழந்தையை சுரங்ஜனாவுக்குக் கொடுக்கச் சித்தி இணங்கியுள்ளாள்.

வைத்தியசாலை அதிர்ந்து விழும் அளவுக்குத் துன்ப துயரம் சித்தியின் மனதில் அடைபட்டிருந்தது. மல்லாந்திருந்த சித்தி ஒரு பக்கமாகத் திரும்பி விம்மத் தொடங்கினாள். ஒவ்வொரு விம்மலும் நெஞ்சறையைக் குத்தி யெடுத்தது. கணப்பொழுதில் விம்மல் அழுகையாகியது.

''சும்மா பொய்க்கு அழாதடி. உன்ற பிள்ளய யாரும் கொண்டு போகேல்ல. சுரங்ஜனா பிள்ளய பார்த்திட்டு, காசும் கட்டிவிட்டு முகத்தைச்

சுருட்டிக் கொண்டு போயிட்டா. உனக்குச் சுகமானதும் பிள்ளையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகச் சொன்னா''

''அ...ம்...மா'' சித்தி முனகினாள்.

''..............''

''சுரங்ஜனா நோனா குழந்தைய வேண்டாமென்று சொன்னாவா?''

''சுரங்ஜனா நோனா நினைத்தது போல் பிள்ளையல்ல பிறந்திருப்பது'' பேபி நோனா கோபத்தோடு சொன்னாள்.

''பிள்ளைக்குப் பசி வந்திருக்கு. நீங்க பிள்ளையை எடுத்து பால் கொடுங்கோ''- தாதி வந்து ஞாபகமூட்டி விட்டுச் சென்றாள்.

சித்தி முனகியபடி கட்டிலில் அமர்ந்து கொண்டாள். தாதி கொண்டு வந்த பிள்ளையை இரு கைகளாலும் வாங்கி அணைத்துக் கொண்ட சித்தி பிள்ளையின் அங்கமங்கமாகக் கவனித்தாள். பிறப்பிலேயே வலது குறைந்த பிள்ளை. ஒரு கை செயலற்றிருந்தது. விகாரமான முகத் தோற்றம்.

சித்தி தன்னையறியாமலேயே சத்தமிட்டாள். தனது ஆத்மாவைப் பிடித்து நெருக்கிய பயம் அவளது சர்வாங்கமும் பரவியது. சித்தி அடிக் குரலால் சத்தமிட்டபடி குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள். என்ன செய்தவதென்று தெரியாமல் திகைத்து நின்றாள் தாதிப்பெண். அவளது அழுகையைத் தடுப்பதற்கு பேபி நோனா முயன்றாள்.

வோர்டில் கட்டில்களிலிருந்து எழுந்த தாய்மார்கள் சித்தியை மிகுந்த அனுதாபத்தோடு பார்த்தபடியிருந்தனர். சிலர் சித்தியை கட்டிலருகே வந்து என்னதான் நடந்துள்ளதென்றறிய முயற்சித்தனர். எவருடைய பார்வையும் கேள்வியும் அவளை ஒன்றும் செய்யவில்லை. அவள் தொடர்ந்தும் அழுது விழுந்தாள். சித்தியின் வித்தியாசமான உணர்வுகளுக்கு நின்று பிடிக்க முடியாத குழந்தை அழத் தொடங்கியது. தொண்டையில் இரத்தச் சுவை தெரியத் தொடங்கிய போது அவளது அழுகை கொஞ்சம் குறைந்தது.

''உங்களுக்குக் குழந்தை கிடைக்க இருக்கும் போது ஏதாவது பிரச்சினை ஏற்பட்டதா சித்தி?'' தாதி அன்போடு கேட்டாள்.

சிதைந்த நிலையில் சுந்தராவின் சடலம் தென்னை மரத்தடிக் கிடங்கொன்றில் விழுந்து கிடந்தது. சித்தி மண்ணில் விழுந்து புரண்டு அழுது ஓலமிட்டாள். சுந்தராவின் முகம் வெடித்து இரத்தம் வழிந்தோடியது.

தாதி சித்தியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சித்தியின் கவலை முனங்கலாகி பரிதாபகரமான அழுகையாகப் பரிணாமமெடுத்தது.

''என்ற பிள்ளயே''- சித்தி அழுகைக்கு மத்தியில் சொன்னாள்.

சித்தி தனது மேலாடையை அகற்றித் தனது பால் நிறைந்த மார்பை பிள்ளையின் வாயருகே வைத்தாள். அப்படியே குனிந்து குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டாள்.

''என்னதான் குறைபாடிருந்தாலும் உன்னை வீசிவிட முடியாது கடவுளே. இனி நீ என்னுடையவன். உலகத்தை விட நீ எனக்குப் பெறுமதியானவன் என் தங்கமே'' பைத்தியம் போல் சத்தமிட்டுச் சொன்ன சித்தி, மீண்டுமொரு முறை பிள்ளையின் நெற்றியில் முத்தமிட்டு நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

''இனி நீ அழாதே சித்தி. என்ன செய்ய? நாங்கள் கொண்டு வந்தது இவ்வளவுதான். நாங்கள் இந்தக் குஞ்சை எப்படியாவது வளர்ப்போம். கூலி வேலை செய்தாவது எவ்வளவென்றாலும் தேடிக் கொள் இன்னும் எனது கைகாலில் உரம் பலம் இருக்கு''

இவ்வளவு காலமும் மனதைக் கல்லாக்கிக் கொண்டிருந்த பேபிநோனா, பிள்ளைப் பாசம் நிரம்பிய மனதோடு அழுது கொண்டிருந்த சித்தியின் பால் ததும்பும் மார்புக் காம்புகளைப் பார்த்தபடி நின்றாள். குழந்தை சித்தியின் மார்பில் முட்டி முட்டி பால் உறிஞ்சத் துடித்தது. சித்தி பிறந்த போது அவளை மார்போடணைத்தபடி பாலூட்டிய காட்சி பேபி நோனாவின் நினைவில் தோன்றியது,

BAWASARANA

SYDNEY MARCUS DIAS



# சிட்னி மார்கஸ் டயஸ்

1987ல் ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியொன்றில் முதற்பரிசு பெற்றதன் மூலம் *சிட்னி மார்கஸ் டயஸ்* இலக்கியப் பிரவேசம் செய்தார்.

இவரது முதல் சிறுகதைத் தொகுதியான *"ஊரடங்குச் சட்டம்"* வடமேல் மாகாண சாகித்திய விருதைப் பெற்றதன் மூலம் பரவலான கவன ஈர்ப்புக்குள்ளார்.

நாவல், நாடகம், பாடல், மொழிபெயர்ப்பு,சிறுகதை, இளைஞர் இலக்கியமென்று பன்முகப் படைப்பாளுமைமிக்க, இவர் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். பல நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

*"தொடரும் உறவுகள்"* தமிழில் வெளிவரும் அதே வேளையில் சிங்களத்தில் இரண்டாம் பதிப்புக் காண்பது குறிப்பிடத்தக்கது.

Digital Art work - Dammika sudath Jayakody

தோதென்ன வெளியீடு
உஸ்வெவ வீதி, ஆனமடுவ.
032-2263446

ISBN - 955 - 8464 - 50 - 3

200/-